பக்கங்கள் : 18+VIII=26

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 20 வள்ளுவர் ஆண்டு 2036 சித்திரை 11 ஞாயிற்றுக்கிழமை (24.04.2005) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் :149

## பிரிட்டிஷ் பிரதமர் அலுவலகம் முன் ஈழத்தமிழர்கள் இன்று ஆர்ப்பாட்டம்

லண்டன்.ஏப்.24

பிரிட்டனில் தஞ்சக் கோரிக்கை நிராகரிக்கப்பட்ட அகதிகளின் நியாயமான கோரிக்கைகளை முன்வைத்து இன்று ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்று நடத்தப்படவிருக்கின்றது.

டவுனிங் வீதியில் அமைந்துள்ள பிரிட்டிஷ் பிரதமரின் அலுவலகத்துக்கு முன்பாக இந்த ஆர்ப்பாட்டம் இடம்பெறும்.

தஞ்சம் கோரியுள்ள தமிழர்களின் நடவடிக்கைக் குழு (Action Group of Tamil Asylum Seekers) (AGTAS) இந்த ஆர்ப்பாட்டத்துக்கான ஏற்பாடுகளைச் செய்திருக்கின்றது.

★ இலங்கையை பாதுகாப்பான நாடுகள் பட்டியலில் இருந்து (White Country List) நீக்குதல் -

★ தமிழ் அகதிகளின் கட்டாய நாடுகடத்தலை நிறுத்துதல்-

★ அரசியல் தஞ்சம் நிராகரிக்கப்பட்டவர்களுக்கான வேலை செய்யும் அனுமதியை உறுதிப்படுத்துதல் -

★ சுனாமியால் பாதிக்கப்பட்ட வடக்கு - கிழக்கு மக்களுக்கு சர்வதேச உதவி கிடைப்பதை உறுதிசெய்தல் -

ஆகிய கோரிக்கைகளை முன்வைத்து இந்த ஆர்ப்பாட்டப் பேரணி நடத்தப்படுகிறது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் பிரிட்டனில் வாழும் சகல ஈழத் தமிழர்களும் பங்குகொள்ளவேண்டும் என்று தஞ்சம் கோரியுள்ள தமிழர்களின் நடவடிக்கைக் குழு கேட்டிருக்கிறது. (ஐ)

## யாழ். மருத்துவ பீடத்துக்கு 31 சிங்கள மாணவர்கள்

யாழ்ப்பாணம்,ஏப்.24

யாழ். பல்கலைக்கழக மருத்துவபீடத்துக்கு 31 சிங்கள மாணவர்களுக்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அனுமதி வழங்கி இருக்கிறது.

2001 ஆம் ஆண்டு நடந்த ஜி.சீ.ஈ. உயர்தரப்பரீட்சையில் தோற்றிய மாணவர்கள் சிலர் தமக்கு மருத்துவபீடத்துக்கு அனுமதி பெறுவதற்குத் தகுதியிருந்தும் புறக்கணிக்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவித்து மேன்முறையீட்டு நீதிமன்றில் வழக்குத் தொடர்ந்திருந்தனர். இந்த வழக்கை விசாரித்த நீதிமன்றம் பிரஸ்தாப மாணவர்களுக்கு மருத்துவபீடத்துக்கு அனுமதி வழங்கும்படி பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவுக்கு உத்தரவிட்டிருந்தது.

இந்த உத்தரவின்படி பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு 34 மாணவர்களை யாழ். பல்கலைக்கழக (16ஆம் பக்கம் பார்க்க)

# அவசரமாக நாடு திரும்புகிறார் ஜனாதிபதி

# ஜே.வி.பியுடன் நாளை முக்கிய பேச்சு!

## மேல் மாகாண சபையில் ஆளும் தரப்பை வீழ்த்திவிட ஆயத்தமாகிறது ஜே.வி.பி.

கொழும்பு,ஏப்ரல்24

**பொதுக்கட்டமைப்பு விடயத்தில் புலிகளுடன் அரசு இணக்கத்துக்கு வருவதைத் தடுக்கும் விதத்தில் அரசுத் தலைமைக்கும் ஜனாதிபதிக்கும் அதிர்ச்சி வைத்தியம் செய்வதற்கு ஜே.வி.பி. தயாராகி வருவதாகத் தகவல்கள் வெளியாகி இருக்கும் நிலையில், ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தனது விடுமுறையைப் பாதியில் முடித்துக்கொண்டு லண்டனில் இருந்து இன்று அவசரமாக நாடு திரும்புகின்றார்.**

**நாடு திரும்பிய கையோடு அவர் தனது அரசின் பங்காளிக் கட்சியான ஜே.வி.பியின் தலைவர்களுடன் நாளை முக்கிய கூட்டம் ஒன்றை நடத்தவுள்ளார் என்று ஆளுங்கட்சி வட்டாரங்கள் தெரிவித்திருக்கின்றன.**

புத்தாண்டை அடுத்து விடுமுறையைக் கழிப்பதற்காக லண்டன் சென்றிருக்கும் ஜனாதிபதி குமாரதுங்க அடுத்தமாதம் முதல்வாரத்திலேயே நாடு திரும்புவார் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. எனினும், பங்காளிக் கட்சியான ஜே.வி.பி. அரசின் கழுத்தை நெரிக்கும் வகையில் காய்நகர்த்தல்களைத் தீவிரமாக்கியிருப்பதை அடுத்து அவர் தனது விடுமுறையை இடையிலேயே முடித்துக்கொண்டு அவசர அவசரமாக நாடு திரும்புகின்றார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஆழிப்பேரலை அனர்த்த மீள்கட்டுமானத்துக்கான பொதுக்கட்டமைப்பு விடயத்தில் புலிகளுடன் அரசு இணக்கத்துக்கு வரும் கட்டம் எட்டிவிட்டதாகத் தெரிவித்துள்ள ஜே.வி.பி., அதனைத் தடுப்பதற்கான முயற்சியாக அரசுத் தலைமைக்கும் ஜனாதிபதிக்கும் அதிர்ச்சியைக் கொடுக்கக் கூடிய முக்கிய முடிவுகளை எடுக்கத் தயாராகிவருகின்றது.

மக்கள் ஐக்கிய சுதந்திரக் கூட்டமைப்பின் கட்டுப்பாட்டில் உள்ள மேல்மாகாண சபையில் (16ஆம் பக்கம் பார்க்க)

**உள்ளே சூரியகாந்தியில்**

- துணைப்படைகளுக்குள் பிளவு: நிழல் யுத்தத்துக்குப் பின்னடைவு!
- அன்று: 50 வருடங்கள் பின்னோக்கிச் சிந்தித்திருந்தால்...
- வாழ்வுக்கான போராட்டங்கள்...
- விபத்துக்குப் பின்னர் வாகனம் எரிப்பு! தடுப்பது சமூகத்தின் பொறுப்பு!
- 1978 இல் புயலின் கோரத்தை கண்டு அனுபவித்த மட்டக்களப்பு...
- சின்னத்திரை சீரியலில் முத்திரை பதிக்கும் யாழ்ப்பாணத்து அபிராமி...

இவற்றுடன் -

★ சிறுவர்களுக்கான 'சிறுவர் பொழில்'...
★ கவிதைகள்....
★ நினைக்க... சிரிக்க... சிந்திக்க...

## மினிபஸ்களின் போட்டா போட்டி வயோதிபரின் உயிரைப் பறித்தது!

### மாலு சந்தியில் நேற்று நடந்த விபத்து

நெல்லியடி மாலுசந்தியில் நேற்று பிற்பகல் 1.45 மணியளவில் இடம்பெற்ற மினிபஸ் - சைக்கிள் விபத்தில் வயோதிபர் ஒருவர் அந்த இடத்திலேயே உயிரிழந்தார்.

சைக்கிளில் சென்ற சுப்பிரமணியம் இராஜதுரை (வயது70) என்பவரே இச்சம்பவத்தில் உயிரிழந்தார். இவர் அல்வாய் வடக்கைச் சேர்ந்தவர்.

வழமையான சேவையில் ஈடுபட்டிருந்த மினிபஸ் ஒன்றும் விசேட சேவையில் ஈடுபட்ட மினிபஸ்ஸும் போட்டா போட்டியுடன் முந்திக் கொள்வதற்கு முயன்ற சமயம் சைக்கிளில் சென்றவர் மோதுண்டார் என்று கூறப்படுகிறது.

சம்பவத்தை அடுத்து இரு மினிபஸ்களினதும் சாரதிகள் பஸ்களை நிறுத்திவிட்டு இறங்கித் தப்பிவிட்டனர்.

காயமடைந்த வயோதிபர் குருதி வெளியேறிய நிலையில் அந்த இடத்திலேயே கிடந்துள்ளார். அவரை உடனடியாக ஆஸ்பத்திரிக்கு எடுத்துச்செல்ல எவரும் முயற்சிக்கவில்லை என்று கூறப்படுகிறது. விபத்து நடந்த இடத்தில் கூடிய இளைஞர்கள் சிலர் பஸ்ஸை சேதப்படுத்த முயன்றனர். எனினும் பொது அமைப்புப் பிரதிநிதிகள் எடுத்த நடவடிக்கையால் அது தடுக்கப்பட்டது.

சம்பவ இடத்துக்கு வந்த பொலீஸார் சடலத்தை மீட்டெடுத்து பருத்தித்துறை ஆஸ்பத்திரியில் சேர்த்தனர். சம்பந்தப்பட்ட இரண்டு மினிபஸ்களும் பொலீஸாரால் எடுத்துச்செல்லப்பட்டன. (ஐ-3)

## தெற்கில் எண்ணெய்க் குதங்கள் சீன அரசுக்கு குத்தகைக்கு!

### இதனால் இந்தியா அதிருப்தி நிலை

கொழும்பு.ஏப்.24

அம்பாந்தோட்டை துறைமுகப் பகுதியில் அமைந்துள்ள எண்ணெய்த்தாங்கிகள் சீன அரசுக்கு குத்தகைக்கு வழங்கப்படவுள்ளன. இதற்கான உடன்படிக்கை ஒன்றில் கைச்சாத்திட சீன - இலங்கை அரசுகள் இணக்கம் கண்டுள்ளன.

அம்பாந்தோட்டையில் உள்ள எரிபொருள் தாங்கிகளைப் புனரமைத்து அவற்றில் எரிபொருளை நிரப்பி இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் செல்லும் கப்பல்களுக்கு எரிபொருளை நிரப்பும் திட்டத்தை சீன அரசு நடைமுறைப்படுத்தவுள்ளது. சீன அரசின் இந்தத் திட்டம் இந்தியத் தரப்புக்கு அதிருப்தியை ஏற்படுத்தியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சீனாவின் இந்த நடவடிக்கையால் இந்தியாவுக்குப் பொருளாதார ரீதியான இழப்புகள் ஏற்படும் என்று இந்தியப் பொருளாதார நிபுணர்களால் சுட்டிக்காட்டப்பட்டிருப்பதை அடுத்து, இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான நட்புறவு பாதிப்படையும் வாய்ப்பு உருவாகி இருப்பதாக ராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்தன.

திருகோணமலையில் உள்ள எண்ணெய்க் (16ஆம் பக்கம் பார்க்க)

### கல்கிசையில் காணாமற்போன

## புலனாய்வு அதிகாரியைத் தேடிக் கண்டுபிடிக்க இன்ரபோலின் உதவி

கொழும்பு.ஏப்.24

கடந்த 20ஆம் திகதி முதல் காணாமற்போன கல்கிசை பொலீஸ் பிரிவின் புலனாய்வுத்துறை இரண்டாவதுநிலை அதிகாரியான இன்ஸ்பெக்டர் ஜெயரட்ணத்தைக் கண்டுபிடிக்க இன்ரபோலின் உதவி நாடப்பட்டுள்ளது.

பொலீஸ் மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ இத்தகவலைத் தெரிவித்தார்.

ஜெயரட்ணத்தை தேடிக் கண்டுபிடிக்கும் பணியில் உள்ளூர் மற்றும் சர்வதேச புலனாய்வுப் பிரிவினர் ஈடுபட்டுள்ளனர் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

கடந்த 20ஆம் திகதி கல்கிசையில் உள்ள விடுதி ஒன்றில் இரவு விருந்தில் கலந்துகொண்டபின் நெருங்கிய நண்பர்கள் சிலருடன் வாகனம் ஒன்றில் அவர் புறப்பட்டார் என்றும்-

அதன் பின்னர் அவர் வீடு திரும்பவில்லை என்றும் - கூறப்படுகின்றது. (ஐ-3)

## இந்தியாவுக்கு பெற்றோலிய பங்குகளை விற்பனை செய்யும் திட்டம் கைவிடப்பட்டது

கொழும்பு.ஏப்.24

இலங்கைப் பெற்றோலியம் கூட்டுத் தாபனத்தின் பங்குகளை இந்தியாவில் உள்ள பாரத் பெற்றோலியம் நிறுவனத்துக்கு விற்பனை செய்யும் திட்டத்தை அரசு கைவிட்டுள்ளது என அறியவந்தது.

இந்த விடயத்தை ஜே.வி.பி. தொடர்ந்து எதிர்த்து வருவதால் அரசு இத்திட்டத்தைக் கைவிட முடிவு செய்துள்ளது. மாற்று ஏற்பாடாக - இந்தப் பங்குகளை உள்ளூரில் விற்பனை செய்வது என்றும் அரசு முடிவு செய்துள்ளது என அறியவந்தது. (3)

விடுதலைப் புலிகளின் போர்ப் பயிற்சிக் கல்லூரியில்

# ஆனையிறவுச் சமரின் ஆண்டு விழாவில் போராளிகள் நேற்று கவிதைச் சமர்!

ஆனையிறவுச் சமர் மற்றும் 'தீச்சுவாலை' வெற்றிச் சமர் ஆகிய தாக்குதல் நடவடிக்கைகளின் ஐந்தாவது ஆண்டு நிறைவைக் குறிக்கும் நிகழ்ச்சிகள் நேற்றும் நடைபெற்றன.

விடுதலைப் புலிகளின் போர்ப்பயிற்சிக் கல்லூரியில் மூன்றாவது நாளாக நேற்று நடைபெற்ற நிகழ்ச்சிகளில் புலிகள் படையணிகளின் கவிதைச் சமர் சிறப்பு நிகழ்வாக அமைந்தன.

நேற்றுக் காலை 9 மணிக்கு நிகழ்வுகள் ஆரம்பமாகின. காலை நிகழ்வாக நடைபெற்ற கவிதைச் சமரில் கலந்துகொண்ட ஆண் கவிஞர்களைக் குட்டி சிறி மோட்டார் படையணியின் சிறப்புத் தளபதி கோபாலும் பெண் கவிஞர்களை சோதியா படையணியின் தளபதி மதுரமும் கைலாகு கொடுத்து வரவேற்றனர்.

இறுதிப்போட்டிக்கு தெரிவான நான்கு படையணிகள் கவிதைச் சமரில் பங்கேற்றன.

'தரையிறங்கியா பிடித்தாய் அன்று, தரையிறங்கியே பிடித்தோம் இன்று' என்ற தலைப்பில் மாலதி படையணியும் சோதியா படையணியும் -

'வெள்ளை கட்டி நடக்கிறது சமாதானச் சாவீடு' என்ற தலைப்பில் சாள்ஸ் அன்ரனி சிறப்புப்படையணியும் -

'கற்பனையே இல்லையடா எத்தனை யுகம் வரினும் எம் தலைவன் பிரபாகரனே!' என்ற தலைப்பில் அதிகாரி அணியும் -

கவிதைச் சமரில் மோதின. (ஐ)

## போலி ஆயிரம் ரூபா நோட்டு புழக்கத்தில்

வலி.தென்மேற்கு,ஏப்.24

போலி ஆயிரம் ரூபா (கள்ள நோட்டு) வலி. தென்மேற்குப் பகுதியில் புழக்கத்தில் இருப்பதாகச் சொல்லப்படுகிறது.

கடந்த வாரம் பண்டத்தரிப்பு பிரதான வீதியில் உள்ள கடை ஒன்றில் போலி ஆயிரம் ரூபா நோட்டைக் கொடுத்து யாரோ ஒருவர் பொருள்களை வாங்கியிருக்கிறார். கடைபூட்டும் வேளையில் பணத்தை எண்ணும்போது தான் அந்தப் போலி நோட்டு இருந்தது கடை உரிமையாளரால் கண்டுபிடிக்கப்பட்டது.

சாதாரணமாக மேலோட்டமாகப் பார்க்கும் போது அசல் ஆயிரம் ரூபா நோட்டுக்கும் இந்தப் போலிநோட்டுக்கும் வித்தியாசம் கண்டுபிடிப்பது கஷ்டம் என்றும் தெரிவிக்கப்பட்டது. (135)



ஆனையிறவுச் சமரின் ஆண்டு விழாவின் நேற்றைய நிகழ்ச்சியில் கலந்துகொண்ட போராளிகள், பார்வையாளர்களைப் படங்களில் காணலாம்.

## சமய சந்நிதியில்

யாழ்ப்பாணம்,ஏப்.24

மானிப்பாய் வேலக்கைப்பிள்ளையார் கோயில் தேர்த்திருவிழாவும் தீர்த்தத்திருவிழாவும் இன்று இடம்பெறவுள்ளன.

முற்பகல் 10.30 மணிக்கு தேர்த்திருவிழாவும் பிற்பகல் 2.30 மணிக்குத் தீர்த்தத்திருவிழாவும் இடம்பெறும். (ஐ-3)

## மத்திய கல்லூரியில் இன்று கருத்தமர்வு

கிளிநொச்சி,ஏப்.24

வன்னி தொழில்நுட்பவியல் நிறுவகத்தினால் இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ். மத்திய கல்லூரியில் கருத்தமர்வு ஒன்று நடத்தப்படவுள்ளது.

இந்தக் கருத்தமர்வில் மேற்படி நிறுவகத்தின் கற்கைநெறிகளும் அதன் ஊடான வேலை வாய்ப்புகளும் தொடர்பான கருத்துக்கள் வழங்கப்படவுள்ளன.

மேற்படி நிகழ்வில் புதிய கல்வியாண்டுக்கான விண்ணப்பப்படிவங்களும் வழங்கப்படவுள்ளன என அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-203)

# உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் வசிக்கும் வலி.வடக்கு மக்களின் விவரம் சேகரிப்பு

## தெல்லிப்பழையில் நடைபெற்ற கலந்துரையாடலில் இப்படித் தீர்மானம்

வலி.வடக்கு,ஏப்.24

வலி.வடக்கில் உயர் பாகாப்பு வலயம் காரணமாக இடம்பெயர்ந்து உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் தங்கி வாழ்வோரின் முழு விவரங்களையும் திரட்டுவதற்கு முடிவுசெய்யப்பட்டிருக்கிறது. இதற்கென பதினொரு பேர் கொண்ட குழு ஒன்றும் தெரிவுசெய்யப்பட்டிருக்கிறது.

வலி.வடக்கில் உயர் பாதுகாப்பு வலயப் பகுதியில் மக்களை மீளக்குடியமர்த்துவது தொடர்பான கலந்துரையாடல் ஒன்று நேற்று தெல்லிப்பழை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

தெல்லிப்பழை உதவிப் பிரதேச செயலர் எஸ்.முரளிதரன் தலைமையில் நடைபெற்ற இக்கலந்துரையாடலில் வலி.வடக்குப் பகுதியைச் சேர்ந்த பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், கிராம அலுவலர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, சுரேஷ் பிரேமச்சந்திரன், எஸ்.சிவனேசன் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

கலந்துரையாடலில் கலந்துகொண்டவர்கள் - இடம்பெயர்வினைத் தொடர்ந்து தமது பிள்ளைகள் கல்வி வாய்ப்பை இழந்துள்ளனர். வீடுகளில் வசிக்கமுடியாது அடிக்கடி வீடு மாறி வீடு தேடி அலையும் நிலைமை, தொழில் வாய்ப்புக்கள் இன்றி அவலப்படும் நிலைமைகளை பல பொது அமைப்புகளின் பிரதிநிதிகளுக்கும் எடுத்துக் கூறினார்கள்.

மிகவும் உணர்ச்சிவசப்பட்ட நிலையில் அவர்கள் தமது கருத்துக்களை வெளியிட்டனர்.

கலந்துரையாடலின் முடிவில் வலி.வடக்கு உயர் பாதுகாப்பு வலயத்தில் இருந்து இடம்பெயர்ந்து உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் வசிப்பவர்களிடம் இருந்து விவரங்களைத் திரட்டி ஆவணப்படுத்துவதுடன் அனைத்துலக நாடுகளுக்கும் உண்மை நிலையை எடுத்து விளக்குவது என்று தீர்மானிக்கப்பட்டது.

இப்பணியைச் செயல்படுத்துவதற்கும் இலகுவாக்குவதற்கும் வசதியாக வலி.வடக்கு உதவிப் பிரதேச செயலர் எஸ்.முரளீதரன் தலைமையில் பதினொரு பேர் கொண்ட குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளது.

இவர்கள் கேள்விக்கொத்தொன்றின் மூலம் வலி.வடக்கில் உயர் பாதுகாப்பு வலயம் காரணமாக இடம்பெயர்ந்த மக்களின் விவரங்களை கிராம அலுவலர்களின் உதவியுடன் சேகரிப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ளவுள்ளனர். (ஐ-86)



யாழ். மாவட்ட சிக்கனக் கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் மகளிர் குழு நேற்று யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடத்திய அனைத்துலக பெண்கள் தின நிகழ்வில் தமிழீழத் தேசியக் கொடியினை விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் கலைவிழியும் கூட்டுறவுச் சங்கக் கொடியினை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி பத்மினி சிதம்பரநாதனும் ஏற்றுவதை முதல் இரண்டு படங்களிலும், பொதுச் சுடரினை யாழ். மாவட்ட கூட்டுறவுச் சங்கங்களின் நிர்வாக சேவைப் பொறுப்பாளர் புஷ்பகுமார் ஏற்றுவதையும் கலைநிகழ்வையும் அடுத்துள்ள படங்களிலும் காணலாம். (படங்கள் : பிரபா)

# ஈராக்கில் 19 இராணுவ வீரர்கள் தீவிரவாதிகளால் சுட்டுக்கொலை!

பக்தாத்,ஏப்.24

கடந்த 4 நாள்களுக்கு முன்பு பாக்தாத் நகரில் உள்ள சோதனைச் சாவடியில் வைத்துக் கடத்தப்பட்ட 19 ஈராக் இராணுவத்தினருக்கும் மரணதண்டனை நிறைவேற்றியிருப்பதாகத் தீவிரவாதிகள் அறிவித்துள்ளனர்.

19 பேரையும் வரிசையாக நிற்கவைத்து அவர்களைத் துப்பாக்கியால் சுட்டுக்கொன்றதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

சுட்டுக்கொல்லப்பட்ட 19 வீரர்களின் உடல்கள் அசானியா - பைஜி நகரங்களுக்கு இடையே வீதி ஓரத்தில் வீசப்பட்டன. அந்த உடல்களை ஈராக்கியப் பொலீஸார் மீட்டுள்ளனர்.

இதற்கிடையே ஷியா முஸ்லிம் - சன்னி முஸ்லிம் பிரிவினருக்கு இடையே நடந்து வரும் மோதல் ஈராக்கில உச்சக் கட்டம் அடைந்து வருகின்றது. பக்தாத்தில் உள்ள அல்சுவை ஷியா மசூதியில் நேற்றுமுன்தினம் ஏராளமானவர்கள் வெள்ளிக்கிழமை தொழுகை நடத்திக் கொண்டு இருந்தனர். அப்போது மசூதிக்கு வெளியே நிறுத்தப்பட்டு இருந்த காரில் இருந்து சக்தி வாய்ந்த குண்டு வெடித்தது. இதில் தொழுகை நடத்திக் கொண்டிருந்த 9 பேர் பலியானார்கள்; 50 இற்கும் மேற்பட்டவர்கள் காயம் அடைநதனர். மசூதிக்கு வெளியே நிறுத்தப்பட்டு இருந்த ஒரு பஸ்ஸும் தீயில் எரிந்து சாம்பலானது. (8)

# கொலம்பியாவில் 11 இளைஞர்கள் படுகொலை!

பொகோட்டோ,ஏப்.24

அமெரிக்கா அருகே உள்ள கொலம்பியாவில் 12 முதல் 25 வயதுக்கு உட்பட்ட இளைஞர்கள் 11 பேர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர்.

வல்லேடி - காங்கா மாநிலத்தில் புயனவெஞ்சுரா நகரில் இந்தச் சம்பவம் நடந்தது. இளைஞர்கள் கால்பந்து விளையாடச் சென்ற போது சிலர் அவர்களைத் தலையில் சுட்டுக்கொன்றனர். பிறகு உடல்களைத் தூக்கி ஆற்றில் வீசினர் என்று தெரிவிக்கப்படுகிறது.

எதற்காக அவர்கள் கொல்லப்பட்டார்கள் என்பதும் யார் கொலை செய்தார்கள் என்பதும தெரியவரவில்லை. கொலை நடந்த பகுதி கஞ்சா கடத்தல் கும்பலும், இடதுசாரித் தீவிரவாதிகளுக்கும் செல்வாக்குப் பெற்றது எனக் கூறப்படுகிறது.

## படையினர்-தீவிரவாதிகள் சவூதியில் மோதல்

சவூதி அரேபியாவில் மக்கா மற்றும் ஜெட்டாவில் தீவிரவாதிகளுக்கும் பாதுகாப்புப் படையினருக்கும் இடையே நடந்த சண்டையில் நான்கு பேர் கொல்லப்பட்டனர்.

ஓசாமா பின்லேடனின் ஆதரவாளர்கள் பலா சவூதியில் இருந்துகொண்டு நாசவேலைகளில் ஈடுபட்டுவருகின்றனர். இதற்கிடையே நேற்றுமுன் தினம் ஜெட்டாவிலும் புனித நகரான மக்காவிலும பாதுகாப்புப் படையினருக்கும் தீவிரவாதிகளுக்கும இடையே துப்பாக்கிச் சண்டை நடந்தது. சவூதியில் நேற்றுமுன்தினம் நகராட்சி தேர்தல் நடந்தது. இந்தத் தேர்தல் நடந்து கொண்டே இருக்கும் போது ஜெட்டாவில் இந்தச் சண்டை நடந்தது.

தேர்தல் முடிந்த இரண்டு மணி நேரத்தில் மக்காவில் சண்டை நடந்தது. ஐந்து தீவிரவாதிகள் பாதுகாப்புப் படையினர் மீது தாக்குதல் நடத்தினர். பொலீஸாரின் பதிலடி தாக்குதலில் ஒரு பெண் உள்ளிட்ட மூன்று தீவிரவாதிகள் தப்பி ஓடிவிட்டனர். மலை அடிவாரத்தில் பதுங்கியிருநத தீவிரவாதிகளுடன் பல மணி நேரம் நடந்த சண்டையில் இரண்டு தீவிரவாதிகளும், இரணடு பாதுகாப்புப் படையினரும் பலியாகினர், ஒருவர் கைதுசெய்யபட்டார். (8)

# காஷ்மீரை 7 பகுதிகளாகப் பிரித்து பிரச்சினைக்குத் தீர்வு காணலாம்

## யோசனை கூறுகிறார் முஷாரப்



பாகிஸ்தானில் உள்ள காஷ்மீரையும் இந்தியாவில் உள்ள காஷ்மீரையும் சேர்த்து ஏழு பகுதிகளாக பிரித்து காஷ்மீர் பிரச்சினையைத் தீர்க்கலாம் என்று பாகிஸ்தான் அதிபர் முஷாரப் யோசனை கூறியுள்ளார்.

பிலிப்பைன்ஸ் தலைநகர் மணிலாவில் சி.என்.என். தொலைக்காட்சிக்கு அவர் பேட்டி அளித்தார்.

அதன் விவரம் வருமாறு:-

காஷ்மீர் முழுவதையும் ஏழு பகுதிகளாகப் பிரித்து அடையாளம் கண்டு, உடன்பாடு ஏற்பட்டு, அப்பகுதியிலிருந்து இராணுவத்தை வாபஸ் பெறவேண்டும். அதன்பின் அந்தப் பகுதியின் ஆட்சியின் தன்மையை மாற்றவேண்டும்.

இவற்றை நிறைவேற்ற அப்பகுதியில் இராணுவம், பயங்கரவாதம் அல்லது விடுதலைப் போராட்டம் போன்ற எதுவும் இருக்கக்கூடாது. காஷ்மீர் மக்கள் தங்களது பாதுகாப்பை தாங்களே கவனித்துக்கொள்ளவேண்டும்.

காஷ்மீர் பிரச்சினை தற்போது மக்கள் கைக்குச் சென்றுவிட்டது. எப்பாடுபட்டாகிலும் அதைத் தீர்க்கவேண்டும் என்று அவர்கள் முனைப்பாக இருக்கின்றனர். அரசுகள் மற்றும் தலைவா்களை அது கடந்துவிட்டது - என்றார். (8)



புதிய பாப்பரசராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட 16ஆம் பெனடிக்ற் இன்று வத்திக்கானில் முறைப்படி பதவி ஏற்கிறார். இதையொட்டி ஜேர்மனியில் அவரது படம் பொறித்த மெழுகுவர்த்திகள் பெருமளவில் விற்பனைக்கு வந்துள்ளன. இந்த மெழுகுவர்த்திகள் அமோகமாக விற்பனையாகின்றன. மெழுகுவர்த்தி உருகினாலும் பாப்பரசரின் படம் போட்ட உறை கரைந்து போகாதவாறு அமைக்கப்பட்டுள்ளது. அதனையே படத்தில் காண்கிறீர்கள். (8)

# பாப்பரசர் 16ஆம் பெனடிக்ற் இன்று பதவியேற்கிறார்

வத்திக்கான்,ஏப்.24

உலகெங்கும் வாழும் கத்தோலிக்க மக்களின் தலைவரான பாப்பரசர் 16ஆம் பெனடிக்ற இன்று ஞாயிற்றுக்கிழமை தனது பதவிகளை உத்தியோகபூர்வமாக ஏற்றுக்கொள்கிறார்.

பதவியேற்பு விழா இன்று கோலாகலமாக சென். பீற்றர்ஸ் சதுக்கத்தில் நடைபெறுகின்றது.

கர்தினால் ஜோசப் ரட்சிங்கர் என்ற பெயரில் கடந்த 20 ஆண்டுகளுக்கு மேலாக வத்திக்கானோடு மிக நெருக்கிய தொடர்புகொண்டு பணியாற்றிவந்த 16ஆம் பெனடிக்ற் என்ற பெயருடன் பாப்பரசராகி புதிய பணிகளை ஆரம்பிக்கின்றார்.



1951 ஆம் ஆண்டு குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்ட இவர் 1955 ஆம் ஆண்டு பல்கலைக்கழக விரிவுரையாளரானார். 1962 ஆம் ஆண்டு 2ஆம் வத்திகான் சங்கச் செயற்பாடுகளில் மிகவும் முக்கியமான ஒரு மனிதராகப் பணியாற்றினார். 1977 ஆம் ஆண்டு மியூனிச் நகர ரோயராகத் தெரிவுசெயயப்பட்டார். 1982 ஆம் ஆண்டு வத்திக்கான் விசுவாசக் கோட்பாட்டின் ஆணையத்தின் தலைமைப பதவியை ஏற்றுக்கொண்டார். பாப்பரசரின் பதவியேற்பு வைபவத்தையொட்டி ஜேர்மனியிலும் கோலாகல விழாக்கள் நடைபெறவுள்ளன.(8)

# ஐ.நா.சபைச் சீர்திருத்தத்துக்கு முழு ஆதரவு வழங்க வேண்டும்

## ஆசிய - ஆபிரிக்க நாடுகளிடம் அனான் வலியுறுத்தல்

ஜகார்த்தா,ஏப்.24

ஐக்கிய நாடுகள் சபையில் கொண்டுவரப்படவுள்ள சீர்திருத்த நடவடிக்கைகளுக்கு ஆசிய - ஆபிரிக்கா நாடுகள் முழு ஆதரவு அளிக்க வேண்டும் என்று ஐ.நா. பொதுச்செயலர் கொபி அனான் வலியுறுத்தினார்.

ஆசிய - ஆபிரிக்க நாடுகளின் இரண்டு நாள கூட்டம் இந்தோனேசியாவில் கடந்த வெள்ளிக்கிழமை தொடங்கியது. பிரதமர் மன்மோகன் சிங் உடபட 100 இற்கும் மேற்பட்ட நாடுகளின் தலைவர்கள் இந்த மாநாட்டில் பங்கேற்றனர்.

மாநாட்டில் ஐ.நா. பொதுச்செயலர் கொபி அனான் பேசியதாவது:-

ஐ.நா. பாதுகாப்புக் கவுன்ஸில் தற்போதைய கால நிலைமைக்கேற்ற மாற்றம் மேற்கொள்ளப்படவேண்டும்.

### உலக அரங்கில்

வரும் செப்ரெம்பரில் நியூயோர்க்கில் நடைபெறவுள்ள ஐ.நா. சபைக் கூட்டத்தில் சீர்த்திருத்த நடவடிக்கை குறித்து விவாதிக்கப்படவுள்ளது. அப்போது இந்த மாநாட்டில் பங்கேற்றுள்ள தலைவர்கள் தாங்களாகவோ அல்லது தங்கள் பிரதிநிதிகளை அனுப்பிவைத்தோ சீர்த்திருத்த நடவடிக்கைகளுக்கு ஒப்புதல் அளிக்கவேண்டும். அதற்கான நேரம் தற்போது வந்துள்ளது.

உலக நாடுகளுக்கும், ஐக்கிய நாடுகளுக்கும் 2005 ஆம் ஆண்டு ஒரு நல்ல வாய்ப்பாக அமைந்துள்ளது. பல வளரும் நாடுகள் உறுப்பினர்களாகச் சேர்ந்து ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலை விரிவுபடுத்த வேண்டும். வளர்ந்த நாடுகள் வளரும் நாடுகளின் வறுமையைப் போக்க தங்கள் வருமானத்தில் ஒரு குறிப்பிட்ட தொகையை ஒதுக்க முன்வர வேண்டும். ஐ.நா. சபைக்குப் புதிய, நிரந்தர, முழு அதிகாரம் கொண்ட மனித உரிமை அமைப்பு முக்கியத் தேவையாக உள்ளது - என்றார். (8)

# இந்தியா-பாகிஸ்தான் இடையே இரண்டாம் கட்டப் பேச்சுக்கள்

## அடுத்த மாதம் ஆரம்பமாகுமெனத் தகவல்

இஸ்லாமபாத்,ஏப்.24

இந்தியா - பாகிஸ்தான் இடையேயான 2 ஆவது கட்டப்பேச்சுக்களை அடுத்த மாதம் தொடங்கி ஓகஸ்ட் மாதம் வரை நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

இந்தத் தகவலை பாகிஸ்தானில் இருந்து வெளியாகும் டெய்லி ரைம்ஸ் என்ற பத்திரிகை வெளியிட்டுள்ளது. அதில் கூறப்பட்டு இருப்பதாவது:-

இந்தியா - பாகிஸ்தான் இடையே பல்வேறு விடயங்கள் குறித்தான பேச்சுக்கள் அடுத்த (மே) மாதம் கடைசி வாரம் தொடங்கி, ஓகஸ்ட் மாதம முடிய திட்டமிடப்பட்டுளளது. சியாச்சென், சக்கிரக் எல்லைப் பிரச்சினை, உள்ளர் அணை மற்றும் துல்புல் கடல் போக்குவரத்துத் திட்டம், தீவிரவாதம் மற்றும் போதைப் பொருள் கடத்தலைத் தடுததல், நட்பு மற்றும் கலாசாரப் பரிவர்த்தனையை ஊககப்படுத்துதல், பொருளாதார மற்றும் வர்த்தக ஒத்துழைப்பு ஆகிய 6 அம்சங்கள் தொடர்பாக இந்தப் பேச்சுக்கள் நடைபெறும். இதன்படி சியச்சென் எல்லைப்பிரச்சினை தொடர்பாக அடுத்த மே மாதம் 25ஆம், 26ஆம் திகதிகளில் சர்கிரீக் பிரச்சினை தொடர்பாக 26 ஆம் திகதியும் இஸ்லாமாபத்தில் பேச்சு நடைபெறும் டில்லியில் அடுத்து உள்ளர் அணை மற்றும் துல்புல் கடல் வழிப்போககுவரத்துக் குறித்து ஜூன் மாதம் 15 ஆம், 16 ஆம் திகதிகளிலும் தீவிரவாதம் மற்றும் போதைப் பொருள் கடத்தலைத் தடுப்பது தொடர்பாக ஜூலை மாதம் 5 ஆம், 6 ஆம் திகதிகளிலும் பேச்சுக்கள் நடைபெறும். நட்புறவு மற்றும் கலாசாரப் பரிவர்த்தனை தொடர்பான பேச்சு ஜூலை மாதம் 26 ஆம், 27 ஆம் திகதிகளில் இஸ்லாமாபத்திலும் பொருளாதார மற்றும் வர்த்தக ஒத்துழைப்பு தொடர்பான பேச்சு ஓகஸ்ட் மாதம் 9 ஆம், 10 ஆம் திகதிகளிலும் டில்லியிலும் நடைபெறும் -

முதலாம் கட்டப்பேச்சு கடந்த டிசெம்பர் மாதம் 27ஆம், 28 ஆம் திகதிகளில் இஸ்லாமாபாத்தில் இருநாட்டு வெளியுறவுத்துறைச் செயலாளர்கள் நடத்தினார்கள். அப்போது எடுக்கப்பட்ட முடிவுகள் பற்றி வருகிற ஓகஸ்ட் மாதம் 30ஆம, 31 ஆம் திகதிகளில் அவர்கள் மறுபடியும் இஸ்லாமாபாத்தில் கூடிமறு ஆய்வு நடத்துவார்கள் என்றுள்ளது.


உங்கள் விமானப் பயணத்திற்கு!
Aero Lanka
In Domestic Operation
New way of flying
Head office
No.500,Galle Road,
Wellawatte,
Colombo-06
Tel:2505632-3 Fax:2500626
Jaffna office
No.86,PointPedro Road,
Jaffna. Tel:021-2226242
Fax:021-2225600
Branch
No:14,New Market Building
Chavakachcheri
Tel:021-2227979 Fax: 021-2227979
Trinco Office
No.47,Kandy Road,
Trincomalee.
Tel:026-2221519
Fax:026-2221519
யாழ்⇆கொழும்பு
யாழ்⇆திருகோணமலை⇆கொழும்பு

# விசுவாச வாழ்வின் வழிகாட்டி தூய ஆவியானவர்

இயேசு கிறிஸ்து வெளிப்படுத்திய சத்தியங்களை ஆதாரமாகக் கொண்டு, திருச்சபைப் பிதாக்கள், வேதவல்லுநர்கள் தந்த போதனையைத் தழுவி, தூய ஆவி பற்றி எமக்கு அறிவுறுத்தும் விசுவாசப் பிரமாணங்களைப் பணிந்த மனத்துடன் அங்கீகரிப்பது எமது கடமை. இவைகளின் ஊடாக, தூய ஆவியானவர் பரம திருத்துவத்தின் மூன்றாம் ஆள் என அறிகின்றோம். திருசசபை நமக்குக் கற்பிக்கும் விசுவாசப் பிரமாணத்தின்படி, தூய ஆவியானவர் தெய்வீக சுபாவத்திலும் பிதாவோடும் சுதனோடும் நித்தியமாய் ஒன்றித்திருப்பவர்; பிதாவுக்கும் சுதனுக்கும் சமமானவர்; பிதாவோடும் சுதனோடும் செயலாற்றுகின்றவர்; சிருஷ்டிப்பு, மீட்பு போன்ற பணிகளில் மூவரும் சேர்ந்து செயலாற்றுகின்றனர்.

தூய ஆவியானவர் அப்போஸ்தலர்கள் மேல் இறங்கித் தம் கொடைகளினால் அவர்களை நிரப்பி, அவர்களைப் புதுமனிதர்களாக்குகின்றார்; அவர்களைப் பரிசுத்தப்படுகின்றார்; அவர்களுக்கு மனோ வலிமையைத் தருகின்றார்; திருச்சபையை ஆரம்பிக்கின்றார்; அதனைப் புதுப்பிக்கின்றார்; அதனைப் பரப்புகின்றார்; அதனை ஆண்டு நடத்துகின்றாா; தேவ சத்தியங்களைக் காத்து வருகின்றார்; உறுதி பூசுதல் வழியாக மக்களின் உள்ளத்தில் இறங்கி, அவர்களைத் தம் கொடைகளால் அலங்கரிதது அர்ச்சிக்கின்றார். தம் ஆற்றலால் ஆர்வமுள்ள ஆன்மாக்களில் இன்பம் பொழியும் கனிகளை விளையச் செய்கின்றார்.

பெந்தக்கோஸ்தே தினத்தன்று தூய ஆவியானவர் அப்போஸ்தலர்கள் மேல் இறங்கியமையால் அவர்கள் முற்றிலும் வேறு மனிதராயினர். அக்கினி நாக்கு வடிவில் இறங்கிய ஆவியானவர், அவர்களது புத்திக்கு ஒளியையும் மனதுக்குத் திடனையும் அளித்தார். அத்தோடு, சிலுவையில் அறையுண்ட இயேசுவின் பால்

## ஞாயிறு நற்பிரசாதம்

அணையாத அன்புத் தீயினை மூட்டிவிட்டார். கிறிஸ்துவின் நற்செய்தியை அறிவிப்பதும் விண்ணரசை உலகமெங்கும் பரப்புவதும் இவர்களது நோக்கமாக இருந்தது. திருத்தூதர் பணி 2ஆம் அதிகாரத்தில் உள்ளதுபோன்று பெந்தகோஸ்தே தினத்தன்று பல்வேறு மக்கள் மத்தியில் அவர்கள் தங்கள் தங்கள் மொழிகளில் உணர்ந்துகொள்ளும் வகையில் சிலுவையில் அறையுண்டு, மரித்து, உயிர்த்தெழுந்து மீண்டும் விண்ணகம் சென்ற கிறிஸ்துவை அறிக்கையிட்டனர். இந்தச் செய்தியினைக் கேட்டவர்கள் உள்ளம் குத்துண்டவர்களாக, தாங்கள் என்ன செய்யவேண்டுமென்று சீடர்களிடம் கேட்டார்கள். அவர்களோ தூய ஆவியின் பெயரால் அவர்களுக்குத் திருமுழுக்கு வழங்கினர். உலகின் கடையெல்லை வரை கிறிஸ்துவுக்காகச் சாட்சியம் பகர்ந்தனர். தேவ ஆவியினால் தூண்டப்பட்டவர்களாகப் பல்வேறு புதுமைகள் செய்தனர். படிப்பறிவற்ற பாமர மக்களான சீடர்கள் கிறிஸ்துவின் நற்செய்திக்காக அரசர்கள், ஞானிகள், அறிவாளிகள் முன் துணிவுடன் போதிக்கவும், பேசவும், உலகின் பல பாகங்களுக்கும் கிறிஸ்துவை எடுத்துச்செல்லவும் இறுதியில் கிறிஸ்துவுக்காகத் தம் உயிரைக் கொடுக்கவும் அவர்களைத் தூண்டியவர், துணை நின்றவர் தூய ஆவியானவரே.

தூய ஆவியானவரின் வழிகாட்டலும் அருட்கொடைகளும் விசுவாசத்தின் வழிகாட்டிகளாக அப்போஸ்தலர்களுக்கு மட்டுமல்ல நமக

**சகோ.எஸ்.பிரான்சிஸ்**

கும் கிடைக்கின்றது. அவரின் வழிநடத்தலில் வாழும்போது நாம் கிறிஸ்துவுக்கு ஏற்புடையவர்களாய் மாற்றப்படுகின்றோம். இந்த மாற்றமே கிறிஸ்தவ வாழ்வின் சிறப்பிற்கு வழிகோலி நிற்கின்றது. ☆

## படையினர் சிரமதானம்

யாழ்ப்பாணம்,ஏப்.24

தெல்லிப்பழை புற்றுநோய் வைத்தியசாலையில் இராணுவத்தினர் சிரமதானம் செய்துள்ளனர்.

யாழ்.பாதுகாப்புப் படைத்தளபதி மேஜர் ஜெனரல் எஸ்.டி.தென்னக்கோனின் வழிகாட்டலில 512 ஆவது படைப்பிரிவைச் சேர்ந்த படையணியினரே இவ்வாறு நேற்றுமுனதினம் வெள்ளிக்கிழமை சிரமாதனத்தில் ஈடுபட்டனர்.

தெல்லிப்பழை மாவட்ட வைத்தியசாலையில் புற்றுநோய் பகுதியை நிர்மாணிக்கும் வேலைத்திட்டப் பொறுப்பதிகாரி டாக்டர் ரீ.தெய்வேந்திரனின் அழைப்பின் பேரிலேயே இச்சிரமதானம் மேற்கொள்ளப்பட்டது என்றும் -

சிரமதானத்திற்கு வேண்டிய பாரம் தூக்கி இயந்திரம், உழவு இயந்திரம், டிப்பர் வாகனம் என்பவற்றை முதலாவது பொறியியல் பணிப் பிரிவு வழங்கி உதவியது என்றும் -

பாதுகாப்பு நடவடிக்கைத் தலைமையகம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது மேற்படி வைத்தியசாலைகளில் திருத்த வேலைகள் இடம்பெற்று வருவதும் வெகுவிரைவில் புற்றுநோய் சிகிச்சைக்கான சேவைகள் ஆரம்பிக்கப்படவுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

(8-202)

# குடிதண்ணீர் வளம் குறித்து ஆய்வறிக்கை தயாரிக்க ஏற்பாடு

## நாளை அங்குரார்ப்பண நிகழ்வு

யாழ்ப்பாணம்.ஏப்.24

தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் யாழ்.மாவட்ட அலுவலகம் மாவட்டத்தில் குடிதண்ணீர் மற்றும் சுகாதாரம் சம்பந்தமான ஆய்வறிக்கையைத் தயாரிக்கவுள்ளது.

மேற்படி ஆய்வறிக்கை தயாரிப்பது தொடர்பான அங்குரார்ப்பண வைபவம் நாளை திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் திட்ட முகாமையார் எந்திரி தி.பாரதிதாசன் தலைமையில் யாழ்.பொது நூலகக் கட்டடத்தில் நடைபெறும்.

இந்த அங்குரார்ப்பண நிகழ்வில் வடக்கு - கிழக்கு மாகாணப் பிரதம செயலாளர் எஸ்.ரங்கராஜா, யாழ்.மாவட்ட அரச அதிபர் கே.கணேஸ், கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் தி.இராசநாயகம் மற்றும் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (எ-185)

## கூட்டுறவுப் பணிப்பாளருக்கு சம்பள உயர்வு

தென்மராட்சி,ஏப்.24

சாவகச்சேரி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கப் பணிப்பாளர்களுக்கு அதிகரித்த சம்பளம் ரூபா 2ஆயிரத்து 500 ஏப்ரல் மாதச் சம்பளத்துடன் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

(8-117)




# கிராமமட்டத் தேவைகளை நிறைவு செய்ய கிராமிய செயலகங்கள் நிறுவப்படும்

## பொதுநிர்வாக அமைச்சு அறிவிப்பு

வலி.தெற்கு.ஏப்.24

கிராம மட்டத்தில் பொதுமக்கள் தமது அன்றாட வேலைகளை நிறைவேற்றிக் கொள்ளும் வகையிலும் -

அலைந்து திரியாமல் ஒரே இடத்தில் தமது தேவைகளை நிறைவு செய்துகொள்ளும் வகையிலும் -

நாடளாவிய ரீதியில் கிராமிய செயலகங்கள் அமைக்கப்படவுள்ளன.

பொதுநிர்வாக அமைச்சு இதனை அறிவித்துள்ளது.

நாடளாவிய ரீதியில் பொதுநிர்வாக அமைச்சின் திட்டத்தின் கீழ் கிராமிய செயலகங்கள் அமைக்கப்படவுள்ளன.

நாடுபூராவும் 64 கிராமிய செயலகங்கள் அமைக்கப்படும். இந்தக் கிராமிய செயலகங்களின் பிரதான நிர்வாகியாகக் கிராமத்தில் உள்ள சிரேஷ்ட கிராம சேவை அலுவலர் ஒருவர் கடமையாற்றுவார்.

கிராமங்களில் கடமையாற்றிவரும் அனைத்து அரசதுறையைச் சேர்ந்த அதிகாரிகளும் இச்செயலகத்தில் கடமைக்காக அமர்ந்திருப்பர். ஒரு பிரதேசசெயலர் பிரிவின் கீழ் பல கிராமங்கள் இருக்கும் பட்சத்திலேயே இக்கிராமிய செயலகத்திட்டம் நடைமுறைக்குக் கொண்டு வரப்படும்.

தனி ஒரு கிராமத்துக்கு ஒரு பிரதேச செயலகம் அமைந்திருப்பின் இத்திட்டம் அங்கு செயற்படுத்தப்படமாட்டாது என்று பொதுநிர்வாக அமைச்சு விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-152)

## காரைநகரில் இன்று ஆயுள்வேத மருத்துவமுகாம்

யாழ்ப்பாணம்,ஏப்.24

சுஜீவா ஆயுள்வேத வைத்தியசாலையின் ஏற்பாட்டில் இலவச பாரம்பரிய மருத்துவமுகாம் ஒன்று இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு காரைநகர் யாழ்ற்றன் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

ஆயுள்வேத, சித்த, யோகாசன, வர்ம மருதது வங்களின் மகத்துவத்தை நிலைநாட்டவும் மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தவும் இம்மருத்துவ முகாம் ஒழுங்குசெய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (எ-202)

**தேவை**

எமது ஸ்தாபனத்திற்கு அச்சக அனுபவமுள்ள கணனி தெரிந்த பெண்பிள்ளை தேவை. நேரில் தொடர்புகொள்ளவும்.
(யாழ்.மாநகரசபைக்கு உட்பட்டவர்கள் விரும்பத்தக்கது).
தொடர்பு: **மேனகா பிறிண்டேர்ஸ்**
342, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
(44595)

**WANTED**

For Night Duty
M.O/R.M.O. (on Call)
please apply.
Medical Director,
**Central Nursing Home,**
**350, Palaly Road,**
**Jaffna.**
(44471)

**பாராட்டி வாழ்த்துகின்றோம்**

கடந்த டிசெம்பர் மாதம் நடைபெற்ற க.பொ.த. (சா/த)
பரீட்சையில் தோற்றிச் சித்தியடைந்த
எமது கிராமத்தைச் சேர்ந்த
செல்வன் ராசா டக்ஷாயன் - யா/யூனியன் கல்லூரி
செல்வி -லோகநாதன் கயானா - யா/யூனியன் கல்லூரி
ஆகியோரைப் பாராட்டி வாழ்த்துவதுடன், இவர்கள்
மேலும் பல சாதனைகளைப் புரிய எமது நல்லாசிகளைத்
தெரிவித்துக்கொள்கின்றோம்.
**வாலிபர் ஐக்கிய சங்க ஜனசமூக நிலையம்,**
**தெல்லிப்பழை.**
(44589) (39-14-26)

## மாணவருக்கு உதவி

தென்மராட்சி,ஏப்.24

சுனாமி அனர்த்தத்தால் பெற்றோரை இழந்த 43 மாணவர்களுக்கு தலா 2 ஆயிரம் ரூபா வீதம் வங்கியில் வைப்புச் செய்யப்பட்டுள்ளது. மீசாலை மேற்கு மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தினர் 28 மாணவர்களுக்கும், கைதடி தெற்கு சனசமூக நிலையத்தினர் 15 மாணவர்களுக்கும் இத்தொகையினை வைப்பிலிட்டுள்ளனர்.

வடமராட்சி, வடமராட்சி கிழக்கு ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த இந்த மாணவர்களுக்குச் சங்கத்தானையில் நடைபெற்ற அன்னை பூபதி நினைவு நிகழ்வில் வங்கிக் கணக்குப் புத்தகங்கள் வழங்கப்பட்டன. (ஒ-117)

## எந்திரவியல் விஞ்ஞான டிப்ளோமாவுக்கு விண்ணப்பம்

யாழ்ப்பாணம்,ஏப்.24

கட்டுநாயக்காவில் உள்ள தொழில்நுட்ப பயிற்சி நிறுவகத்தில் நடத்தப்படவுள்ள எந்திரவியல் விஞ்ஞான டிப்ளோமாப் பயிற்சி நெறிக்குப் பொருத்தமானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

நான்கு வருடங்களைக் கொண்ட இப் பயிற்சிநெறிக்கு விண்ணப்பிக்க விரும்பும் ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையில் விஞ்ஞான, எநதிரவியல் பாடங்களில் சித்தியடைந்த 18-25 வயதுக்கு இடைப்பட்டவர்களை அடுத்த மாதம் 28ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விவரத்தையும் விண்ணப்பப்படிவத்தையும் 'தேசிய பயிலுநர் கைத்தொழில் பயிற்சி அதிகார சபை, இல.7, கோயில் வீதி, யாழ்ப்பாணம்' என்னும் முகவரியில் பெற்றுக் கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

(எ-202)

உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் — 222 2030, 222 2083, 222 3837.

# சிந்தனையைச் சீராக்கி செயலைச் செழுமையாக்குவோம்!

செயலும் சிந்தனையும் உயர்வானால் வாழ்வு வளம்பெறும், நல்ல சிந்தனையும், எண்ணமும் மனிதனை நல்வழிப்படுத்தும் சுக்கான்கள்.

திசை தெரியாத சமுத்திரம் என்ற வாழ்வில், இலக்கு என்ற துறைமுகத்துக்கு நம்மை வழிப்படுத்திச் செல்லும் சுக்கான்களாக சிந்தனை, செயல், பற்றுறுதி என்பன அமைகின்றன. யாழ்ப்பாணத்தில் புகழ்பெற்ற அதிபர்களுள் ஒருவரான ஸ்கந்தவரோதயா தந்த அமரர் வீ.சிவசுப்பிரமணியத்தின் ஞாபகார்த்த நினைவுக் கூட்டத்தில் உரையாற்றுகையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நிதியாளர் கே.கனகரத்தினம் இவ்விடயத்தைச் சுட்டிக்காட்டியிருக்கின்றார்.

எண்ணங்கள் தாம் செயற்பாட்டுக்குத் தூண்டுகோல்களாகின்றன. செயற்பாடுதான் மனிதவாழ்வுக்குத் தளமாகின்றது. எண்ணமும், செயற்பாடும் - சிந்தனையும், போக்கும் - தவறான பாதையை நோக்கித் திசை திரும்புமானால் வாழ்வு அவலப்பட்டுப்போகும்; அவமாகிப்போகும்.

தனி மனிதனின் வாழ்வு அவலமானால் அது அவனைப் பாதிக்கும். குடும்பத்தில் அல்லது ஒரு வீட்டில் அல்லது ஒரு நிறுவனத்தில் தலைவனின் சிந்தனையும், போக்கும் தவறானால் அது அந்தக் குடும்பத்தை அல்லது வீட்டை அல்லது நிறுவனத்தையே அவமாக்கிவிடும்.

இதுவே ஒரு நாட்டின் தலைவனுக்கு ஏற்பட்டால் அந்த நாடே நாதியற்றுப் போகும்.

இதை நல்லதோர் உதாரணம் மூலம் தெளிவுபடுத்திச் சுட்டிக்காட்டுகின்றார் யாழ். பல்கலைக்கழக நிதியாளர் கனகரத்தினம்.

இலங்கையின் இன்றைய நிலைமை இவ்வளவு அவமாகி, குழப்பமாகி, அழிவுக்குள்ளாகி சீர்கெட்டுப் போயிருப்பது ஏன்?

நாட்டின் தலைவர்களின் சிந்தனையும், செயற்பாடும் தவறியமைதான் இதற்குக் காரணம்.

குறுகிய வழியில் ஆட்சியைக் கைப்பற்றத் துடித்த எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்காவின் சிந்தனையும், செயற்பாடும் அதற்காகக் குறுக்குவழியை நாடின. நாட்டில் இனவாதத்தைக் கிளப்புவதன் மூலம் ஆட்சியைப் பிடிக்கலாம் என்று எண்ணிய பண்டாரநாயக்கா, அதன் விளைவு நாட்டின் எதிர்காலத்தையே மோசமாக்கும் என்று கவலைப்படவேயில்லை. அன்று அவரின் சிந்தனையிலும் போக்கிலும் ஏற்பட்ட குறுக்குவழிப் புத்தியே '24 மணி நேரத்தில் சிங்கள மொழி மட்டும் என்ற சட்டமூலம் பிரகடனம்' ஆகவும் அதன் வாயிலாக பௌத்த, பேரினவாத வெளிப்பாடாகவும் பீறிட்டது. அந்தச் சிந்தனைப் போக்கின் தவறினால் ஏற்பட்ட விள்ளவுகளை - தாக்கத்தை - ஐந்தரை தசாப்தங்கள் தாண்டியும் அவரது நாடு - அவர் வழிநடத்திய நாடு - இன்றும் அனுபவித்துக் கொண்டிருக்கின்றது.

அதேசமயம், மகாத்மா காந்தி என்ற உத்தமர் மனதில் தோன்றிய நல்ல சிந்தனை, சத்தியசோதனை என்ற சுயபரிசோதனைக்கு - தவத்துக்கு - ஊடாகப் பரிணமித்து, அகிம்சைப் போராட்டம் என்ற புதிய இலட்சியப் பாதையைத் தோற்றுவித்து, இந்திய உபகண்டத்துக்கே விடுதலை என்ற விடியலைப் பெற்றுக் கொடுத்தது.

- இவ்வாறு இரண்டு மனங்களில் - மனிதர்களில் - சிந்தனையிலும் செயற்பாட்டிலும் நிகழ்ந்த வெவ்வேறான மாற்றங்கள் எவ்வாறு ஒரு நாட்டில் அவமாகச் சீர்கெடுத்தது. மற்ற நாட்டில் தவமாகச் சீர்பெற்றது என்பதை நிதியாளர் கனகரத்தினம் தமது உரையில் சுட்டிக்காட்டுவது ஒவ்வொருவரும் கவனத்தில் கெள்ளவேண்டியதாகும்.

நான், எனது என்ற சுயநலன்களையும், குறுகிய எண்ணங்களையும் துறந்து, எனது மக்கள், எனது இனம், எனது தேசியம், எனது தாயகம், எனது நாடு, எனது உலகு என்ற உயர் சிந்தனையோடும்; அன்புடைமையோடும் நாம் விருத்தி செய்வோமானால், எமது உள்ளமும், செயற்பாடும் உயர்ச்சி பெறும்; நாமும் நமது அயலும், நமது கிராமமும், ஊரும் நாடும் மேம்பாடடைய முடியும்.

மனிதப் பண்புகளை - விழுமியங்களை - அளவிடும் அளவு கோல்களாகவும் அமைபவை சிந்தனையும், செயற்பாடும்தான். எனவே, சிந்தனையைச் சீராக்கி, செயற்பாட்டை செழுமைப்படுத்தி, வையத்துள் வாழ்வாங்கு வாழ்வதற்கு நம்மைத் தயார்படுத்திக் கொள்வது சீர்பெற்று சிறப்புடன் வாழ வழிவகுக்கும்.

சிந்தனையை உயர்ந்ததாகப் பேணினால் செயல்களும் உயர்வானவையாக இருக்கும். ஆனால், அவற்றை சாதிப்பது கஷ்டமாக - வலிதருவதாக - இருக்கலாம்.

சிந்தனை உயர்வானதாக இருந்ததால் மலினமான - தவறான - கீழ்த்தரமான - செயல்களைச் செய்ய அது இடமளிக்காது.

எனவே, சிந்தனையை - எண்ணத்தை - நெறிப்படுத்தி செயலை வளப்படுத்துவோம்.

# கட்டட நிர்மாணத் தேவைகளுக்கு குடத்தனையில் இருந்து போதிய மணல்

## யாழ்.மாவட்டச் செயலகம் அறிவிப்பு

கொக்குவில்.ஏப்.24

குடாநாட்டின் கட்டட நிர்மாணத் தேவைகளுக்குப் போதிய மணலைக் குடத்தனையில் இருந்து பெற்றுக்கொள்ள உரிய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்று யாழ். மாவட்டச் செயலகம் அறிவித்துள்ளது.

இது விடயமாக மாவட்டச் செயலகம் விடுத்துள்ள செய்திக் குறிப்பு வருமாறு:

குடாநாட்டின் கட்டட நிர்மாணத் தேவைகளுக்கான மணலைக் குடத்தனையில் இருந்து சட்டபூர்வமாக அகழ்ந்து விற்பனை செய்வதற்கு வடமராட்சி கிழக்கு புனர்வாழ்வு. புனரமைப்பு நிறுவனத்துக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

எனவே, மணலைப் பெற விரும்புவோர் மேற்படி நிறுவனம் அமைந்துள்ள உபய கதிர்காமம், புலோலி என்ற முகவரியுடன் தொடர்புகொள்ள வேண்டும். பின்னர் மணலைக் கொள்வனவு செய்து கொண்டு செல்வதற்கான வழி அனுமதிப் பத்திரத்தை வடமராட்சி கிழக்கு உதவி அரச அதிபரின் தும்பளையில் உள்ள உப அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளமுடியும்.

இவ்வாறான நடைமுறையைவிடுத்து, சட்டவிரோதமாகத் தனியார் காணிகளிலும், அனுமதிக்கப்படாத இடங்களிலும் இருந்து மணலை அகழ்ந்து அதிக விலையில் விற்பனை செய்வோரிடம் இருந்து பொதுமக்கள் மணலைக் கொள்வனவு செய்கின்றனர் என யாழ்.அரச அதிபருக்கு பல முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

எனவே, இத்தகைய முறைகேடுகள் எதிர்காலத்திலும் இடம்பெறாதவகையில் பொதுமக்கள் தமக்குத் தேவையான மணலை வடமராட்சி கிழக்கு புனர்வாழ்வு, புனரமைப்பு நிறுவனத்துடன் தொடர்பு கொள்வதன் மூலம் பெற்றுக்கொள்ள முடியும். அவ்வாறு மணல் கொள்வனவு செய்வதனால் பொதுமக்கள் நியாயமான விலையில் மணலைப் பெறுவதுடன் அங்கீகாரமின்றி சட்டவிரோதமாக மணல் அகழும் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்த உதவலாம் - என்று அதில் உள்ளது.

(எ-76)

# திருடப்பட்ட மின் இலத்திரனியல் உபகரணங்கள் பொலீஸாரால் மீட்பு

யாழ்ப்பாணம்.ஏப்.24

குடாநாட்டில் திருடப்பட்டதாகச் சந்தேகிக்கப்படும் மின் இலத்திரனியல் உபகரணங்களை யாழ்.பொலீஸ் நிலையக் குற்றத் தடுப்புப் பிரிவுப் பொலீஸார் மீட்டுள்ளனர்.

கையடக்கத் தொலைபேசி ஒன்று திருடப்பட்டது தொடர்பான முறைப்பாடு ஒன்று கடந்த 15ஆம் திகதி யாழ்.பொலீஸில் செய்யப்பட்டது என்றும் -

இதனையடுத்து, இந்தத் திருட்டுச் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் எனச் சந்தேகிக்கப்படும் நால்வரை யாழ்.பொலீஸ் நிலையக் குற்றத் தடுப்புப் பிரிவுப் பொறுப்பதிகாரி விதானகே தலைமையில் சென்ற பொலீஸ் குழுவினர் கைது செய்தனர் என்றும் - கூறப்பட்டது.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களில் இருவர் நாவாந்துறையையும் மற்றைய இருவரும் கொக்குவிலையும் சேர்ந்தவர்கள் என்று பொலீஸார் தெரிவித்தனர்.

மேற்படி திருட்டுச் சந்தேக நபர்களிடம் பொலீஸார் தொடர்ந்து விசாரணைகளை மேற்கொண்டனர். இதன்போது இவர்கள் வழங்கிய தகவல் ஒன்றின் அடிப்படையில் மானிப்பாய்ப் பகுதியிலுள்ள வீடு ஒன்றிலிருந்து சுமார் 50 ஆயிரம் ரூபா பெறுமதியான மின் இலத்திரனியல் உபகரணங்கள் கைப்பற்றப்பட்டன.

இதேவேளை, திருட்டுச் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் எனச் சந்தேகிக்கப்படும் நால்வரும் யாழ்.நீதிமன்றின் உத்தரவுக்கு அமைய எதிர்வரும் 26ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

மீட்கப்பட்ட பொருள்களில் சீ.டீ.பிளேயர், கையடக்கத் தொலைபேசியின் பற்றிகள், மின்விசிறிகள் என்பன அடங்குகின்றன என்றும் -

இந்தப் பொருள்களுக்குரியவர்களை யாழ்.பொலீஸ் நிலையக் குற்றத்தடுப்புப் பிரிவுடன் தொடர்புகொள்ளுமாறும் கேட்கப்பட்டுள்ளது.

(எ-7)



மானிப்பாய் பகுதியிலுள்ள வீடு ஒன்றிலிருந்து மீட்கப்பட்ட மின் இலத்திரனியல் உபகரணங்களுடன் யாழ்.பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி விதானகே தலைமையிலான பொலீஸ் குழுவினரைப் படத்தில் காணலாம். (படம்: பிரபா)

# பயிற்சி நிலையங்கள் வடமராட்சியில் திறப்பு

செம்பியன்பற்று.ஏப்.24

வடமராட்சி கிழக்கில் இரு இடங்களில் பெண்களுக்கான தொழிற்பயிற்சி நிலையங்கள் திறந்து வைக்கப்பட்டுள்ளன.

போரினாலும், சுனாமி அனர்த்தத்தினாலும் உழைப்பாளர்களை இழந்த-குறிப்பாக கணவன்மார்களை இழந்த-குடும்பங்களைச் சேர்ந்த பெண்களுக்கென கட்டைக்காடு, செம்பியன்பற்று ஆகிய இடங்களில் இந்தத் தொழிற்பயிற்சி நிலையங்கள் அண்மையில் திறந்துவைக்கப்பட்டுள்ளன.

தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் நிதி உதவியுடன் உழைக்கும் மகளிர் அபிவிருத்தி நிறுவனத்தின் நேரடி நெறிப்படுத்தலில் இந்த தையல் பயிற்சி நெறியை ஆரம்பித்துள்ளது. தையல் பயிற்சி நெறியின் ஆரம்ப நிகழ்வில் தமிழர் புனர்வாழ்வுக்கழகத் தொண்டர்கள், போராளிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (எ-36)

## உதயவாக்கு

வாழ்க்கையின் உண்மைப் பொருளை அறியாமல் தேவையற்றதைச் செய்து உயிரை மாய்த்துக் கொண்டு அமைதியிழந்து போவது மதியீனம்.

**– மார்க்க அரேலியர்.**

## நாளை

*சித்திரை 12*
*திங்கட்கிழமை*
*25.04.2005*
*திதி : பிரதமை*
*பிற்பகல் 03.07 வரை*
நட்சத்திரம் : *சுவாதி*
*முற்பகல் 9.05 வரை*
*சுபநேரம் : 12.00 - 01.30*
*ராகுகாலம் : 07.30 - 09.00*
*(யாவும் பழைய நேரப்படி)*

# கிராமப் புற மாணவர்களுக்கு மாலைநேர விசேட வகுப்புகள்

## சர்வதேச மாணவர் பேரவை நடத்தும்

யாழ்ப்பாணம்.ஏப்.24

கிராமப்புறங்களில் வசிக்கும் மாணவர்களுக்கு மாலை நேர விசேட வகுப்புகளை நடத்தும் திட்டம் ஒன்றைச் சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை ஆரம்பித்துள்ளது.

பின்தங்கிய கிராமங்களில் வசிக்கும் மாணவர்களின் கல்வித்தரத்தை மேம்படுத்தும் நோக்கத்துடன் இத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக சர்வதேச மாணவர் பேரவையின் பொறுப்பாளர் எஸ்.கண்ணன் தெரிவித்தார்.

மேற்படி வறுமைக்கோட்டுக்கு உட்பட்ட மாணவர்களின் விவரங்கள் திரட்டப்பட்டு கிராமமட்டத்திலுள்ள பொதுக்கட்டடம் ஒன்றில் வகுப்புகள் நடத்தப்படவுள்ளன என்றும் -

- இவ்வாறு கற்றல் நடவடிக்கையில் ஈடுபடுகின்ற ஆசிரியர்களுக்குரிய மாதாந்த வேதனத்தையும் கல்விகற்கும் மாணவர்களுக்குரிய கற்றல் உபகரணங்களையும் சர்வதேச மாணவர் பேரவை வழங்கும் என்றும் - அவர் மேலும் தெரிவித்தார்.

முதற்கட்டமாக சுழிபுரம், குருநகர், கொக்குவில் போன்ற பகுதிகளில் வசிக்கும் மாணவர்களுக்கு அவ்வப்பகுதிகளில் உள்ள சனசமூகநிலையங்களில் மாலை நேரக் கற்பித்தல் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

மேற்படி கற்பித்தல் செயற்றிட்டத்தைத் தத்தமது கிராமங்களில் ஆரம்பிக்க விரும்பும் கிராமத் தலைவர்கள் திருநெல்வேலியிலுள்ள மாணவர் பேரவையின் அலுவலகத்துடன் தொடர்புகொள்ளும் பட்சத்தில் சம்பந்தப்பட்ட கிராமங்களுக்கும் இத்திட்டம் விஸ்தரிக்கப்படும் என்றும்- கூறப்பட்டது.

(எ-13)

# புற்றுநோயாளர்களுக்கு மருத்துவ ஆலோசனை

நெடுந்தீவு.ஏப்.24

நெடுந்தீவுப் பகுதியில் இதுவரை இனங்காணப்பட்ட புற்றுநோயாளர்களைப் பார்வையிட்டு அவர்களுக்கு ஆலோசனை வழங்குவதற்காகவும் -

புற்றுநோயால் பாதிக்கப்பட்டவர்களை இனங்காண்பதற்குமான மருத்துவ முகாம் ஒன்று இன்று காலை 9 மணிக்கு நெடுந்தீவு மாவட்ட வைத்திய சாலையில் இடம்பெறவுள்ளது.

புற்றுநோய் வைத்திய நிபுணர் டாக்டர் என்.ஜெயக்குமார் தலைமையில் யாழ். மருத்துவபீட சமுதாய மருத்துவத் துறையினரும், யாழ்.போதனா வைத்தியசாலையின் புற்றுநோய்த் தடுப்புப் பிரிவினரும் பிரதி மாகாண சுகாதார சேவைகள் பிரிவினரும் இணைந்து இந்த மருத்துவ முகாமினை நடத்தவுள்ளனர். (எ-112)

# பௌராணிகர்களைக் கௌரவிக்க சைவ பரிபாலன சபையினர் ஏற்பாடு

யாழ்ப்பாணம்,ஏப்.24

புராண படனம் மூலம் சமயப் பணி புரிந்துவரும் பௌராணிகர்களைக் கௌரவிக்கும் செயற்றிட்டம் ஒன்றை யாழ். சைவ பரிபாலன சபையினர் ஆரம்பிக்க உள்ளனர்.

இது தொடர்பாக, யாழ். சைவ பரிபாலன சபையின் செயலாளர் சைவப் புலவர் மு.திருஞானசம்பந்தபிள்ளை விடுத்துள்ள செய்திக் குறிப்பில்:-

யாழ்ப்பாணத்தின் பண்பாட்டு மரபில் புராண படனத்துக்கு முக்கிய இடம் உண்டு. இந்தப் புராண படனத்தை நிகழ்த்துவதன் மூலம் சமயப் பணி செய்து வருபவர்கள் பௌராணிகர்கள். இவர்களின் சமயப் பணி காரணமாகக் கந்தபுராணம், பெரியபுராணம், திருவாதவூரடிகள் புராணம் எனப் பல்வேறு புராணங்களும் இன்றும் எமது மக்கள் மத்தியில் செல்வாக்கைப் பெற்றுள்ளன.

இவ்வாறு புராணங்களைப் படிப்பதிலும், அவற்றுக்குப் பொருள் (பயன்) கூறுவதிலும் தம்மையே அர்ப்பணித்துள்ளவர்களைக் கௌரவிக்க வேண்டியது எமது முக்கிய கடமை. இந்தப் பணியை யாழ். சைவ பரிபாலன சபையினர் முன்னெடுக்கத் தீர்மானித்துள்ளனர்.

எனவே, குடாநாட்டில் வசிக்கும் பௌராணிகர்கள் தமது சுயவிவரங்களை எதிர்வரும் 27ஆம் திகதிக்கு முன்னர் '66, கல்லூரி வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம்' என்னும் முகவரிக்குத் தபால் மூலம் அறியத்தந்து கௌரவிப்புப் பணி சிறப்புற உதவ வேண்டும் - என்று அதில் உள்ளது. (எ)

# பழைய விவகாரங்கள் குறித்து மோதும் சீனாவும் ஜப்பானும்; அதன் மத்தியில் ஆசிய - ஆபிரிக்கத் தலைவர்கள் மாநாடு

அணிசேரா நாடுகள் அமைப்புக்கு கால்கோள் இட்ட ஆசிய - ஆபிரிக்க நாட்டுத் தலைவர்களின் உச்சிமாநாட்டின் பொன்விழா இந்த வாரத்தில் இந்தோனேஷியத் தலைநகர் ஜகார்த்தாவில் கோலாகலமாக ஆரம்பமாகியுள்ளது.

இந்த மாநாட்டில் 85நாடுகளைச் சேர்ந்த 50 உயர்மட்டத் தலைவர்களுடன் 85 அரசபிரதிநிதிகள் கலந்துகொள்வார்கள் என்று எதிர்பார்க்கப்பட்டது.

1955 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 18ஆம் திகதி இந்தோனேஷியாவின் பாண்டுங் நகரில் முதன்முதலாக இவ்வித ஆசிய - ஆபிரிக்க மாநாடு நடைபெற்றது. அந்த மாநாட்டின் பெறுபேறாகவே அணிசேரா நாடுகளின் அமைப்பு தோன்றியது.

அவ்வேளை, புதிதாகச் சுதந்திரம் பெற்றிருந்த ஆசிய-ஆபிரிக்க நாடுகள் மேலாதிக்க வல்லரசுகளின் பிடியில் சிக்கிவிடும் அபாயத்தை எதிர்நோக்கி நின்றன. சுதந்திரம் பெற்ற ஆரம்ப காலமானதால் மேற்கு அல்லது கிழக்கு வல்லரசு அணிகள் ஒன்றில் சேர்ந்து கொண்டால்தான் உலகப் பொருளாதார வளர்ச்சியுடன் தாக்குப்பிடிக்க முடியும் என்ற நிலை உருவாகியிருந்தது. அரும்பாடுபட்டுத் தேடிக்கொண்ட சுதந்திரத்தை வல்லரசுகளிடம் அடகுவைக்க வேண்டிய நிலை ஏற்படுவதைப் பல நாடுகள் விரும்பவில்லை. அதன் காரணமாக சில சுயேச்சை சிந்தனை கொண்ட ஆசிய - ஆபிரிக்கத் தலைவர்களின் முயற்சியால் பாண்டுங்கில் இத்தகையவர்களின் முதல் உச்சிமாநாடு நடைபெற்றது. அந்த மாநாட்டின் பெறுபேறாக அணிசேரா நாடுகளின் அமைப்பு உருவாகியது. அமைதி விரும்பும் மக்களின் அமைப்பாக அது உருப்பெற்றது.

இந்தியாவின் ஜவஹர்லால் நேரு, செக்கோஸ்லாவியாவின் மார்ஷல் டிட்டோ, சீனாவின் சூஎன்லாய், கியூபாவின் பிடல் காஸ்ரோ, இந்தோனேஷியாவின் ஜோஜோ, பர்மாவின் நீவின், இலங்கையின் சேர்ஜோன்கொத்தலாவலை போன்றவர்கள் பாண்டுங் மாநாட்டில் கலந்துகொண்ட அன்றைய தலைவர்களில் சிலராவர். ஆசிய - ஆபிரிக்க தலைவர்களின் உச்சி மாநாடு இன்று பாண்டுங் நகரில் ஞாபகார்த்த மரம் நடும் வைபவத்துடன் முடிவுபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. முதல் மாநாடு நடைபெற்ற இடத்தில் இன்று இந்த நினைவு மரம் நடப்படவிருக்கின்றது.

இம்முறை மாநாட்டில் கலந்துகொள்பவர்களில் ஜப்பானியப் பிரதமர் ஜீனிசிரோ கொய்சுமியும் மக்கள் சீனக்குடியரசின் ஹூ ஜின் டாவோ, ஐ.நா.செயலாளர் நாயகம் கொபி அனான், தென்னாபிரிக்க அதிபர் தாபோ எம்பெக்கி ஆகியோர்கள் குறிப்பிடக் கூடியவர்கள்.

ஜப்பானுக்கும் - சீனாவுக்குமிடையில் மிக அண்மைக்காலத்தில் தலைதூக்கியுள்ள பழைய விடயங்கள் தொடர்பான சர்ச்சைகள் இந்த மாநாட்டில் ஆராயப்படும் சாத்தியம் இருக்கவில்லை - என்றாலும் இரு தரப்பினரும் மாநாட்டுக்கு வெளியில் இதுபற்றிப் பேசும் வாய்ப்பை ஏற்படுத்திக்கொள்வார்களா என்பது குறித்துத் தெரியவரவில்லை. இரண்டாவது உலக மகா யுத்தத்தின்போது ஜப்பானியரால் சீனாவில் நிகழ்த்தப்பட்ட கொடூரங்கள் பற்றிய விவரங்கள் அந்நாட்டின் தேசிய கல்விப் பாடப்புத்தகங்களில் குறைத்து மதிப்பீடு செய்யப்பட்டிருப்பதை டோக்கியோ அரசு ஏற்றுக்கொண்டிருப்பது சீனாவின் கடும் கோபத்தைத் தூண்டிவிட்டிருக்கின்றது. சீனாவிலுள்ள ஜப்பானியத் தூதரகம் முன்பாக ஆவேசமான ஆர்ப்பாட்டங்கள் நடந்துள்ளன. பல நகரங்களிலும் ஜப்பானுக்கு எதிராக ஆர்ப்பாட்டங்கள் நடந்துள்ளன.

ஜப்பானியத் தூதரகத்தின் முன் நடந்த ஆர்ப்பாட்டங்களுக்குச் சீனா, கவலை தெரிவிக்க வேண்டும் என்கின்றது ஜப்பான். அதேபோல், உலகப் போரின்போது செய்த அட்டூழியங்களுக்கு ஜப்பான் பரிகாரம் செய்யவேண்டும் என்று சீனா எதிர்பார்க்கின்றது. ஐ.நா.பாதுகாப்புச் சபையில் நிரந்தர உறுப்புரிமை கோரிநிற்கும் ஜப்பான், சீனாவுடன் சற்று அடக்கி வாசித்து நிலைமைகளைச் சமாளித்துக்கொள்ளவேண்டும் என்று மேற்கு நாடுகள் எதிர்பார்க்கக்கூடும். ஏனென்றால், பாதுகாப்புச் சபையில் 'வீட்டோ' அதிகாரத்துடன் சீனா ஏற்கனவே, இருந்து வருவது ஜப்பானுக்குப் பாதகமாக அமையலாம். மேலும் ஏற்கனவே, பாதுகாப்புச் சபையில் இந்தியா இடம்பெறுவதை ஆதரிப்பதாகச் சீனா அறிவிக்கின்றது.

ஆசிய அண்டை நாடுகளில் உலக யுத்தத்தின்போது இடம்பெற்றுவிட்ட அட்டூழியங்களுக்காக ஜப்பான் ஏற்கனவே வருத்தம்தெரிவித்துள்ளது. ஆனால், பாடப்புத்தகங்களில் அவ்வாறான அட்டூழியங்கள் மறைக்கப்பட்டிருப்பதை அரசு அங்கீகரித்திருப்பதாகக் கூறிச் சீனர்கள் எதிர்க்கின்றார்கள்.

1931-1945 வரையான காலத்தில் - ஜப்பானியர் சீனாவில் ஆக்கிரமித்திருந்த காலத்தில் - புரிந்துவிட்ட அட்டூழியங்களுக்கு அவர்கள் பரிகாரம் செய்யவேண்டும் என்று கூறும் சீனர்கள், ஜப்பானியத் தூதரகக் கட்டடங்களின் முன்பும் வர்த்தக நிலையங்கள் முன்பும் - வீதிகளிலும், ஆக்ரோஷமான ஆர்ப்பாட்டங்களை நடத்தினார்கள்; கற்களையும் வீசிச் சேதம் விளைவித்தார்கள். பாதுகாப்புச் சபையில் ஜப்பான் நிரந்தர இடம்கோருவதையும் சீனர்கள் எதிர்க்கின்றார்கள்.

◆◆◆

## பாக்.–இந்திய தலைவர்களின் கிரிக்கெட் 'ராஜதந்திரம்'

**முஷரப்பின் இந்திய விஜயமும் பெறுபேறும்**

விளையாட்டு விளையாட்டாகவே இருக்க வேண்டும். அதுவினையாகப் போய்விடக் கூடாது.

ஆனால், சில சமயங்களில் விளையாட்டு எதிர்பாராத விதமாக நல்ல காரியங்களையும் செய்யும் என்பது இந்தியாவில் கிரிக்கெட் போட்டியைப் பார்க்க வந்த பாகிஸ்தான் அதிபரின் விஜயத்தின் பெறுபேறுகள் காட்டுகின்றன.

இந்தியாவும் - பாகிஸ்தானும் மிக நெருங்கிய அண்டை நாடுகள். கடல், நிலம், வானம் ஆகிய மூன்றினாலும் பிரிக்கப்படாதவை. ஆக, எல்லைக்கோடுகளே இவைகளைப் பிரிக்கும் வரையறைகள். அதைவிட, இந்த இருநாடுகளிலும் இரத்த உறவுள்ள, சமயத்தால், மொழியால், கலையால் கலாசாரத்தால் கூட உறவுள்ள மக்கள் அங்குமிங்குமாக வாழ்கிறார்கள். அவ்வளவு ஏன் பாகிஸ்தான் அதிபரும் கூட இந்தியத் தலைநகரில் பிறந்தவர்தான். அவரது பூர்வீகக் குடிமனை இந்தியாவில் தான் உள்ளது. அதேபோல், இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கும் பிரிவினைக்கு முன்னர் பாகிஸ்தானில் பிறந்தவரே.



பாக்.அதிபர் பர்வேஷ்முஷாரப் (நடுவில்) இந்தியக் குடியரசுத் தலைவர் அப்துல்கலாம் (இடது) இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்- மூவரும் புதுடில்லியில் உரையாடும் காட்சி.

அண்மையில் இந்தியாவுக்கு விஜயம் செய்த அதிபர் முஷாரப்பின் தாயார் அவர்களது பூர்வீக வீட்டைப் போய்ப்பார்த்திருக்கிறார். மகன் முஷாரப் பிறந்த மருத்துவமனையில் அவரது பிறப்புச் சான்றிதழ் கிடைக்குமா என்றும் கேட்டிருக்கிறார்.

ஆவணங்களை ஆராய்ந்து பார்த்த அதிகாரிகள், அதிபர் முஷாரப்பினுடைய சான்றிதழ் மட்டுமன்றி அவரது உடன்பிறப்புக்களின் சான்றிதழ்களையும் தேடி எடுத்திருக்கிறார்கள். இந்தச் சான்றிதழ்களை இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங் அதிபர் முஷாரப்புக்கு அவரது வருகையின் நினைவுப் பரிசாக வழங்கியிருக்கிறார்.

அதிபர் முஷாரப்பின் இந்திய வருகையை இரு தரப்புத் தலைவர்களும் உறவுகளைக் கட்டியெழுப்புவதற்குப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள் என்பது அவர்களின் அரசியல் ஞானத்தையும் தூரப்பார்வையையும் காட்டுகின்றது.

பிணக்குகளுக்கு முகம் கொடுத்துள்ள இரு தரப்புகள் கிடைக்கும் சந்தர்ப்பங்களை எவ்வாறு நன்மாற்றங்களுக்காகப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும் என்பதை எடுத்துக் காட்டியுள்ளது.

அதிபர் முஷாரப் புதுடில்லியில் வந்து இறங்கியவுடனே, பத்திரிகையாளர்களிடம் பேசும்போது, எமது இரு தரப்புகளுக்குமிடையிலான, காஷ்மீர் உட்பட்ட பிரச்சினைகளை இந்தத் தனித்துவமான சந்தர்ப்பத்தில் கவனத்தில் எடுத்துக்கொள்ளவேண்டும் என்று குறிப்பிட்டார். அஜ்மீரில் மசூதியொன்றில் தொழுகை நடத்தியபின் பத்திரிகையாளர்களிடம் பேசியபோது, எமது பொறுப்புகளை உணர்ந்து, பிரச்சினைகளைத் தீர்த்து, எதிர்காலச் சந்ததியினருக்கு நல்ல எதிர்காலத்தைக் கட்டியெழுப்ப வேண்டும் என்று கூறினார்.

இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கும் அதேதொனியில் விருந்தொன்றில் பேசும்போது இரு நாடுகளிலுமுள்ள அரசியல் தலைவர்களுக்கு இந்த உயர்ந்த இலட்சியத்தை நிறைவேற்ற வேண்டிய கடமையிருக்கிறது என்றார்.

இரு நாடுகளுக்குமிடையில் நம்பிக்கைகளைக் கட்டியெழுப்பும் விதத்தில் பல புதிய நடவடிக்கைகளை இந்தியா அறிவித்துள்ளது.

கட்டுப்பாட்டுக் கோடுகளுக்கிடையில் இரு தரப்புகளும் சந்தித்து உறவாடிக்கொள்வதற்கான இடங்களை அறிவிப்பது இமாலயப் பகுதியில் உல்லாசப் பயணத்துறையைக் கூட்டு முறையில் முன்னெடுப்பது, அதிக அளவில் கலாசாரப் பரிவர்த்தனைகளை மேற்கொள்வது, எல்லைகளுக்குக் குறுக்கே வியாபாரத்தை விருத்தி செய்வது, பஸ் போக்குவரத்துக்களை அதிகரிப்பது போன்ற விடயங்களைத் தீவிரப்படுத்த இந்தியா யோசித்துள்ளது.

இந்த முறையில் காஷ்மீர் பிரச்சினைக்குப் படிப்படியாகத் தீர்வு காணமுடியும் என்று இருதரப்பும் கருதுவதாகத் தெரிகிறது.

## புதிய பாப்பரசரின் உருக்கமான ஆசீர்வாதம்



புதிய பாப்பரசர் 16ஆவது ஆசீர்வாதப்பர் சென்.பீற்றர்ஸ் தேவாலய யன்னல் வழியாக மக்களுக்கு கையசைக்கிறார்.

**அன்பிற்குரிய சகோதர சகோதரிகளே!**

'அன்பிற்குரிய சகோதரர்களே சகோதரிகளே! இறைவனின் திராட்சைத் தோட்டத்தில் ஒரு பணிவான ஊழியனாகிய என்னை மிகச் சிறந்த பாப்பரசர் இரண்டாவது அருளப்பர் சின்னப்பருக்குப் பிறகு கர்தினால்கள் தெரிவுசெய்திருக்கிறார்கள்'.

சென்.பீற்றர் தேவாலயத்தில் யன்னல்வழியாக அங்கே கூடிநின்ற இரண்டு லட்சம் மக்களுக்கு மேற்பட்டவர்களைப் பார்த்து கடந்த புதன்கிழமை புதிதாகத் தெரிவுசெய்யப்பட்ட பாப்பரசர் (Be nedict XVI) 16ஆவது ஆசீர்வாதப்பர் இவ்வாறு கூறினார். மக்கள் வெள்ளம் உணர்ச்சி வசப்பட்ட நிலையில் ஆரவாரத்தோடு வேகமாகக் கைகளை அசைத்தபடி தமது மகிழ்ச்சியை வெளிப்படுத்தியது. புன்னகையோடு கைகளை உயர்த்த அதை அவர் ஏற்றுக்கொண்டு ஆசீர்வதித்தார்.

உலகம் முழுவதும் வாழ்கின்ற 1.1 பில்லியன் றோமன் கத்தோலிக்கர்களை வழிநடத்தும் தலைவராக ஜேர்மனியரான பழைய சம்பிரதாயங்களை ஆதரிக்கும் 78 வயதான ஜோசெப் றட்சிங்கர் தெரிவுசெய்யப்பட்டிருக்கிறார். இன்று ஞாயிற்றுக்கிழமை சம்பிரதாயபூர்வமாகப் பாப்பரசர் 16ஆவது ஆசீர்வாதப்பர் என்ற பெயருடன் திருநிலைப்படுத்தப்படுவார்.

புதிய பாப்பரசர் தேவாலயத்தின் யன்னல் வழியாக நிகழ்த்திய சிறிய உரையில், 'நாம் முன்னோக்கிச் செல்வோம். தேவன் எமக்கு அருள்புரிவார். அவருடைய மிக உன்னதமான அன்னை மேரி எம்முடன் இருக்கிறார்' என்று கூறினார்.

16ஆவது ஆசீர்வாதப்பருக்கு உலகம் முழுவதுமிருந்து வாழ்த்துக்களும் பாராட்டுக்களும் வந்து குவிந்தவண்ணமிருந்தன.

புதிய பாப்பரசரின் பழைய சம்பிரதாயங்களில் இறுக்கமான கருத்துக்கள் குறித்து சில வட்டாரங்கள் கவலையும் எதிர்ப்பும் தோன்றியிருப்பதாகக் கூறப்படுகின்றது. ஆனால், அவை கவனத்துக்குரியவையல்லவென்று கருதப்படுகின்றது.

**மக்கள் திண்டாட மன்னர் கொண்டாட்டம்**

சுவாஸிலாந்தின் மக்கள், உணவுக்கும் மற்றும் தேவைகளுக்கும் திண்டாடிக் கொண்டிருக்கும் நிலையில், அந்நாட்டின் அரசர் தனது பிறந்தநாளை அதிவிமரிசையாகப் பெரும் எடுப்பில் கொண்டாடியுள்ளார்.

சுவாஸிலாந்து மக்கள் வறுமையால் வாடுகின்றார்கள். பெரும்பாலானவர்களுக்கு எயிட்ஸ் நோய். அந்தநாட்டின் முழு அதிகாரம் கொண்ட மன்னர் மூன்றாவது மெஸ்வத்தி தனது 37 ஆவது பிறந்ததினத்தை இலட்சக்கணக்கான டொலர்கள் செலவுசெய்து கொண்டாடினார்.

தென்னாபிரிக்க நாடான சுவாஸிலாந்தை 18 வயதிலிருந்து ஆட்சி புரிந்துவருகின்றார் இவர். கண்மூடித்தனமாகச் செலவுசெய்யும் இந்த மன்னருக்கு ஏழு மனைவிமார்.

பிறந்தநாளைப் பிரமாதமாகக் கொண்டாடிய மன்னர், அங்கு கூடியிருந்த மக்கள் முன் பேசுகையில், தாம் பிறந்தது முதல் தமது நாடு ஆசீர்வதிக்கப்பட்டு வந்துள்ளதாகக் கூறினார். 37 ஆண்டுகளுக்கு முன்பு நான் பிறந்ததிலிருந்து கடவுள் எம்மைக் கவனித்துவருகிறார் என்று கூறிய அவர் தனது பிறந்தநாள் தேசிய முக்கியத்துவமான நாள் என்றும் கூறிக்கொண்டார்.

◆◆◆

**அமெரிக்காவின் பங்காளி**

அமெரிக்க ராஜாங்க அமைச்சர் கொண்டலிஸா ரைஸ் ரஷ்யாவைத் தமது நாட்டின் மிக முக்கிய பங்காளி என்று வர்ணித்துள்ளார்.

ஏற்கனவே, ஜனநாயகவழிமுறையைக்கடைப்பிடிப்பதில் ரஷ்யா முனைப்புக் காட்டவில்லை என்றவாறு குறைகூறியிருந்த ரைஸ் அம்மையார், புதன்கிழமை ரஷ்ய அதிபர் புடினைச் சந்திப்பதற்கு முன்பதாக மாஸ்கோ வானொலியில் பேசினார்.

ரஷ்யா ஒருமுக்கிய எதிரியல்ல, ரஷ்யாவுக்கு




எதிரானவர்கள் அல்ல நாங்கள், பயங்கரவாதத்துக்கெதிரானபோரில் ரஷ்யாவை ஒரு முக்கியமான பங்காளியாகவே நாங்கள் பார்க்கின்றோம் என்று கூறினார் ரைஸ். செவ்வாய்க்கிழமை மாஸ்கோவில் வந்திறங்கியதும் ரஷ்யா மீது அவர் கொட்டித் தீர்த்த கோபக்கணைகள் யாவும் மாஸ்கோ வானொலிப் பேட்டியில் அடக்கி வாசிக் கப்பட்டுவிட்டது.

ரஷ்யாவில் அதிகாரங்கள் அனைத்தையும் மத்தியில் குவித்துக்கொள்ள புடின் முயல்வது தங்களுக்கு கவலையளிப்பதாகவும் ரஷ்யாவின் ஜனநாயகம் சார்பான போக்கு சாதகமாக இல்லையென்றும் ரைஸ் முன்பு கூறியிருந்தார்.

ரஷ்யா தனது சொந்த வழியைக்காண முயல்கிறது. அதை நாங்கள் மதிக்கின்றோம். நாங்கள் என்ன சொல்லவிரும்புகிறோம் என்றால், அமெரிக்க - ரஷ்ய உறவுகள் ஆழமாக வேண்டுமானால் - ரஷ்யா தன் முழுச்சக்தியையும் பெறவேண்டுமானால் - ஜனநாயக மட்டத்திலான அபிவிருத்தி இருக்கவேண்டும். அதிபரிடம் மட்டுமே பெரும் அதிகாரம் குவிந்து கிடக்கலாகாது என்று ரைஸ் கூறியிருந்தார்.

பின்னர் மாஸ்கோ வானொலி நிகழ்ச்சியில், பெருமளவில் உயிர்களை அழிக்கும் ஆயுதங்களைக் கட்டுப்படுத்தும் விடயத்தில் ரஷ்யாவை மிக முக்கிய பங்காளியாக அமெரிக்கா கருதுவதாகக் கூறினார். பால்கன் மற்றும் மத்திய கிழக்குப் பிரச்சினைகளைத் தீர்ப்பதிலும் ரஷ்யாவை அமெரிக்கா ஒரு பங்காளி நாடாகக் கருதுகின்றது என்றும் ரைஸ் கூறினார்.

◆◆◆

**சாத்தானின் படைப்பு**

வெள்ளையர்கள் எல்லாரும் சாத்தானால் உருவாக்கப்பட்டவர்கள் என்று கூறும் நூல் ஒன்று நோர்வேயில் இரகசியமாக விற்பனை செய்யப்பட்டுள்ளது.

இதனால், ஒஸ்லோவில் வெள்ளை இனத்தவர்கள் ஆத்திரம் கொண்டுள்ளனர். இனப்பாகுபாட்டுக்கு எதிரான குழுவொன்று இந்த நூலுக்கு எதிராகப் பொலீஸில் முறைப்பாடு செய்துள்ளது.

'சாத்தானின் பிள்ளை' என்று பெயரிடப்பட்டுள்ள இந்நூல், இனந்தெரியாத ஒருவரால் 'உருது' மொழியில் எழுதப்பட்டுள்ளது.

எனது சகோதரர்களே! உலகத்திலுள்ள எல்லா மிருகங்களிலும் மிக மோசமானவன் வெள்ளைக்காரன். மனிதர்களைக் கொடுமைப்படுத்துவது தான் அவன் வேலை என்று அந் நூலில் எழுதப்பட்டுள்ளது.

※

# United Nations Development Programme
## Sustainable human development

UNDP is the UN's global development network, advocating for change and connecting countries to knowledge, experience and resources to help people build a better life. We are on the ground in 166 countries, working with them on their own solutions to global and national development challenges. As they develop local capacity, they draw on the people of UNDP and our wide range of partners.

UN DP

revitalized growth of local economies in areas directly and indirectly affected by conflict. The Government of Sri Lanka and the UNDP Transition Programme, work in partnership to ensure that the programme provides maximum support to the government's ongoing development initiatives.

### SENIOR PROGRAMME OFFICER – KILINOCHCHI, MANNAR & VAVUNIYA

Under the supervision of the Field Coordinator:

- Programme management, advisory services and supervision of Programme Unit;
- Administration and implementation of programme strategies, adapts processes and procedure;
- Support in creation of strategic partnerships and implementation of the resource mobilization ;
- Facilitation of knowledge building and knowledge sharing;
- Establishment of management targets, evaluation, and monitoring;
- Strategic oversight of planning, budgeting, implementing and monitoring of the projects, tracking use of financial resources in accordance with UNDP rules and regulations;
- Identification of sources of information related to policy-driven issues;
- Identification and synthesis of best practices and lessons learned linked to programme goals;
- Oversee preparation of project proposals and reports;
- Presentation of information/reports for identification of areas for support and interventions;
- Conduct regular field visits and assess the overall project implementation status and provide corrective measures to be undertaken, as necessary;
- Preparation of project documents drafts, work plans, budgets, proposals on implementation;
- Follow up on performance indicators/success criteria, targets and milestones;
- Analysis of the situation in programme, identification of operational and financial problems, develop ment of solutions;
- Participate and support interagency cooperation , particularly with other UN agencies, the World Bank and the Asian Development Bank, as required;
- Represent UNDP and the Transition Programme at network, donor, inter-agency and internal meetings as required;
- Analysis of information on donors, preparation of donor's profile and database, establishment of con tacts with donor counterparts;
- Support audit of Direct Execution (DEX) projects, implementation of audit recommendations;
- Provide on-the-job training to programme staff;
- Contribute to knowledge networks and communities of practice;
- Abide by all UN security regulations and UNDP policy and procedures;
- Perform any other duties as required.

**Educational Background:**
- Masters Degree, preferably with specialized certification in Business or Public Administra tion or Economics, Political or Social Sciences, is required.

**Experience:**
- 5-7 years of progressively responsible programme experience is required at the national or international level;
- Experience in the usage of computers and office software packages (MS Word, Excel,etc) and advance knowledge of spreadsheet and database packages, experience in handling of web based management systems.

**Language Requirements:**
- Excellent command of English and Tamil;
- Ability to communicate in Sinhala an asset.

**Operational skills:**
- Ability to work as a member of a multi-disci plinary and multi-cultural team;
- Strong negotiation and interpersonal skills with good initiative and sound judgment;
- Motivated, flexible and capable of working under pressure;
- Willingness to travel within Sri Lanka;
- Willingness to work out of normal office.

### PROGRAMME OFFICERS – COLOMBO, KILINOCHCHI & MULLAITIVU

**Under the Supervision of the Senior Programme Officer:**

- Administration and implementation of programme strategies, adapts processes and procedures;
- Support to management of the Transition Programme programme;
- Facilitation of knowledge building and knowledge sharing;
- Presentation of researched information for preparation of Transition Programme Projects and Proposal;
- Presentation of information/ reports for identification of areas for support and interventions;
- Assist in the implementation, monitoring and evaluation of all UNDP support projects;
- Support the implementation of the Transition Programme partnerships;
- Conduct regular field visits and assess the overall project implementation status and provide corrective measures to be undertaken, as necessary;
- Preparation of project documents' drafts, work plans, budgets, proposals on implementation arrangements;
- Provision of guidance to the executing agencies on routine implementation of projects, tracking use of financial resources;
- Follow up on performance indicators/success criteria, targets, preparation of reports;
- Analysis of the situation in programme, identification of operational and financial problems, development of solutions;
- Participate and support interagency cooperation , particularly with other UN agen cies, the World Bank and the Asian Development Bank, as required;
- Support audit of Direct Execution (DEX) projects, implementation of audit recom mendations;
- Contribute to knowledge networks and communities of practice;
- Abide by all UN security regulations and UNDP policy and procedures;
- Perform any other duties as required.

**Education:**
- Bachelors Degree, preferably with specialized certification in Business or Public Administration or Economics, Political or Social Sciences is required.

**Experience:**
- 3-5 years of progressively responsible programme experience is required at the national or international level;
- Experience in the usage of computers and office software packages (MS Word, Excel, etc) and advance knowledge of spreadsheet and database packages, experience in handling of web based management systems.

**Language Requirements:**
- Excellent command of English, Sinhala and Tamil for Colombo position;
- Excellent command of English and Tamil for other districts. Knowledge of Sinhala would be an asset.

**Operational skills:**
- Ability to work as a member of a multi-disciplinary and multi-cultural team;
- Strong negotiation and interpersonal skills with good initiative and sound judgment;
- Motivated, flexible and capable of working under pressure;
- Willingness to travel within Sri Lanka;
- Willingness to work out of normal office.

### FIELD ENGINEERS (INFRASTRUCTURE) – COLOMBO, GALLE, KILINOCHCHI / MULLAITIVU

**Under the supervision of the Senior Programme Officer:**

- Developing infrastructure project processes including, project selection criteria, procurement and payments;
- Responsible for implementation of the infrastructure projects at the District and sub-district level, ensuring that activities in targeted areas are implemented, and partners work comfortably with the established procedures on tendering, con tracting and monitoring;
- Provide warning of problems to Implementing Partners, with suggestions for cor rective measures;
- Strategic oversight of planning, budgeting, implementing and monitoring of the infrastructure projects, tracking use of financial resources in accordance with UNDP rules and regulations;
- Development of schematics/engineering diagrams and drafting of them when necessary to ensure that international safety standards are adhered to;
- Preparation of BOQs and estimates for the infrastructure projects;
- Presentation of information/ reports for identification of areas for support and interventions;
- Support the Implementation of the Transition Programme partnerships and prepa ration of reports;
- Conduct regular field visits and assess the overall project implementation status and provide corrective measures to be undertaken, as necessary;
- Presentation of information for formulation of infrastructure activities, prepara- tion of project documents' drafts, work plans, budgets, proposals on implementa- tion arrangements;
- Provision of guidance to the executing agencies on routine implementation of projects;
- Follow up on performance indicators/success criteria, targets, preparation of reports;
- Contribute to knowledge networks and communities of practice;
- Abide by all UN security regulations and UNDP policy and procedures;
- Perform any other duties as required.

**Educational Background:**
- Bachelors Degree in Civil Engineering or Structural Engineering, preferably with specialized certification in Construction Management is required.

**Experience:**
- 3-5 years of progressively responsible experience in implementation and monitoring of small-scale infrastructure projects is required at the national or international level;
- Experience in the usage of computers and office software packages (MS Word, Excel, etc) and advance knowledge of spreadsheet and database packages, experience in handling of web based management systems.

**Languages:**
- Excellent command of English, Sinhala and Tamil for Colombo;
- Excellent command of English and Sinhala for Galle. Knowledge of Tamil would be an asset:
- Excellent command of English and Tamil for other districts. Knowledge of Sinhala would be an asset.

**Operational skills:**
- Ability to work as a member of a multi-disciplinary and multi-cultural team;
- Strong negotiation and interpersonal skills with good initiative and sound judgment:
- Motivated, flexible and capable of working under pressure;
- Willingness to travel within Sri Lanka;
- Willingness to work out of normal office.

### FIELD PROGRAMME OFFICER (FISHERIES) – AMPARA

**Under the supervision of the Senior Programme Officer:**

- Provide technical expertise and adopt effective methods to support fishery produc- tivity;
- Identify production constraints and opportunities for improvement and identifica- tion of promising technological interventions that will support fishery production;
- Identify training needs of the community related to innovations introduced and arrange appropriate training;
- Liaise with local authorities to support and strengthen existing extension service provision and stimulate a demand-responsive service;
- Support local authorities in strengthening and empowering existing community structures to participate in planning for local service provision;
- Assist in the implementation, monitoring and evaluation of all projects;
- Conduct regular field visits and assess the overall project implementation status and provide corrective measures to be undertaken, as necessary;
- Preparation of project documents drafts, work plans, budgets, proposals on implementation arrangements;
- Analysis of the situation in programme, identification of operational and financial problems,development of solutions;
- Contribute to knowledge networks and communities of practice;
- Abide by all UN security regulations and UNDP policy and procedures;
- Perform any other duties as required.

**Educational Background**
- University degree in Fisheries/Aquaculture or related field, is required.

**Experience** :
- 3-5 years experience in the field of aquaculture/inland fisheries;
- Experience in the usage of computers and office software packages (MS Word, Excel, etc) and advance knowledge of spreadsheet and database packages, experience in handling of web based management systems.

**Languages**:
- Excellent command of English and Tamil.
- Ability to communicate in Sinhala an asset.

**Operational skills:**
- Ability to work as a member of a multi-disciplinary and multicultural team;
- Strong negotiation and interpersonal skills with good initiative and sound judgement;
- Motivated, flexible and capable of working under pressure;
- Willingness to travel within Sri Lanka;
- Willingness to work out of normal office.

(Please See Page 11)

# காப்புறுதி முகவர்கள் தேவை

நெல்லியடி ஜனசக்திக் காப்புறுதிக் கம்பனிக்கு பிரதேச முகவர்கள் தேவை. ஆண், பெண் இருபாலாரும் இணைந்துகொள்ள முடியும். வயது எல்லை கிடையாது. பகுதிநேர, முழுநேர சம்பள அடிப்படையில், கொமிசன் அடிப்படையில் அரச, தனியார் திணைக்களம் சார்ந்தவர்கள் இணைந்து கொள்ளமுடியும்.

விண்ணப்பிக்கும் போது உங்கள் தொலைபேசி எண், கிராம சேவகர் நல்லொழுக்கச் சான்றிதழ், I.C போட்டோ அளவு 4 போட்டோக்கள், கல்விச் சான்றிதழ், கல்வித் தகைமைச் சான்றிதழ்கள் அடங்கிய பிரதிகளை அனுப்பிவைக்கவும். வடமராட்சியிலும் தென்மராட்சியிலும் வன்னி மாவட்டத்திலும் இருப்போர் விண்ணப்பிக்கவும். தொலைபேசி எண்ணைக் குறிப்பிட மறக்க வேண்டாம்.

தொடர்பு:
**வியாபார அபிவிருத்தி உதவியாளர்,**
சாந்தம், நவிண்டில்,
கரணவாய் மத்தி, கரவெட்டி. (44537)(46-18)

## பண்டத்தரிப்பு ஆஸ்பத்திரிக்கு பணிப்பாளர் விஜயம்

யாழ். சுகாதார சேவைபிரதி மாகாண பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் கடந்த வாரம் பண்டதரிப்பு அரசினர் கிராமிய வைத்திய சாலைக்கு நேரில் விஜயம் செய்தார்.

வைத்தியசாலையின் முக்கிய தேவைகள் மற்றும் குறைபாடுகள் பற்றி வைத்திய சாலை பொறுப்பதிகாரியிடம் அவர் விவரமாகக் கேட்டறிந்து கொண்டார். (எ-135)

# சிறப்புச் சொற்பொலிவு

புட்டபர்த்தி சத்தியசாயி உயர்கல்வி நிறுவனத்தின் பேராசிரியர் அனில்குமார் மானிப்பாய சோதி வேம்படியில் உள்ள சத்திய சாயி பாடசாலையில் எதிர்வரும் 26ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு சிறப்பு சொற்பொழிவு நிகழ்த்தவுள்ளார். இதேவேளை மேற்படி சத்தியசாயி பாடசாலை மனித மேமபாட்டு கல்வி பயிற்சிபெற்ற ஆசிரியர்கள், விரிவுரையாளர்களுக்கும் இவர் சான்றிதழ்களை வழங்கிக் கௌரவிப்பார். (எ-72)

# நெஞ்சைவிட்டு நீங்காத நினைவலைகள்





அமரர்
**வைரமுத்து பொன்னுத்துரை**
1929-06-09 தோற்றம்: 2003-04-16 மறைவு:

திருமதி
**யோகராணி சிவராஜா**
தோற்றம்: 1960-04-19 மறைவு: 1997-03-26

திதி : 24-04-2005 பூரணை

நீங்கள் எம்மைவிட்டுப் பிரிந்தாலும் உங்கள்
நினைவுகள் எம் நெஞ்சைவிட்டு அகலா!
அன்புடனும் பண்புடனும் வாழ்ந்து மறைந்த
உங்கள் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி. (44516)(46-18)

-குடும்பத்தினர்.

# இங்கிலாந்தில் உயர்கல்வியைத் தொடர ஓர் அரிய சந்தர்ப்பம்.

## Foundation Degree Programme

GCE O/L தகைமையுடன் இங்கிலாந்தில் உயர்கல்வியைத் தொடர விரும்பும் மாணவர்கள் அதற்கான பல்கலைக்கழக அனுமதியினையும், Student Visa வினையும் இலகுவாகப் பெற்றுக் கொள்வதற்கு Foundation Degree Programme துணை புரிகின்றது.

GCE O/L → Foundation Degree Programme → UK Degree



*COURSE LENGTH* 3 Months (Full Time)

*COURSE STRUCTURE*

- Computing
  Introduction to IT, Windows XP - OS, MS-Office XP, Internet & E-mail Applications, Website development, Programming Languages, Graphic Designing, Hardware & Networking
- English Reading, Writing, Listening and Speaking.
- Personality Development

விபரங்களுக்கு:
LONDON INSTITUTE OF FURTHER EDUCATION
25A, Hospital Road, Dehiwela. Tel: 011 5518666, 0777 715788
Fax: 011 5515387 E-mail: edulife@sltnet.lk

# இப்போது நாம் யாழ் நகரிலும்...



பாஸ்போட், அடையாள அட்டைகளுக்கான படங்களை உடனுக்குடன் படம்பிடித்து (10–15 நிமிடங்களில்) பிரதியாக்கம் செய்து தருகின்றோம்.

- Album Binding
- Photo Creations
- Duro Laminating
- Photo Graphing
- Digital Video

எமது நிரந்தர வாடிக்கையாளர்களுக்கு விசேடவிலைக் கழிவுகள் எமது இதரசேவைகள்.

**MOORTHY STUDIO AND DIGITAL COLOUR LAB**
62\16 Stanley Road, Jaffna. (பழைய தபாற்கந்தோர் ஒழுங்கை) T.P.: 021-2222884
Jaffna Road, Manipay.

# ஏமாற வேண்டாம்

இதோ எமது புதிய உறைகள்



**ASTRA Sun**

போலிகளால் ஏமாறாதீர்கள்

அஸ்ட்ரா, சன் நூல்களை வாங்கும் போது இப்புதிய அம்சங்களை அவதானியுங்கள்



கோட்ஸ் இலச்சினையுடன் ஹெலோகிறாம் ஸ்டிக்கர்

வடக்கில் எமது ஏக விநியோகஸ்தர்:

வைர மாளிகை — எண் 65, கண்டி வீதி, கிளிநொச்சி. தொலைபேசி / தொலைநகல் : 021-2220706.

நியு சொப்பிங் சென்ரர் — இல 131/டி. CKS ரோட், யாழ்ப்பாணம்.

தரமான தையல் நூல்களுக்கு ASTRA Sun

COATS
கோட்ஸ் திரட் லங்கா,
163, யூனியன் பிளேஸ், கொழும்பு 2.
தொலைபேசி : 2307358

SKYLINE CONCEPTS

# றோயல் தங்கப் புதையல் போட்டி

ஒன்று... இரண்டு...மூன்று ஓட்டப்போட்டியா? இல்லை றோயல் குளுக்கோஸ் தங்கப் புதையல் போட்டியில் பங்குபற்று வோருக்கு தலா ஒரு பவுண் வீதம் தங்க நாணயங்களை முதலாவது, 2ஆவது, 3ஆவது பரிசுகளாக குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்படும் அதிர்ஷ்டசாலிகளுக்கு வழங்கப்படவிருக்கிறது. நீங்கள் செய்யவேண்டியது இதுதான். றோயல் குளுக்கோஸ் (6) வெற்றுப்பெட்டிகளைச் சேகரியுங்கள். றோயல் குளுக்கோஸ் வாங்கும்போது பற்றுச்சீட்டினை நீங்கள் றோயல் குளுக்கோஸ் வாங்கும் வியாபாரியிடம் கேட்டு வாங்கத் தவறாதீர்கள். பின்பு 6 வெற்றுப் பெட்டிகளையும் பற்றுச்சீட்டினையும் இணைத்துப் பின் வரும் முகவரிக்கு அனுப்பிவையுங்கள் அல்லது நேரில் கையளியுங்கள்.

**றோயல் தங்கப் புதையல் போட்டி,**
**சிவா நறுமணப் பூங்கா,**
இல.288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 222-2567

மேற்படி போட்டியில் 31.03.2005 முதல் 31.06.2005 வரை கொள்முதல் செய்யும் பற்றுச்சீட்டுக்கள் மட்டுமே செல்லுபடியாகும்.
றோயல் குளுக்கோஸ் புயல்வேகத்தில் உங்களுக்கு இழந்த சக்தியை மீட்டுத் தருகின்றது.

வட மாகாண ஏக விநியோகஸ்தர்கள்:
**சிவா நறுமணப் பூங்கா,**
288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல: 222-2567




இறக்குமதி செய்து பொதி செய்வோர்
றோயல் இன்டஸ்ரீஸ்
கொழும்பு - 12
T.P.:- 0777- 277670, 011-4712439.

**றோயல் குளுக்கோஸ்**

பிரபல பார்மசிகளிலும்,
கடைகளிலும் கிடைக்கும். (C/41878) (54-

# உலகளாவிய தீர்மானங்களை எடுத்து அவற்றை நடைமுறைப்படுத்துகின்ற சக்தியாக அமெரிக்கா



மு.திருநாவுக்கரசு

ஈழத்தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டம் இப்போது மிக முக்கியமான கட்டத்துக்கு வந்திருக்கிறது. ஆயிரத்துத் தொளாயிரத்து ஐம்பதுகளில் இருந்து தமிழர்கள் தமது உரிமைகளைப் பெறுவதற்குச் சமஷ்டி முறையை ஒரு உகந்த தீர்வாகக் கருதினர். அதற்காகப் பல அகிம்சைப் போராட்டங்களை நடத்தினர். ஆனால், ஒற்றையாட்சி என்ற வட்டத்துக்கு வெளியே வருவதற்குச் சிங்கள அரசியல் தலைவர்கள் மறுத்தனர். அதனால், தமிழர்களின் விடுதலைப் போராட்டம், ஆயுதப் போராட்டமாக உருவெடுத்தது. இப்போது அவர்கள் பலமான நிலைக்கு வந்துவிட்ட கட்டத்தில், சமஷ்டி ஆட்சி முறையைக் கொண்டுவருவது குறித்துச் சற்றுச் சாதகமாகச் சிந்திக்கத் தொடங்கியுள்ளனர் தெற்கின் தலைவர்கள்.

எனினும், சிங்கள பௌத்த பேரினவாதமோ அதனை எதிர்க்கிறது. ஒற்றையாட்சிக்கும் ஒருமைப்பாட்டுக்கும் வித்தியாசம் காணக்கூடாது என்று கண்ணைக் கட்டிக்கொண்டு கண்டிக்கிறது; எதிர்க்கிறது.

இதேவேளை, தமிழ் மக்களோ, பிரிந்து செல்வதற்கான சுயநிர்ணய உரிமைக் கோட்பாட்டை முன்வைக்கும் அரசியல் விழிப்புணர்வையும் வளர்ச்சியையும் முதிர்ச்சியையும் அடைந்துள்ளனர்.

அது குறித்துத் தமிழ் மக்கள் அனைவரும் தெரிந்துகொள்ளவேண்டும். சுயநிர்ணய உரிமை குறித்த பூரண அறிவைப் பெறவேண்டும்; விளங்கிக்கொள்ளவேண்டும் என்ற நோக்குடன் -

சிறந்த அரசறிவியலாளரும் அரசியல் ஆய்வாளருமான 'திரு மாஸ்டர்' எனச் செல்லமாக அறியப்படும் மு.திருநாவுக்கரசு எழுதிய 'சமஷ்டியா தனிநாடா' என்ற நூலின் மூன்றாவது அத்தியாயமான 'பிரிந்து செல்வதற்கான சுயநிர்ணய உரிமையும் அதன் வரலாற்று நடைமுறையும்' என்ற பகுதி தொடர் சிறப்புக் கட்டுரையாக உதயனில் வெளியாகி வருகிறது.

**இவ்வாரம் அதன் ஒன்பதாவது பகுதியை வாசியுங்கள்**

இற்றைக்கு 5250 ஆண்டுகளுக்கு முன் அரசு எனும் நிறுவனம் தோன்றியது. அதிலிருந்து பேரரசு தோன்றச் சுமாராக ஓராயிரமாண்டுகள் தேவைப்பட்டது. கண்டங் கடந்த பேரரசு தோன்ற மேலும் ஒன்றே முக்கால் ஆயிரமாண்டுகள் தேவைப்பட்டன. அதைத் தொடர்ந்து பல கண்டங்களைக் கடந்த பேரரசு எழ மேலும் ஈராயிரமாண்டுகள் தேவைப்பட்டன. இனி அடுத்த கட்டம் உலகம் முழுவதும ஒரு பேரரச ஆதிக்கத்திற்கு உட்பட்டதாகுவது பற்றியதே. பல்வேறு இன, மத, மொழி, பிராந்திய வேறுபாடுகளைக் கொண்ட மக்கள் கூட்டங்களை எல்லாம் பேரரசுத் தேவையின் பொருட்டு ஒட்டி இணைப்பதற்காக ஓர் ஏகதத்துவக் கருத்துருவைப் பேரரசுகள் உருவாக்குவது இயல்பு. இந்த வகையில் மததத்துவக் கருத்துருவமே இதுவரை பேரரசு உருவாக்கத்தில் ஆதிக்கம் செலுத்தியுள்ளது. இதற்கான முதலாவது சிறந்த உதாரணமாக எகிப்திய பேரரசில் கி.மு.14 ஆம் நூற்றாண்டில் காணப்பட்ட ஏக தெய்வக் கோட்பாட்டை (Monotheism) கூறலாம். அதாவது எகிப்திய ஆட்சியாளரான நான்காம் பறோ அமனொபிஸ் (Pharaoh Amenophis IV-1353-1335 B.C) ஏகதெய்வ சூரிய வழிபாட்டுக் கொள்கையைப் பின்பற்றத் தொடங்கினார். சூரியனின் பெயரால் இவர் இக்நாரென் (Akhenaten) எனத் தனக்குப் பெயர் சூடிக்கொண்டார். இவ்வாறாக மௌரியப் பேரரசு உருவாக்கத்தில் அசோகச் சக்கரவர்த்தி பௌத்தத்தை பேரரசு மதமாக்கிக் கொண்டு தனது பேரரசை வளர்க்க முற்பட்டார். றோமப் பேரரசின் பேரரசு மதமாகக் கிறிஸ்தவமும், அராபியப் பேரரசு மதமாக இஸ்லாமும் விளங்கின.

தற்போதைய 21 ஆம் நூற்றாண்டு உலகப் பேரரசவாதத்திற்கான புறநிலைத் தளம் தோன்றியுள்ள காலம் "தாராளப்" பொருளாதார "ஜனநாயக மய" உலகமயமாக்கல் என்பதே இந்த உலகளாவிய பேரரசிற்கான தத்துவமாகும். இந்த மூலவேரிலிருந்து உலகளாவிய வகையில் மனித உரிமைகள், சர்வதேசச் சட்டங்கள், தொண்டர் நிறுவனங்கள், தர்ம ஸ்தாபனங்கள், நிதி நிறுவனங்கள், ஆயுத பரிசோதகர் குழுக்கள், கண்காணிப்புக் குழுக்கள் எனப் பல பக்க வேர்கள் ஆங்காங்கே வெடித்துள்ளன.

"தாராளப்" பொருளாதார "ஜனநாயக மய" உலக மயமாக்கல் என்பதை நேர்க்கணியமாகவும் சர்வதேச "பயங்கரவாத" எதிர்ப்பு என்பதை எதிர்க்கணியமாகவும் கொண்டு இந்த உலகப் பேரரசவாத தத்துவம் உருத்திரண்டு வருகின்றது.

### கருக்கொண்டுவிட்ட உலகப் பேரரசிற்கான தளம்

ஓர் உலகப் பேரரசிற்கான தளம் இப்போது தெளிவாகக் கருக்கொண்டுவிட்டது. அரசியற் பொருளாதார ரீதியில் புவியோரலகு என்பது ஸ்தாபிதமடையுமளவிற்குப் பூகோளப் பேரரசு என்ற நிலையும் அதனுடன் சேர்ந்து உருத்திரளும். இது ஒரு நீண்ட வரலாற்று வளர்ச்சிப் போக்கின் பாதையிலேதான் முழுவடிவம் பெறும். மக்கள் சார்ந்த தீர்மானங்களை எடுப்பதும் அத்தீர்மானங்களை நிறைவேற்றவல்ல வல்லமைகளைக் கொண்டிருப்பதுமான அதியுயர் அதிகாரபீடமே அரசு என்பது.

தற்போது உலகளாவிய பல விடயங்களில அமெரிக்கா, தீர்மானங்களை எடுக்கக்கூடிய சக்தியாகவும், முதல் நிலையில் அத்தீர்மானங்களை நிதி ஆதிக்கம், பொருளாதார ஏற்பாடுகள என்பனவற்றின் மூலமாகவும், அடுத்து அரசியல் இராஜதந்திர நெருக்கடிகள் மற்றும் பொருளாதாரத் தடைகள் அல்லது முற்றுகைகள் மூலமாகவும் இறுதிவழியாக இராணுவ நடவடிக்கைகள் மூலமாகவும் செயற்படுத்தும் நிலையில் உள்ளது. இது ஒரு மைய ஓட்டமே தவிர முழுப் போக்கல்ல. மேற்படி பல முனைகளிலும் ஓர் உலகப் பேரரசு தோன்றுவதற்குரிய உள்ளார்ந்த சக்திகள் தெளிவாகத் தெரியத் தொடங்கி விட்டன.

இதன்படி உலக மயமாதலின் முழு வளர்ச்சி என்பது முழு உலகிற்குமான பேரரசொன்றை ஸ்தாபிப்பதில் சென்றுமுடியும். அப்போது உலகிலுள்ள ஏனைய அரசுகளெல்லாம் சிற்றரசுத் தன்மைகொண்ட நிர்வாக அலகுகளாகவே செயற்படமுடியும். சமஷ்டி முறையெனும் தளத்திலிருந்தே இது வளர்ச்சிபெறும். ஐரோப்பிய ஒன்றியம் இதற்கு வேண்டிய வரலாற்று முன்னனுபவங்களைப் பிரசவிக்கும்.

அப்படி உலக மயமாதற் போக்கின் வளர்ச்சி விதியின்படி ஓர் உலகப்பேரரசு நிலையே வளருமென்றால் பிரிந்து சென்று அரசமைப்பதான பிரச்சினை என்னாகும் என்ற கேள்வி இயல்பாகவே எழும்பும். இப்போது இருக்கும் அரசுகளே நிர்வாகச் சிற்றரசாக முடியுமென்றாள் பிரியப்போகும் அரசுகளும் கூடவே சிற்றரசு அலகுகள் ஆகமுடியும் என்பதே பதில்.

## பிரிந்து செல்வதற்கான சுயநிர்ணய உரிமையும் அதன் வரலாற்று நடைமுறையும்

தொடர் சிறப்புக் கட்டுரை 9

பனிப்போர்க் காலத்தில் இரு அணி அரசியல் இருந்ததால் பிரிந்து செல்வதற்கான போராட்டத்தை ஓரணி ஆதரிக்கும்போது மற்றைய அணி அதனை எதிக்கும் ஆனால், தற்போது உலகளாவிய ரீதியில் ஒருமையத்தைக் கொண்ட ஏகத்துவ அரசியலே இருக்கும்போது ஏட்டிக்குப் போட்டி என்ற நிலைப்பாடு இல்லாது போய்விடுகிறது.

### ஏகாதிபத்தியத்தை பாதிக்காத அரசுகளின் உடைவுகள்

தற்போதைய சர்வதேச நிலைவரத்தின்படி அரசுகள் உடைவதும், பிரிந்து செல்வதும் ஏகாதிபதத்தியத்தை பாதிக்க முடியாது. அப்படி உடைவதோ அன்றிப் பிரிவதோ ஒப்பீட்டு ரீதியில் ஏகாதிபத்தியத்திற்கு இலாபகரமாகவே உள்ளது.

இதனைச் சற்று விரிவாகப் பார்போம். எப்போதும் அரச நிர்வாக மையத்துவம் என்பது பண்ட உற்பத்திக்கும், பரிவர்த்தனைக்கும், பொருளாதார வளர்ச்சிக்கும் உகந்தது என்பதே இடதுசாரி, வலதுசாரி ஆகிய இரு தரப்புச் சிந்தனையாளர்களதும் கருத்தாகும். இதன்படி அரசு பெரிதாக இருப்பது பண்ட உற்பத்தி, ஏற்றுமதி, இறக்குமதி, வர்த்தகம், மூலதன நகர்வு என்பவற்றிற்கு எல்லாம் வாய்ப்பானது.

ஆனால், இன்றைய விஞ்ஞான, தொழில்நுட்பத், தகவல் வலைப்பின்னல் வளர்ச்சியின் படியும் மற்றும் போக்குவரத்துத் தொடர்புசாதன, கணனிமய வளர்ச்சி என்பவற்றின் மூலமும் தேசங்கள் பலவாக இருப்பதனால் உருவாகும் இடர்பாடுகள் அதிகம் நீக்கப்பட்டுவிடுகின்றன. உலக மயமாக்கலின் மூலம் ஏற்படும் அரசியல், பொருளாதார, சட்ட இணைப்புகள் அரசியற் பொருளாதார சட்டத் தடைகளை அகற்றி வரும் நிலையில் தேசங்களின் எல்லைகள் என்பது அரசியல் பொருளாதார அர்த்தத்தில் கரைந்துவிடுகின்றன.

இதனைவிட அரசியல் ரீதியில் ஏகாதிபத்தியத்திற்கு அனுகூலமான இன்னொரு முக்கிய அம்சமுமுண்டு. அதாவது, பெரிய அரசுகளுக்குப் பேரம் பேசும் சக்தி அதிகமுண்டு. சிறிய அரசுகளிடம் பேரம் பேசும் சக்தி மிகக் குறைவானதே. எனவே, பெரிய அரசுகளாய் இருப்பதை விடச் சிறிய அரசுகளாய் உடைவது ஏகாதிபத்தியத்தின் பேரம் பேசலை அதிகரிதது அரசியல், பொருளாதார அனுகூலங்களை அதிகம் மேம்படுத்த உதவும். அதாவது ஏகாதிபத்திய அரசு பலக் கோட்பாட்டின் அடிப்படையில்தான் உடைந்திடக்கூடாதே தவிர ஏனைய அரசுகளை உடைத்திட விரும்பும்.

கிழக்கைரோப்பியாவில் சோவியத் யூனியனும், யூகோஸ் லாவியாவும் துண்டுதுண்டாய் உடைந்தன. இவற்றால் ஏகாதிபத்தியம் இரட்டை லாபத்தை அடைந்தது. ஒன்று தனது எதிரி பலவீனப்படுவது, இரண்டு பலவீனப்பட்ட அரசுகளிடம் பேரத்தை அதிகரிப்பதும் விஞ்ஞான தொழில்நுட்ப உதவியுடன் பலவான எல்லைகளைக் கொண்ட அரசுகளின் மூலதனத்தை இலகுவாக நகர்த்தலாம் என்பதுடன் வர்த்தக ஓட்டத்தையும் அதிகரிக்க முடிகிறது.

கிழக்கைரோப்பாவிற்கு வெளியே எரித்திரியாவின் விடுதலையோ, கிழக்குத் தீமோரின் விடுதலையோ ஏகாதிபத்தியத்திற்கு நட்டத்தைக் கொடுக்கவில்லை. அங்கெல்லாம் ஏகாதிபத்தியத்தின் நலன்கள் மிகச்சிறப்பாகவே பேணப்பட்டு வருகின்றன. தற்போதைய நிலைமையின் படி தென்சூடானிய விவகாரத்தில் பிரிந்து செல்வதா இல்லையா என்பதை இறுதியில் ஒப்பங்கோடல் (வாக்கெடுப்பு) மூலம் தான் தீர்மானிக்க வேண்டும் என்ற ஏற்பாடு உருவாகி இருப்பதும் பிரிந்து செல்லல் பற்றிய பிரச்சினையில் மேற்குலகிற்கு உண்மையிலேயே ஆட்சேபனைகள் இல்லை என்பதைத்தான் வெளிப்படுத்தி நிற்கின்றது.

அப்படி என்றால், சுதந்திரத் தமிழீழ அரசு அமைவதை அமெரிக்கா, பிரிட்டன் போன்ற நாடுகள் விரும்பவல்லவா வேண்டும் என்ற கேள்வி. தேசங்கள் பிரிந்து செல்வது ஏகாதிபத்திய நலன்களுக்கு அனுகூலமானதேயாயினும் நடைமுறையில் சந்தர்ப்ப சூழலுக்கேற்ப இது சார்புடையதுங்கூட. பெரிய இந்திய அரசிற்கு அருகேயான தமிழீழத்தின் அமைவிடங் காரணமாகத் தமிழீழம் பிரிந்து தனியரசாக அமைவது இந்தியாவின் பாதுகாப்பு மற்றும் உள்நாட்டு நலன்களுக்குப் பாதகமாய் அமைந்திடுமென்ற இந்திய நோக்கு நிலைக்கு இசைவாக நடக்கவேண்டிய தேவை மேற்குலகிற்கு உண்டு. அதாவது பெரிய இந்திய அரசின் பேரத்திற்கு அமெரிக்காவும் ஏனைய மேற்குலக நாடுகளும் கட்டுப்பட வேண்டியுள்ளன. இலங்கையைப் பற்றிய ஒருவகை அச்ச உணர்வோடுதான் இந்தியா எப்போதும் செயற்பட்டு வருகின்றது. அது சிங்கள, தமிழீழ தலைமைகள் இரண்டையுமே நம்பும் நிலையிலில்லை. இந்திராகாங்கிரஸுடன் சுதந்திரக்கட்சி பாரம்பரிய நட்புறவைக் கொண்ட கட்சி. ஆனால், அப்படி இருந்தும் 1971ஆம் ஆண்டு இந்தோ. - பாக். யுத்தத்தின் போது சுதந்திரக்கட்சி அரசு பாகிஸ்தானிய இராணுவத்திற்கு அனுகூலமாய் நடந்ததையும் அவ்வேளை இந்தியப் பிரதமர், இலங்கைப் பிரதமரை நயத்தாலும் பயத்தால் பணியவைக்க நேர்ந்ததையும் இந்திய இராஜதந்திரிகள் ஒருபோதும் மறப்பதில்லை.

அத்துடன், இந்திய இராஜதந்திரிகள் அடிக்கடி குறிப்பிடுவது போலவே தென்னிந்தியாவில் திராவிடக் கோரிக்கை எழுந்திருந்ததன் பின்னணியில், அதாவது சுதந்திர இந்தியாவில் அதுவும் இந்துக்கள் மத்தியில் எழுந்த முதலாவது தனிநாட்டுக் கோரிக்கை என்பதன் பின்னணியில் ஈழத்தமிழா மீதும் இந்திய இராஜதந்திரிகளுக்கு நம்பிக்கையில்லை.

மேலும், இராணுவ ரீதியான மூலோபாயத்தின் படியும் இலங்கைத்தீவு இரண்டாக உடைவதை இந்தியக் கொள்கை வகுப்பாளர் ஒருபோதும் விரும்புவதில்லை. இத்தகைய அச்சம் இருதரப்பினர் மீதும், சூழலின் மீதும் நிறைந்திருந்த பின்னணியில் 1987ஆம் ஆண்டு இலங்கை விவகாரத்தில் இந்தியா தலையிட்டு தமிழ், சிங்களம் ஆகிய இரு தரப்பினராலும் அதன் மூக்கு அறுபட்டுப் போனமையானது ஏற்கனவே, அதற்கிருந்த அச்சத்தை மேலும் பலப்படுத்தி விட்டது.

இலங்கை ஜனாதிபதியாய் இருந்த ஜே.ஆர். ஜெயவர்த்தனா இந்தியாவின் மூக்கிற் பிடித்து உலுக்கிய உலுக்கை இந்திய ஆட்சியாளர்கள் ஒருபோதும் மறந்திடமாட்டார்கள். இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகராய் இருந்த திரு.ஜே.என்.டிக்ஸிட் எழுதிய Assignment Colombo என்ற நூலில் இத்தகைய ஆத்திரங்கள் தெளிவாகத் தொனித்து நிற்கின்றன.

### இந்தியாவிடம் உள்ள அச்சம்

இலங்கைத்தீவு இரண்டாவதென்பது மேற்படி தமிழ், சிங்கள இனங்கள் இரண்டையும் கையாள முடியாத நிலைக்குக் கொண்டு போய்விட்டுவிடும் என்பது மட்டுமல்ல இறுதியில் தமிழகத்தையும கையாள முடியாத ஒரு நிலைக்குத் தள்ளிவிடும் என்ற பலமான ஓர் அச்சம் இந்தியாவிடம் உண்டு.

இந்நிலையில், பிரிந்து செல்லும் தமிழீழக் கோரிக்கைக்கு இந்திய மத்திய அரசு முற்றிலும் எதிர் நிலைப்பாட்டையே கொண்டிருக்கும. ஆதலால் இந்தியாவின் கோபத்திற்கு ஆளாகாத வகையிலேதான் தமது நலன்களை இலங்கைத்தீவில் பேணவேண்டும் என்பது அமெரிக்கா, பிரிட்டன் உள்ளிட்ட மேற்குலகின் கொள்கையாகும். ஜப்பானும் இதற்குள்ளடங்கும் ஓர் அங்கமே. இப்பின்னணியில் இலங்கைத்தீவை ஓரலகாக வைத்துக்கொண்டே அதற்கூடாக இந்தியாவை அமெரிக்காவின் உலக மயமாக்கத்திற்குள் இழுத்துவிடலாமென அமெரிக்கா கருதுகின்றது. அமெரிக்காவினது இத்தகைய சிந்தனைப்போக்கின் வெளிப்பாடே "உள்ளக சுயநிர்ணய உரிமையின்" பெயராலான சமஷ்டித்தீர்வு என்பது. அதேவேளை காலப்போக்கில் யதார்த்த நிலைமைகள் அமெரிக்காவிற்கு நோகாத வகையில் தனிநாட்டை நோக்கி இட்டுச் சென்றால் அமெரிக்கா அதனை எண்ணிக் கவலைப்படும் நிலையிலிருக்காது. அரசுகள் உடைவது அமெரிக்காவிற்குப் பிரச்சினையில்லை. அரசுகள் கூட்டாக இணைவதுதான் அமெரிக்காவிற்குப் பிரச்சினை. அமெரிக்கா தலைமையிலான உலக மயமாதலை எதிர்கொள்ள அரசுகளிடையே ஒற்றுமையும் பிராந்தியக் கூட்டுமே வழியென பிடல்காஸ்ரோ கூறுகிறார். மேற்கு ஐரோப்பிய நாடுகள் அனைத்தும் ஏகாதிபத்தியக் கூட்டின் பொருட்டு அமெரிக்காவைச சார்ந்தவை. ஆனால், ஐரோப்பிய ஒன்றியத்திற்கும் அமெரிக்காவிற்கும் இடையே அக முரண்பாடுகள் உண்டு. ஐரோப்பிய நாடுகள் அனைத்தும் கூட்டாக ஓர் ஒன்றியமாகி அதற்குள் அவை இணைந்து ஒரு பலம் பொருந்திய சக்தி ஆவதை அமெரிக்கா கசப்பாகவே பார்க்கின்றது. அதாவது தனது ஏகாதிபத்தியக் கூட்டாளி நாடுகள் தம்மிடையே இணைவதை அதன் தலைமை நாட்டால் பொறுக்க முடியாமல் இருக்கின்றது. இப்படிப் பார்க்கையில் இணைதல்தான் அமெரிக்காவிற்கும் மற்றும் ஏகாதிபத்திய சக்திகளுக்கும் பாதகமேதவிர பிரிதல் அல்ல. ஆனால், பிரிந்து செல்லலைத் தமது கொள்கையாகக் கொண்ட பிரகடனம் எதுவும் சர்வதேச அரங்கில் இல்லை. தருணம் வரும்போது அவரவர் தேவைக்கேற்ப உதிரித் தன்மையுடன் அது செயற்படுத்தப்படுகின்றது. ஆனால், களத்தில் அகச் சுயநிர்ணய உரிமை என்ற பதத்தையே மேற்குலகம் பிரயோகித்து வருகின்றது.

இப்பதம் மேற்குலகிற்குச் சார்புடைய ஒரு கருவியாகும். இக்கருவியைக் கொண்டு சண்டையிடும் இருதரப்பிற்குள்ளும் மேற்கால்

## இந்தியாவின் கோபத்துக்கு ஆளாகாத வகையில் தமது நலன்களைப் பேணுதல் மேற்குலகின் கொள்கை

சிக்கலின்றி உட்பிரவேசிக்கமுடியும். அதாவது, ஒடுக்கும் அரசுக்குள்ளும், போராடும் விடுதலை அணிக்குள்ளும் இக்கருவியின் துணையுடன் மேற்கால் இலகுவாக நுழைந்திட முடியும். பின்பு காணப்படும் சாத்தியக் கூறுகளின் அடிப்படையில் தனக்கு அப்போது எது அதிகம் சாதகமாய்த் தெரிகிறதோ அதற்கேற்ற வியாக்கியானத்தை அளித்து அதற்கான நிலைப்பாட்டை மேற்குலகம் வேண்டியவாறு எடுக்க இப்பதப் பிரயோகம் உதவும்.

அகச் சுயநிர்ணயம் (Internal Self - determination) புறச் சுயநிர்ணயம் (External Self - determination) எனச் சுயநிர்ணய உரிமையை இரண்டாக வகைப்படுத்தும் ஒரு பெரும் போக்கு 1990களின் மத்தியில் தலையெடுத்துள்ளது. ஆனால், இவ்வாறான ஒரு வரையறை கொண்ட வார்த்தைப் பிரயோகத்திற்கு அப்பால் இப்போக்கானது கடந்த இரண்டு நூற்றாண்டுகளுக்கும் மேலாய் நடைமுறையில் உள்ளது. இது ஒரு வரலாற்றுப் பிரச்சினை. ஆதலால், வார்த்தைகளுக்கும் அப்பால் இருக்கக்கூடிய இதன் வேர்களை வரலாற்றில் கண்டுகொள்ள வேண்டியது அவசியம்.

(தொடரும்)

DEZA
DDC
DSC
SDC
COSUDE

# VACANCIES

**I. SENIOR PROJECT OFFICER (01 position)**

SDC-Swiss Agency for Development and Cooperation is a government organization of the Swiss ministry of foreign affairs, is looking for a person to work under the Head of SDC Field Office, Jaffna and capable to communicate with all authorities involved in building constructions.

- Master Degree in social science or Economics
- Computer literacy
- High level proficiency in written and spoken English & Tamil
- Ability to communicate and liaise at all levels with a high degree
- Excellency in report writing, planning, problem solving & analyzing
- Experience to develop & deliver training workshops
- Ability to work as a part of a team
- Willingness to travel frequently

Age - Above 35 Years
Duty stations - Jaffna & killinochchi Districts
Duration - Initial appointment will be for one year with a possibility of extension
Remuneration - Negotiable.

**2. POST OF CIVIL ENGINEER (02 Positions)**

- Should possess B.Sc degree in Civil Engineering
- Good communication and interpretational skill & Knowledge in excel, word, Mproject & autocad
- High level proficiency in written and spoken English
- Ability to function effectively in a team environment

Duty stations - Jaffna & killinochchi Districts
Duration - Initial appointment will be for one year with a possibility of extension
Remuneration - Negotiable

**Women are encouraged to apply** (44459)

Please send the letter of application with a complete CV to **SDC Field Office, 521/11, Point Pedro Road, Nallur, Jaffna** on or before the 30th of April 2005.

## ஜோதிடம்

உள்நாட்டில், வெளிநாட்டில் பிறந்தவர்களின் ஜாதகம் பிழையின்றிக் கணிக்கவும், பலன்களை விரிவாக அறியவும், விவாகப் பொருத்தம் பார்க்கவும், சுபகருமங்களுக்கு நாள் குறிக்கவும் நாடுங்கள்:

**எஸ். சிதம்பரநாதன்**

(மந்திகை ஆஸ்பத்திரி கடந்து புலோலி மெதடிஸ்த மிசன் பாடசாலைக்கு அருகில் 4ஆவது வீடு)

(44374)கொடிகாமம் வீதி, பருத்தித்துறை.

## வேலை ஆள் தேவை

தொலைத்தொடர்பு
நிலையமொன்றிற்கு
கணனி அறிவுள்ள
பெண் தேவை.
**விள.இல. 2567,**
(சி-42470) **மே/பா உதயன்.**

## விற்பனைக்கு

1) புதிய National Vacuum Cleaner (made in Japan)
2) High Pressure Washing Machine (கார், வாகனங்கள் கழுவப் பயன்படுத்துவது)

**சிறி, No.60, அச்சுக்கூட ஒழுங்கை, கொக்குவில். தொ. இ. 0776994466.** (44559)

## Study In London

லண்டனில் இருந்து இலங்கை வந்திருக்கும் யாழ். மாணவர்களினால் லண்டன் பல்கலைக்கழக அனுமதி நேரடியாகப் பெற்றுக்கொடுக்கப்படுகின்றது.

பயண முகவர்களிடம் ஏமாற்றமடையாமல் நேரடியாகப் பல்கலைக்கழக அனுமதிபெற ஆலோசனை வழங்கப்படுகிறது.

**T.P. 077 6176476**
**UNIVAC** (யுனிவெக்),
இலங்கை வங்கி அருகில்,
சங்கானை.
(44566)

# Vacancy

## Training Officer

**No of Vacancies - 6**

யாழ்ப்பாணம், வவுனியா ஆகிய இடங்களில் விரைவில் ஆரம்பிக்கப்படவிருக்கும் "ABACUS" நிறுவனத்தின் கிளைகளுக்கு A/L சித்தியடைந்த அர்ப்பணிப்பும் சிறுவர்களுக்குப் பயிற்சியும் அளிக்கக்கூடிய பெண் விண்ணப்பதாரிகள் எதிர்பார்க்கப்படுகின்றனர். இன்றிலிருந்து ஒரு வாரத்திற்குள் உங்களது சுயவிவரக் கோவையை அனுப்பவேண்டிய முகவரி:

**The Manager (Abacus)**
25, E.S. Fernando Mw,
Colombo - 06

இதற்குரிய பயிற்சிகள் கொழும்பில் வழங்கப்படும். (சி-42388)(26-11-14)



## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 25.03.1966 உதிர்வு 05.05.2004

**அமரர் திருமதி வி. சுகந்தினி**
(வசந்தி ரீச்சர்)
(ஆசிரியை, வவுனியா தமிழ் மகா வித்தியாலயம்)

பெற்ற மழலை முகம்பார்த்து அகவைமுன்பே
வைத்தியத்துக்குப் பேர் போன பாரிசினிலேயே
காலனின் கொடும் பிடிக்குள் அகப்பட்டீரே!
ஓராண்டில் உம் நினைவில்.

நவாலி வீதி,
ஆனைக்கோட்டை.

க. விமலச்சந்திரன்,
பிள்ளைகள் - சாய் அபிநாஸ், சாய் அஜந்.

(44490) (54-14)

## மின், எரிபொருள் துறை சர்ச்சை: மீண்டும் அடுத்தவாரத்தில் பேச்சு!

இலங்கை மின்சாரசபை மறுசீரமைப்பு மற்றும் பெற்றோலியக் கூட்டுத்தாபன பங்கு விற்பனை ஆகியன தொடர்பில் மற்றுமொரு சுற்றுப் பேச்சு எதிர் வரும் வாரத்தில் நடைபெறவுள்ளது.

மின்சக்தி, எரிபொருள்துறை அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த. நிதியமைச்சர் சரத் அமுனுகம, திறைசேரிச் செயலர் பி.பீ.ஜயசுந்தர ஆகியோர் மேற்படி துறைகளைச்சார்ந்த தொழிற் சங்கங்களுடன் இந்தப் பேச்சை நடத்தவுள்ளனர்.

முன்னதாக மின்சார சபையை மறுசீரமைப்பது சம்பந்தமாக மின்சாரசபை தொழிற்சங்கங்களுடன் நடத்திய பேச்சுக்களின்போது எடுக்கப்பட்ட முடிவுகள் மற்றும் இது தொடர்பான அரசின் நிலைப்பாட்டை விளக்கும் விசேட அறிக்கையொன்றை இந்த சந்திப்பின்போது அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த சமர்ப்பிக்கவுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இவ்விடயங்களில் இறுதித் தீர்மானம் எடுப்பதை அரசு ஒத்திவைத்திருப்பதால் இவ்விடயத்தினால் சர்ச்சை கிளம்புவதும் தள்ளிப் போடப்பட்டுள்ளது.

அடுத்தவாரம் நடைபெறவிருக்கும் கூட்டத்தில் தொழிற் சங்கங்களுக்கு மாறான முடிவை அரசு எடுத்து நடைமுறைப்படுத்த முயன்றால் இவ்விடயம் மீண்டும் சர்ச்சைக்குள்ளாகி சூடு பிடித்து குழப்பங்கள் ஏற்பட இடமுண்டு என விடயமறிந்த வட்டாரங்கள் சுட்டிக்காட்டுகின்றன.

(து-க)

# இந்தியாவில் உயர்கல்வி வாய்ப்பு

## Muthayamal Educational Institutions

RASIPURAM - 637 408. NAMAKKAL - (DT) TAMILNADU. www.muthayammal.com



இந்தியாவில் பிரபல்யமான முத்தயம்மாள் கல்வி நிறுவனமானது **ANNA (Engineering) UNIVERSITY - PERIYA UNIVERSITY** ஆகியவற்றின் பட்டதாரி **(Degree Courses)** நெறிகளை வழங்கி வருகிறது. இலங்கையில் **A/L** சித்தியடைந்த மாணவர்கள் இக்கல்லூரியில் பின்வரும் நெறிகளில் சேர்ந்து உலகளாவியரீதியில் அங்கிகரிக்கப்பட்ட ஒரு பட்டதாரியாக வாய்ப்பு.

| பாடநெறி | காலவரைகள் | உட்பிரவேச தகமைகள் |
|---|---|---|
| B.E. Computer Science & Engineering | 4 Years | A/L Passes in Maths, Physics, Chemistry |
| B.E. Eletronics & Communication Engineering | 4 Years | A/L Passes in Maths, Physics, Chemistry |
| B.E. Electrical & Electronics Engineering | 4 Years | A/L Passes in Maths, Physics, Chemistry |
| B.E. Eletronics & Instrumentation Engineering | 4 Years | A/L Passes in Maths, Physics, Chemistry |
| B.E. Mechanical Engineering | 4 Years | A/L Passes in Maths, Physics, Chemistry |
| B.Tech Information Technology | 4 Years | A/L Passes in Maths, Physics, Chemistry |
| B.Sc. Computer Technology | 3 Years | A/L Passes in Maths, Physics, Chemistry |
| B.Sc. Information Technology | 3 Years | A/L Passes in Maths, Physics, Chemistry |
| B.Sc.Biochemistry | 3 Years | A/L Passes in Physics, Chemistry, Biology |
| B.Sc.Microbiology | 3 Years | A/L Passes in Physics, Chemistry, Biology |
| B.Sc. Biotechnology | 3 Years | A/L Passes in Physics, Chemistry, Biology |
| B.Sc. Bio-Informatics | 3 Years | A/L Passes in Physics, Chemistry,Maths |
| B.Sc. Maths | 3 Years | A/L Passes in Maths,Chemistry,Physics |
| B.Sc. Physics | 3 Years | A/L Passes in Maths, Physics |
| B.Sc. Electronics | 3 Years | A/L Passes in Physics, Chemistry,Maths |
| B.Sc. Chemistry | 3 Years | A/L Passes in Physics, Chemistry |
| B.Sc. Computer Science | 3 Years | Pass in All Subjects in any Discipline |
| Bachelor of Computer Applications (B.C.A) | 3 Years | Pass in All Subjects in any Discipline |
| B.Com. (CA) | 3 Years | Pass in All Subjects in any Discipline |
| Bachelor of Business Administration (B.B.A) | 3 Years | Pass in All Subjects in any Discipline |
| B.Com. | 3 Years | Pass in All Subjects in any Discipline |
| B.C.S. | 3 Years | Pass in All Subjects in any Discipline |

**O/L** மட்டும் சித்தியடைந்த மாணவர்கள் **Kaveri Polytechnical College**ல் சேர்ந்து 3 வருட **Diploma**வை பூர்த்தி செய்து, மேலும் 3 ஆண்டுகளில் **Engineer** ஆக வாய்ப்பு.

A/L 2005 மாணவர்கள் pending results முறையில் யூலை மாதத்திலே கல்லூரியில் சேர்ந்து பாடநெறியை தொடங்க வாய்ப்பு

**Call: 011-4512591** for prospectus and application forms
SCHOLARS INFORMATION CENTER
2nd Floor, Colombo Plaza, 50, Galle Road, Colombo-06.
email : peter@scholars-info.com

## ஏழாவது வருட நினைவஞ்சலி

தோற்றம் 22 - 06 - 1956



மறைவு 11 - 05 - 1998

**சுப்பிரமணியம் தனபாலசிங்கம்**
(சந்திரன்)
ஸ்ரீ அம்பாள் ஸ்ரோர்ஸ் உரிமையாளர்

ஆண்டுகள் ஏழு உருண்டோடிப் போனாலும்
அன்புத் தெய்வத்தின் நினைவுகள் மறையாது
நல்லாசானாய் நல்லதோர் குடும்பத் தலைவனாய்
நன்றாகவே வாழ்ந்த அன்புத் தெய்வமே! அப்பா!
பின்னாளில் இன்னல் சில கண்டு
மாண்டு நீங்கள் போனாலும் மறக்க முடியுமோ?
ஆத்மா சாந்திபெற ஆண்டவனை வேண்டுகின்றோம்

பொற்பதி றோட்,
கொக்குவில். [44482][21-11-14-28]

மனைவி, பிள்ளைகள்,
மைத்துனர்.

## ஈராண்டில் இதயம் சுமக்கும் நினைவுகள்

அன்னை மடியில் 1920 - 05 - 20



ஆண்டவன் அடியில் 2003 - 04 - 24

**அமரர் தொம்மை பிலிப்பு**
(அண்ணாவியார்)

ஆண்டுகள் இரண்டு சென்றிடினும்
ஆறவில்லை எம் இதய வேதனைகள்!
ஆறுதல் கூறும் அன்பு நிறை பப்பாவே!
இன்று ஆறுதலின்றித் தவிக்கின்றோம் உங்கள் நினைவில்!
வையகத்தில் இல்லாவிடினும் வானகத்தில்
நீங்களிருந்து தெய்வமாய் எம்மை வழிநடத்தி வாருமையா!

கச்சாய் வீதி,
கொடிகாமம். (44534)(26-11-14)

நீங்கா நினைவில்:
குடும்பத்தினர்.

| | | | |
|---|---|---|---|
| புதன் ராகு | சூ.▲ வெ. | | சனி |
| செவ். | இராசிச் சக்கரம் | | |
| | | | |
| | | சந். | வியா. கேது |

# இந்த வார இராசி பலன்

## 24.04.2005 –30.04.2005

**மாற்றம்:**
24.04.2005இல் சந்திரன் - துலாம் இராசியில் நிற்கும்

### மேடம்

அதிக யோசனை, களைப்பு, காரியங்களில் மந்த நிலை ஏற்படல். நண்பர்களுடன் எதிர்ப்பு என்பன ஏற்படும். தொழில் ஸ்தானத்தில் மேலதிகாரிகளுடன் முரண்பட நேரிடும். வீடு மனையில் மாற்றங்கள் கொடுக்கும். கால் உளைவு, வயிற்று நோ கொடுக்க இடம் உண்டு. அரசியல்வாதிகள் நன்மை அடைவர். இடமாற்றங்கள் நன்மை தரும்.

*அதிர்ஷ்டநாள்கள்:-* திங்கள், புதன், வெள்ளி

### இடபம்

இனஜனங்களின் கொண்டாட்டங்கள் கொடுக்கும். பண வரவு ஏற்படும். புதிய திட்டங்களால் நன்மைகள் ஏற்படும். மேலதிகாரிகள் தொழில் ஸ்தானத்தில் நன்மைகள் செய்வர். அடிக்கடி வரும் கோபத்தைக் குறைக்கவும். வீட்டில் எதிர்ப்பாலாருக்கு சோதனைகள் ஏற்படும். வீண் செலவுகளைக் குறைக்கவும். குருத்தொழில் செய்பவர்கள் அதிக நன்மைகள் அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்கள்:-* திங்கள், புதன், வெள்ளி.

### மிதுனம்

தொட்டது துலங்க தெய்வ வழிபாடு செய்யவும். சனீஸ்வரனின் தாக்கத்தால் தடைகள் ஏற்படும். தொழில் ஸ்தானத்தில் அதிக பொறுப்புகள் சுமத்தப்படும். பொருள் இழப்பு, களவுகளைத் தடுக்க முன்னெச்சரிக்கை தேவையாகும். வாய்வுத் தொல்லைகள் கொடுக்கும். சாய்ப்புச் சாமான்கள், மது விற்பனை நிலையம், ஹோட்டல் தொழில் செய்பவர்கள் புதிய திட்டங்களை உருவாக்கப் பண அதிகரிப்பை ஏற்படுத்தலாம். இடமாற்றங்கள் நன்மை தரும்.

*அதிர்ஷ்டநாள்கள்:-* புதன், வெள்ளி.

### கடகம்

பணம் பல பிரச்சினைகளை உருவாக்கும். நண்பர்கள் பொருளுக்காக உங்களைக் குற்றவாளியாக்குவார்கள். தொழில் சிறப்பு ஏற்படும். பணவரவு உண்டு. இடமாற்றங்களால் நன்மைகள் ஏற்படும். பல புதிய தொழில் திட்டங்களைப் புதிதாகத் தொடங்குவீர்கள். அரசியல்துறையினர்கள் நன்மை அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்கள்:-* புதன், வெள்ளி.

### சிங்கம்

புதிய திட்டங்களால் மற்றவர்களை ஏமாற்றுவீர்கள். படிப்படியாகக் குடும்பத்தில் மாற்றங்கள் கொடுக்கும். வருமானம் அதிகரிக்கும். மாமன், மாமி வழியினர்கள் உதவிகள் செய்வார்கள். தூர தேசச் செய்திகள் மகிழ்ச்சி கொடுக்கும். கொடுத்தது வராது. நண்பர்கள் ஏமாற்றுவார்கள். செவ்வாயின் பார்வையால் அடிக்கடி கோபம் வரும். அதனால் பிரச்சினைகள் அதிகரிக்கும். அரசியல்துறையினர், வியாபாரிகள் அதிக நன்மைகள் அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்கள்:-* ஞாயிறு, புதன், வெள்ளி.

### கன்னி

தொழில் ஸ்தானத்தில் அதிக எதிர்ப்புகள் ஏற்படும். சமபங்காளர்களுக்கு மன விரக்தி ஏற்படும். கொடுக்கல் வாங்கல்களில் பிரச்சினைகள் உருவாகும். சகோதர வழி, பெற்றோர் வழி உறவில் ஒரு வேதனை வந்துவிடும். பஸ்ஸில் போவதானாலும் சில்லறையுடன் போகவும். குருத்தொழில் செய்வோர் முன்னேற்றம் அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்கள்:-* ஞாயிறு, திங்கள், வெள்ளி.

### துலாம்

சூரியனின் பார்வையால் மனைவிக்கு விஷப்பீடைகள் வர இடமுண்டு. அடிக்கடி அலைசசல் ஏற்படும். குடும்பத்தில் வைத்தியச் செலவுகள் அதிகரிக்கும். தொழில் ஸ்தானத்தில் பெரியவர்களின் உதவிகள் கிடைக்கும். வருமானம் அதிகரிக்கும். கால் உளைவு கொடுக்கும். ஆசிரியர்கள், சட்டத்துறையினர், பாதுகாப்புத் துறையினர்கள் நன்மைகள் அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்கள்:-* ஞாயிறு, திங்கள், வெள்ளி.

### விருச்சிகம்

வீடுமனையில் மாற்றங்கள் ஏற்படும். அட்டமத்துச் சனியின் தாக்கத்தால் - பொருளால் குடும்பத்தில் பிரச்சினைகள் கொடுக்கும். புத்திரர்களுக்கு கல்வி, தொழிற் சிறப்புகள் கொடுக்கும். தொழில், வீடு மனை போன்ற நிலைகளில் நல்ல முன்னேற்றகரமான செயற்பாடுகள் ஏற்படும். தொழில்நுட்பத்துறை, இரும்பு, உருக்கு வியாபாரிகள் ரீ.வி., சங்கீதத்துறைக்கருவி, மின்சார உபகரணங்கள் விற்பனை வியாபாரிகள் நன்மைகள் அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்கள்:-* ஞாயிறு, திங்கள், புதன், வெள்ளி.

### தனுசு

ஊருக்கு உதவிகள் செய்து குறைகேட்பீர்கள். தொழில் ஸ்தானத்தில் நன்மைகள் ஏற்படும். தனித்து நின்று போராடி எதிலும் வெற்றி காண்பீர்கள். இடமாற்றங்கள் நன்மை தரும். வாகனச்சுகம், வீட்டுச் செலவு, புதிய நண்பர்களின் வரவுகள் என்பன ஏற்படும். ஆராய்ச்சித் துறையினர்கள் மருந்துடன் சம்பந்தமானவர்கள் அதிக பொருளாதார வளம் பெறுவார்கள்.

*அதிர்ஷ்டநாள்கள்:-* ஞாயிறு, திங்கள் புதன், வெள்ளி.

### மகரம்

மாறிவரும் உலகில் விஞ்ஞான ஆக்கச் சிந்தனைகள் அதிக இலாபங்களைக் கொடுக்கும். உங்கள் திட்டங்களை விஞ்ஞான ரீதியில் உருவாக்க முயற்சிகள் எடுப்பீர்கள். சகோதரங்களால் உதவிகள் கிடைக்கும். தூர இடங்களுக்குப் போகாதீர்கள். விஞ்ஞானத்துறையினர், கடற்றொழிலாளர்கள் அதிக நன்மைகள் அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்கள்:-* ஞாயிறு, திங்கள், புதன், வெள்ளி.

### கும்பம்

அடிக்கடி கோபிப்பது நல்லதல்ல. சகோதரங்களுக்கு நன்மைகள் அதிகரிக்கும். காலில் அடிகாயங்கள் ஏற்பட இடமுண்டு. சட்டமுறையில் செயற்பாடுகள் அமையும். அயலவர்கள் உதவிகள் செய்வார்கள். தொழில்ஸ்தானத்தில் நன்மைகள் அதிகரிக்கும். வியாபாரிகள் தோட்டக்கமக்காரர்கள், அரசியல் துறையினர், வியாபாரிகள் அதிக நன்மைகள் அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்கள்:* ஞாயிறு, திங்கள்

### மீனம்

திட்டமிட்டது எதுவும் நடக்காமல் மந்தநிலை அடையும். தொழில்ஸ்தானத்தில் எதிர்ப்புகள் ஏற்படும். பண வரவு உண்டு. கால் உளைவு கொடுக்கும். எதிர்பாராத இழப்புகள், பொருள் களவுகள் ஏற்பட இடமுண்டு. புத்திரர்களால் பொருள் இழப்புகள் கொடுக்கும். வீடு மனை, கட்டடப் பொருள்கள், மின்சார உபகரணம், கடற்றொழில்றுறையினர், உபகரண விற்பனையாளர்கள் அதிக இலாபங்களை அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்கள்:-* ஞாயிறு, திங்கள்.

**மகாதேவா ஜோதிடம்**

---

(Continued form page 7)

**PROGRAMME ASSISTANT – AMPARA AND BATTICALOA**
**Under the supervision of the Programme Officer:**
- Collection, analysis and presentation of information for identification of areas for support and programme formulation/ implementation;
- Provide information for creation of projects in Atlas, preparation of budget revisions, revision of project award and project status, determination of unutilized funds, operational and financial closure of a project.;
- Maintenance of the internal expenditures control system including timely correc tive actions on unposted vouchers, including the vouchers with budget check errors, match exceptions, unapproved vouchers;
- Creation of requisitions in Atlas for development projects, register of goods receipt;
- Making budget check for requisitions, purchase orders and vouchers;
- Contribute to knowledge networks and communities of practice;
- Abide by all UN security regulations and UNDP policy and procedures;
- Perform any other duties as required.

**Educational Background:**
- Secondary Education.

**Experience:**
- 3 to 5 years of relevant administrative or programme experience is required at the national or international level;
- Experience in the usage of computers and office software packages (MS Word, Excel, etc) and knowledge of spreadsheet and database packages, experience in handling of web based management systems.

**Language Requirements:**
- Excellent command of English and Tamil ;
- Ability to communicate in Sinhala an asset.

**Operational skills:**
- Ability to work as a member of a multi-disciplinary and multicultural team;
- Strong negotiation and interpersonal skills with good initiative and sound judgement;
- Motivated, flexible and capable of working under pressure;
- Willingness to travel within Sri Lanka;
- Willingness to work out of normal office.

**FIELD ASSISTANT (INFRASTRUCTURE) – GALLE, JAFFNA, TRINCOMALEE, KILINOCHCHI, MULLAITIVU & VAVUNIYA**
**Under the supervision of the Field Engineer:**
- Conduct periodic monitoring of implementing partners, suggesting corrective measures to be undertaken, when necessary;
- Provide Technical Assistance to institutions supported directly or indirectly under Transition Programme;
- Assist in the preparation of technical drawings, BOQs and estimates for the infrastructure projects, as required;
- Provide necessary support to the staff of implementing partners and assist them to develop tools and systems needed for project planning and implementation;
- Ensure lessons learned and best practices are incorporated into funded projects;
- Prepare and ensure the timely submission of monitoring and evaluation reports;
- Monitor the technical aspects of the infrastructure projects;
- Contribute to knowledge networks and communities of practice;
- Abide by all UN security regulations and UNDP policy and procedures;
- Perform any other duties as required.

**Education Background**
- Secondary Education;
- National Certificate of Technology (NCT) or National Diploma of Technology (NDT-civil) or any other equal technical (civil) related educational qualification would be desirable, but it is not a requirement.

**Experience:**
- 3 to 5 years of relevant programme experience is required at the national or international level;
- Experience in the usage of computers and office software packages (MS Word, Excel, etc) and knowledge of spreadsheet and database packages, experience in handling of web based management systems.

**Languages:**
- Excellent command of English and Sinhala, for Galle;
- Excellent command of English and Tamil for other districts.

**Operational Skills:**
- Ability to work as a member of a multi-disciplinary and multicultural team;
- Strong negotiation and interpersonal skills with good initiative and sound judgement;
- Motivated, flexible and capable of working under pressure;
- Willingness to travel within Sri Lanka;
- Willingness to work out of normal office.

**DRIVERS –COLOMBO, HAMBANTOTA, MANNAR, KILLINOCHCHI , MULLAITIVU & VAVUNIYA**
Under the supervision of the direct supervisor:
- Ensures **provision** of reliable and secure driving services by driving office vehicles for the transport of authorized personnel and delivery and collection of mail, documents and other items and meeting official personnel and visitors at the airport, visa and customs formalities arrangement;
- Ensures cost-savings through proper use of vehicle by accurate maintenance of daily vehicle logs, provision of inputs to preparation of vehicle maintenance plans and reports;
- Ensures proper day-to-day maintenance of the assigned vehicle through timely minor repairs, arrangements for major repairs, timely changes of oil, check of tires, brakes etc;
- Ensures availability of all the required documents/supplies including vehicle insurance, vehicle logs, office directory, map of the city/country, first aid kit, necessary spare parts;
- Ensures that all immediate actions required by rules and regulations are taken in case of involvement in accidents;
- Perform any other duties as required.

**Education Background:**
- Secondary Education. Valid Driver's license.

**Experience:**
- 2 years' work experience as a driver; safe driving record; knowledge of driving rules and regulations and skills in minor vehicle repair.
- Knowledge of the use of HF/VHF radio system an asset.

**Language Requirements:**
- Fluency in English, Sinhala and Tamil for Colombo;
- Fluency in English and Sinhala for Hambantota. Tamil would be an asset;
- Fluency in English and Tamil for other districts. Sinhala would be an asset.

**Operational Skills**
- Motivated, flexible and capable of working under pressure;
- Willingness to travel within Sri Lanka;
- Willingness to work out of normal office.

UNDP offers an attractive compensation package commensurate with experience. This non-career appointments is for a period of one year. Please send your curriculum vitae, with names of two non-related referees and contact telephone numbers to reach us within 10 days of this advertisement to the respective UNDP Transition Office addresses as indicated below. Please indicate position applied for on the top left hand corner of the envelope. UNDP will only be able to respond to those applicants in whom there is further interest. Those who have previously applied for the above positions do not need to apply again. Qualified female candidates are encouraged to apply.

| | |
|---|---|
| Ampara | Sagama Road, Akkaraipattu. Fax : 067-2279205 |
| Batticaloa | No. 30 Charles Velupillai Road, Kallady, Batticaloa. Fax : 065-2226481 |
| Colombo | No. 12 Bagatelle Road, Colombo 3. Fax : 2596722 |
| Galle | 24C Udugama Road, Makuluwa, Galle. Fax : 091-2234658 |
| Hambantota | 38, Tangalle Road, Hambantota. Fax : 047-2222273 |
| Jaffna | No. 121A Temple Road, Jaffna. Fax : 021-2223094 |
| Kilinochchi/Mullaitivu | No. 7 Kumaraswamy Road, Ganeshpuram, Kilinochchi. Fax : 021-2285703 |
| Mannar | Whitney House, Pallimunai Road, Uppukkulam, Mannar. Fax : 023-2250035 |
| Trincomalee | No. 58 Arunagiri Road, Trincomalee. Fax : 026-2227747 |
| Vavuniya | No. 19 Kovil Veethy, Kurumankadu, Vavuniya. Fax : 024-2220611 |

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

கடைப் பாவனைக்குரிய சோக்கேஸ்கள் விற்பனைக்குண்டு. இல.178, (பழைய அங்கர் பார்மஸியடி), அரசடி வீதி, கந்தர்மடம். (44507)

## நாய்க்குட்டி விற்பனைக்கு

**Great Dane X Dobermann Pincher** நாய்க் குட்டிகள் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: க.தனபாலசிங்கம் (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (44422)

## வீடு விற்பனைக்கு

54, புங்கன்குளம் வீதி, கொழும்புத்துறை யாழ்ப்பாணத்தில் 3½ பரப்பு காணியுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு: A.C குலநாயகம், 24, விபுலாந்தர் வீதி, கொழும்புத்துறை, or S. இராஜேந்திரா, 91/1, பாமன் கடை லேன், வெள்ளவத்தை. T.P 011 2365229. (சி-42436)

உரும்பிராய்ச் சந்தியில் இருந்து மருதனார் மடம் நோக்கிச் செல்லும் றோட்டில் 100 யாா துாரத்தில் வீட்டுடன் கூடிய 2 பரப்பு 5½ குழியும் அதன் அருகே 1 பரப்பு 10 குழியும் உள்ள காணியும் விற்பனைக்குண்டு. தனித் தனியாகவோ அல்லது முழுமையாவோ விற்கப்படும். தொடர்பு: S.சிவராஜா, சுழிபுரம் மேற்கு, சுழிபுரம் T.P.: 021 222 5929 (44509)

## காணி விற்பனைக்கு

கெருடாவில் தெற்கு, தொண்டைமானாறு, உடுப்பிட்டி றோட்டில் தொட்டில் கந்தசுவாமி கோயிலுக்கு வடக்குப் பக்கமாயுள்ள மாலை சீட்டி என்ற பெயர் உடைய காணி 24 பரப்பு, வற்றாத நல்ல தண்ணீர்க் கிணற்றுடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: M.K.பாலசுப்பிரமணியக் குருக்கள் அல்லது சிவகுமாரன், 117/2, அரசடி றோட், கந்தர்மடம், யாழ்ப்பாணம். T.P.: 0776018340 (44503)

மீசாலை, புத்தூர்ச் சந்தியில் கண்டி வீதிக்கு அருகில், ஏசியன் கல்வி நிலையம் நடைபெற்று வரும் 7 பரப்பு, வருமானமுள்ளதும் கிணறும் சிறிய கல்வீடும் கொண்ட காணி விற்பனைக்கு உண்டு. தொடர்பு: கா.பூபாலபிள்ளை, "குண வாசா", சுதுமலை தெற்கு, மானிப்பாய்.(சி-42462)

இராச வீதியில் நவக்கிரி சந்திக்கு அருகில் வீடு கட்டவும் தோட்டம் செய்யவும் கிணற்றுடன் கூடிய 16 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: T.P. 222 3772. (44576)

சுன்னாகம், கந்தரோடை வீதி, டாக்டர் நடராசா சுதேச வைத்தியசாலையுடன் இணைந்த 5 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. மேலதிக தொடர்புகளுக்கு 55/2, நீதிமன்ற வீதி, திருகோணமலை. T.P. 026 - 222 7745.(சி-42444)

## இறைச்சிக்கோழி விற்பனைக்கு

புறொயிலர் 1 kg - 170/-, சுத்தம் செய்தது 1 kg - 255/- மற்றும் புறொயிலர் குஞ்சு, பேட்டுக குஞ்சு, கோழி எரு என்பன விற்பனைக்குண்டு. **New R.S.K. Farm,** மான்ஸ் பாடசாலை வீதி, உடுவில், **New R.S.K. Farm,** மானிப்பாய் றோட், பெரிய மதவடி, உடுவில். (44478)

## கோழிக்குஞ்சு விநியோகம்

இரண்டு முறை தடுப்பு மருந்து போடப்பட்ட, **Original Prima Broiler** குஞ்சுகள், பேட்டுக் குஞ்சுகள் 25.04.2005 திங்கட்கிழமை பிற்பகல் விநியோகிக்கப்படும். எமது பருத்தித்துறை - நெல்லியடிக் கிளைகளிலும். சுட்டி பாம் - வட்டுக் கோட்டை. சந்நிதி பாம் - தொண்டைமானாறு. ஐங்கரன களஞ்சியம் - திருநெல்வேலி. முருகன் - சாவகச்சேரி. நல்லூர் பாம் சென்ரர் - நல்லூர். (44267)

## வாடகைக்கு

யாழ்.வைத்தீஸ்வரா சந்தியில் அறைகள் வாடகைக்குண்டு. உயர்தர மாணவர்/அரச அலுவலர் விரும்பத்தக்கது. மற்றும் K.K.S றோட்டில் சகல வசதிகளும் உடைய கடையும வாடகைக்குண்டு. தொடர்பு: 77, மானிப்பாய் வீதி, T. P. 077 6155800. (சி-42463)

## வீடு வாடகைக்கு

பலாலி வீதியில் பரமேஸ்வராச் சந்திக்கு அருகில் சகல வசதியுடனும் சகலதும் தனிப்பட்ட பகுதியாகவும் 3 பேர் கொண்ட சிறிய குடும்பத்திற்கு வீடு உடன் வாடகைக்குண்டு. தொடர்பு: T.P.: 021 222 7069. (44591)

## கடை வாடகைக்கு

மணிக்கூண்டு வீதி (வெலிங்டன் சந்திக்கு அருகில்) யாழ்ப்பாணத்தில் ஒரு கடை வாடகைக்குண்டு. தொடர்பு: இல.54, மணிக்கூண்டு வீதி, யாழ்ப்பாணம். (44593)

## ஜோதிடம்

மணமக்கள் பொருத்தம், தோஷ நிவர்த்தி, வியாபார முன்னேற்றம் அதற்கான தடைகள் நீங்க இன்னும் பலவற்றிற்கும் நீங்கள் நாட வேண்டியது: ஸ்ரீ ராகவேந்திரா, நல்லூர்.(44391)

### சிறுகுறிஞ்சாப் பவுடர்

சிறுகுறிஞ்சா இலையிலிருந்து தயாரிக்கப்பட்ட பவுடர் விற்பனைக்குண்டு. இது நீரிழிவு கர்ப்பப்பை நோயாளர்களுக்கும் சாதாரண மக்களுக்கும் சிறந்த மூலிகையாகும். இதில் விற்றமின் A,C உடன் கல்சியம், இரும்பு போன்ற தாதுப்பொருள்களும் அடங்கும். தொடர்பு:

**BIO TEC INTERNATIONAL**

இல.131/2, பலாலி வீதி, (விவசாய பண்ணைக்கு எதிராக Opposite Farm School)
திருநெல்வேலி.T.P.: 021-4590907.
(43790) (21-16)

## மணமகள் தேவை

கௌரவ குடும்ப, 1976ஆம் ஆண்டு மிருகசீரிடம் முதலாம் பாதமுள்ள U.K இல் உள்ள மணமகனுக்கு, றோமன் கத்தோலிக்க, படித்த, அழகான மணமகள் தேவை. தொடர்பு: M.ரவீந்திரன், துர்க்கையம்மன் பின்வீதி, சாவகச்சேரி.(44204)

1975இல் பிறந்த, கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, கொழும்பில் கணனிப் பொறியியலாளராகப் பணியாற்றும் 32 பாவமுடைய மணமகனுக்கு அழகிய மணமகள் தேவை. விளம்பர இலக்கம் 2568 மே/பா உதயன் யாழ்ப்பாணம். (சி-42481)

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 39 வயது, உயர்நிலைக் கனேடியப் பட்டதாரிக்கு 29-33 வயதிற்கு இடைப்பட்ட மணப்பெண் தேவை. மணமகன் கனேடியக் குடியுரிமை பெற்றவர். (தென்மராட்சி விரும்பத்தக்கது) தொடர்பு: திருமதி இ.சரவணமுத்து இல.50, பொற்றொழிலாளர் வீதி, சங்கத்தானை, சாவகச்சேரி. T.P.: 077 - 9084848 aasai 33@yahoo.com. (44586)

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 32 வயதுடைய, அவிட்ட நட்சத்திரம், மகரராசி, 4இல் செவ்வாய் பாவம் (9) குறைந்த, அரசாங்கத் துறையில் உயர் அதிகார உத்தியோகத்தராகத் தொழில்புரியும் மணமகனுக்கு படித்த அழகிய மணமகள் தேவை. T.P. 021 222 5330. (44583)

## மணமகன் தேவை

இந்து கௌரவ குடும்ப, 1964 ஆம் ஆண்டு, ரேவதி நட்சத்திரம், 8இல் செவ்வாய் உள்ள மணமகளுக்கு (SRI LANKAN SCHOOL IN OMAN) ஆசிரியைக்கு இலங்கையில் பட்டதாரி அல்லது DOCTOR, ENGINEER மணமகன தேவை. தொடர்பு: M.ரவீந்திரன், துர்க்கை அம்மன் பின்வீதி, சாவகச்சேரி. (44205)

இநது கௌரவ குடும்பம், 1969ஆம் ஆண்டு உ்தயச் செவ்வாய், உத்தரம் 3ஆம் பாதம், உள்ள மணமகளுக்கு உள்ளூரில் அரச உத்தியோகம் அல்லது வெளிநாட்டில் உள்ள மணமகன தேவை. தொடர்பு: M.ரவீந்திரன், துர்க்கை அம்மன் பின்வீதி, சாவகச்சேரி. (44203)

இந்து கௌரவ குடும்பம், 1980 ஆம் ஆண்டு பிறந்த பூரட்டாதி நட்சத்திரம் 7இல் செவ்வாய், கிரகபாவம் 80 உடைய மணமகளுக்கு ஏற்ற மணமகனைப் பெற்றோர் தேடுகின்றனர். தொடர்பு: விளம்பர இல. 2560 மே/பா உதயன், யாழ்ப்பாணம். (44390)

டாக்டர், எஞ்சினியர், எக்கவுண்டன், சட்டத்தரணி, இலங்கை நிர்வாக சேவையாளர், விரிவுரையாளர், ஆசிரியை கிரகபாவம் குறைந்த, கூடிய அரச, தனியார் துறையில் பணிபுரியும் மணமகள்களுக்கு 45 வயதுக்கு உட்பட்ட மணமகன்கள் தேவை. சிவாலயா சர்வதேச திருமண நிலையம் 68/15, சட்டநாதர் வீதி, நல்லூர். யாழ்ப்பாணம். T.P. 021 222 7844. (44571)

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1974இல் பிறந்த, புநர்பூசம் 2ஆம் பாதம், செவ்வாய் தோஷமற்ற, கிரகபாவம் குறைந்த உத்தியோகம் பார்க்கும் பட்டதாரிப் பெண்ணுக்குப் பெற்றோர் பட்டதாரித் தகைமையுள்ள மணமகனை எதிர்பார்க்கின்றனர். சாதகக் குறிப்புடனும் குடும்ப விபரத்துடனும் தொடர்பு கொள்ளவும். விளம்பர இல. 2564 C/o உதயன், யாழ்ப்பாணம். (44511)

## தேவை

புறொயிலர், கல்பேட்ஸ், கொள்வனவு செய்யப்படும். வீனஸ் பாம், பலாலி வீதி, திருநெல்வேலி (சந்திக்கு அருகில்). T.P. 5220.(44568)

## தவறிவிட்டது

புலோலி தெற்கு காந்தியூரைச் சேர்ந்த வெள்ளவத்தையை முகவரியாக் கொண்ட தவமணி மயில வாகனம் என்பவரின் தே.அ.அ (508180225V), இரு பிறப்பு அத்தாட்சிப் பத்திரமும் காந்தியூர் தம்பசிட்டி பருத்தித்துறைக்கு மிடையில் தவறி விட்டன. கண்டெடுத்தவர்கள் தம்பசிட்டி பாடசாலைக்கு எதிரேயுள்ள பாலேந்தி கடையில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங் கப்படும். (சி-42475)

அன்ரன் நவராசா அன்னிராஜன் என்பவருடைய மோட்டார் சைக்கிள் ஆவணங்கள் அடங்கிய பை ஒன்று கடந்த வாரம் முகமாலைக்கும் கொடிகாமத்துக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் யாழ்.பல்கலைக்கழக பாலசிங்கம் விடுதியில் ஒப்படைத்து உதவவும். தொடர்புகளுக்கு தொலைபேசி இல. 077 6510231, 077. 3145678. (44594)

### வேலையாள் தேவை

தேநீர்க்கடைக்கு ரீ மேக்கரும், ரொட்டி போடவும் ஆள்கள் தேவை

தொடர்புகளுக்கு: T.P.222 3175 (44592)

### புதிய விற்பனை நிலையம்

**வீனஸ்பாமின் சந்தைப்படுத்தல் பிரிவில் புதிய விற்பனை நிலையம், அரசடி வீதிச்-கஸ்தூரியார் வீதி சந்திக்கு அருகில் திறந்து வைக்கப் பட்டுள்ளது.**

(44569) **வீனஸ்பாம்,**
பலாலிவீதி, திருநெல்வேலி, T.P.5220

## பண்டத்தரிப்பில் நாய்களுக்குத் தடுப்பூசி

யாழ்ப்பாணம்,ஏப்.24

வலி.தென்மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட பண்டத்தரிப்பு பட்டின உப அலுவலகப் பிரிவில் 8 இடங்களில் வளர்ப்பு நாய்களுக்குத் தடுப்பூசி ஏற்றப்படவுள்ளது.

நாளை திங்கட்கிழமை காலை 9.30 மணி முதல் 10.30மணி வரை பிரான்பற்று கோவிலிலும், முற்பகல் 11 மணி முதல் 12.30 மணி வரை பிரான் பற்று ஆரம்ப சுகாதார நிலையத்திலும் -

நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணி முதல் 10.30 மணி வரை சில்லாலை தெற்கு கதிரை மாதா தேவாலயத்திலும், முற்பகல் 11 மணி முதல் 12.30 மணிவரை சாந்தை சனசமூக நிலையத்திலும் -

எதிர்வரும் 27ஆம் திகதி காலை 9.30 மணி முதல் 10.30 மணி வரை பண்டத்தரிப்பு பட்டினசபையிலும், முற்பகல் 11 மணி முதல் 12.30 மணி வரை வடலியடைப்பு சனசமூக நிலையத்திலும் -

எதிர்வரும் 28 ஆம் திகதி காலை 9.30 மணி முதல10.30 மணி வரை பண்டத்தரிப்பு பற்றிமா கோயிலிலும், முற்பகல் 11 மணி முதல் 12.30 மணி வரை பண்டத்தரிப்பு பட்டின சபையிலும் வைத்து தடுப்பூசி ஏற்றப்படும்.

இதேவேளை - அன்றைய தினங்களில் பண்டத்தரிப்பு பட்டின உப அலுவலகப் பொறுப்பதிகாரியினால் வளர்ப்பு நாய குடும்ப அட்டையும் வழங்கப்படும்.

(எ-185-202)

## பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம், ஏப்.24

மண்டைதீவு மகா வித்தியாலயத்தின் பழைய மாணவர் சங்கப் பொதுக் கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு வித்தியாலய மண்டபத்தில் நடை பெறவுள்ளது. (எ- 202)

## ஏழாம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி

**இரத்தினம் சண்முகம்**

தோற்றம் 22.03.1934 — மறைவு 11.05.1998

திதி: சித்திரை பௌர்ணமி 24-04-2005

இவ்வுலகில் ஜென்மங்கள் ஏழு - நீ
எம் உலகில் மறைந்த ஆண்டுகள் ஏழு
எந்த உலகம் சென்றாலும் நன்றாக வாழு - நீ
எம் உலகை எந்நாளும் சிறப்போடு ஆளு!

57, மருதடிவீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

என்றும் உன் நினைவுடன்:
கணவர், மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

(44584) (39-21-16)




யாழ் பல்கலைக்கழக சமூகவியல் சமூகம்
குமரன் புத்தக இல்ல ஆதரவுடன்
யாழ் பல்கலைக்கழக கேட்போர் கூடத்தில் நடைபெறும்

**புத்தக கண்காட்சியும் விற்பனையும்**

ஈழத்து மற்றும் இந்திய வெளியீடுகள்

25.04.2005 திங்கள் முதல் 29.04.2005 வெள்ளி வரை

அரசியல் பண்பாடு உளவியல்
வணிகம் இந்து நாகரீகம் நாவல்கள்
வரலாறு இலக்கியம் கணனி
கலாசாரம் அகராதிகள் தொழில்நுட்பம்

குமரன் புத்தக இல்ல வெளியீடுகளுக்கு சிறப்பு விலைக்கழிவு

## வீடு வாடகைக்கு

யாழ். நகரப் பகுதியின் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த பிரதேசப் பகுதியான 599, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். முன்னர் நீர் வழங்கல் வடிகால் அமைப்பு சபை இயங்கி வந்த கட்டடம் வாடகைக்கு உண்டு. (பின்புற கட்டடமும் உள்ளடங்கலாக) அரச சார்பற்ற நிறுவனங்கள் பெரிதும் விரும்பத்தக்கது. (N.G.O)

(சி-42472) தொடர்பு: 0773107578. (21-16)

## மரண அறிவித்தல்

**சதாசிவம் சிவகுருநாதன்**
**(நல்லையா)**



காளிகோயிலடி, திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்டவரான சதாசிவம சிவகுருநாதன் (நல்லையா) ஆச்சாரி அவர்கள் 15.04.2005 வெள்ளிக்கிழமை அதிகாலை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.04.2005) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் அடக்கத்திற்காகக் கோண்டாவில் இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

*காளிகோயிலடி,*
*திருநெல்வேலி.*

தகவல்:
குடும்பத்தினர்.

(44553)(39-21-16)

## இராசு பாக்கிய தீபங்களின் ஈராண்டு நெருஞ்சும் கதிர்ந்துருகும் நினைவஞ்சலிகள்

தாயின் மடியில் 22 05 1922



தாயின் மடியில் 30 06 1932

அமரர் **சின்னக்குட்டி இராசேந்திரம்** — திருமதி **பாக்கியலட்சுமி இராசேந்திரம்**

**தயாபரன் அடியில் 16.04.2003**

*இல்லறமாம் இன்பச்சோலையில் இணைந்த*
*இராச பாக்கிய தீபங்களே!*
*சித்திரா பூரணையில் தேவர்க்கு அமுதளிக்க*
*இணைந்தே சென்றாண்டு இரண்டானதே!*
*அரனடி இணைக்கீழ் அளப்பெரும் அன்பொடு*
*இராச பாக்கிய தீபங்களே பெறுக சாந்தி!*

எமது இல்லத்தில் இன்று (24.04.2005) ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து இடம் பெறும் மதியபோசனத்திலும் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

கண்டிவீதி.
பளை.

(4444)(52-14-15)

என்றும் நினைவு கூரும்
குடும்பத்தினர்.

# மீண்டும் ஒருமுறை தமிழினத்தை தலை நிமிரவைத்த பெருவெற்றி!



யாழ்ப்பாணக் குடாநாடு அரச படைகளின் ஆக்கிரமிப்புக்குள் அகப்பட்டு மூச்சுத் திணறிக் கொண்டிருந்த காலம்...

அடுத்தது என்னதான் நடக்கும், யார் கைது செய்யப்படுவார்கள், யார் காணாமறபோவார்கள் என்ற அச்ச உணர்வுடன் - அவல வாழ்க்கை



வாழ்ந்த நேரம்...

சித்திரை மாதத்து காலநிலை கடும் வெப்பத்துடனும் இடையிடையே மழைத்தூறல்களுடனும் தனக்கே உரிய பாணியில் மந்தமாய் நகர்ந்துகொண்டிருந்தது.

22.04.2000 ......

அன்றைய காலப் பொழுதும் ஆரவாரங்கள் ஏதுமின்றி அமைதியாகவே பிறந்தது. அதிகாலை தாண்டி நேரம் 7, 8 மணியை நெருங்கிக்கொண்டிருந்தது...

திடீரென்று எங்கும் ஒரே பரபரப்பு அங்கலாய்ப்பு... மக்கள் முகாம்களில் மகிழ்ச்சி.. அப்பாவி மக்கள் மீதான சீருடைதாரிகளின் பார்வை வழக்கத்தைவிட அன்று மேலும் நெருப்பை உமிழ்வதாய் இருந்தது.

இந்த மாற்றங்களுக்கான காரணம் சிலருக்குத் தெரிந்துவிட்டது. இருந்தாலும் அதனை மற்றவர்களுக்கும் சொல்லி மகிழ்ந்திருக்க முடியாத இக்கட்டு நிலை...

எப்படியோ காற்று வாக்கில் பறந்து வந்த அந்தச் செய்தி அன்று முற்பகலுக்கெல்லாம் முற்றாகப் பரவிவிட்டிருந்தது...!



...."ஆனையிறவை பொடியள் பிடிச்சிட்டாங்களாம்... அங்க புலிக்கொடி பறக்குதாம்... எக்கச்சக்கமான ஆமிக்காரர் உள்ளுக்க அம்பிட்டு செத்துப்போனாங்களாம்..."

இலங்கையில் மட்டுமல்ல உலகெங்கிலும் வாழ்ந்து கொண்டிருந்த ஈழத்தமிழினம் தனது தலையை மீண்டும் ஒருமுறை துணிச்சலுடன் - செருக்குடன் - மிடுக்குடன் நிமிர்த்திக்கொண்டது.

பேரினவாதம் தனது போலி முகத்திரை கிழிந்து போனதை எண்ணி - ஆணவச் செருக்கு அடங்கிப் போனதை நினைத்து - தம்மை யாரும அசைக்க முடியாதென்ற மனக்கோட்டை தவிடு பொடியாக்கிப் போனதையிட்டு வெட்கித் தலை குனிந்தது.

உலகப் போரியல் வல்லுநர்கள் தங்களின் கணக்குப் பொய்த்துப்போனதை அறிந்து அதிர்ந்து போயினர்.

சர்வதேச சமூகம் ஒருதடவை ஈழத்தமிழினத்தின் பால் தனது புருவங்களை உயர்த்திக் .கொண்டது.

ஈழத்தமிழர்களின் 270 வருடகால அடிமைச்சின்னம் அழித்தொழிக்கப்பட்டது. .

வடமுனையில் கேந்திரமுக்கியத்துவம் வாய்ந்த - நீண்ட வரலாற்றைக் கொண்ட - பெருமளவான மினிமுகாம்களை, காலவலரண்களை உள்ளடக்கியதாக அமைந்திருந்தது ஆனையிறவுப் பெருந்தளம்.

யாழ்ப்பாணக் குடாநாட்டை வேறு பிரதேசங்களுடன் இணைக்கும் மையத்தில் அமைந்திருந்து, குடாநாட்டின் கழுத்தைத் திருகி மூச்சுத்திணற வைத்துக்கொண்டிருந்தது ஆனையிறவுத்தளம்.

அமெரிக்கா உட்பட வெளிநாடுகளில் பயிற்சிபெற்ற விசேட கொமாண்டோ அணிகள் உட்படப் பல படை டிவிஷன்கள் அங்கு நிலை கொண்டிருந்தன.

இந்தப் பெருந்தளத்தின் மீது விடுதலைப் புலிகள் சுமார் ஒருதசாப்த காலமாக அவ்வப் போது தாக்குதல்களைத் தொடுத்திருந்தார்கள். அந்தத் தாக்குதல்கள் பெரிதளவு வெற்றியை அவர்களுக்குக் கொடுத்திருக்கவில்லை.

1991ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் மட்டும் 602 போராளிகள் வீரச்சாவைத் தழுவிக்கொண்டனர்.

## ரத்வத்தை ஐயாவின் தப்புக்கணக்கு!

யாழ்ப்பாணக் குடாநாடு அரச படைகளிடம் வீழ்ச்சியடைந்த கையோடு, விடுதலைப் புலிகள் பலமிழந்துவிட்டார்கள்; இனி அவர்களால் எதையுமே செய்யமுடியாது என்றே சிங்களப் பேரினவாத சக்திகளும் படை உயர் அதிகாரிகளும் கருதிக்கொண்டிருந்தனர் - கனவு கண்டுகொண்டிருந்தனர்.

"...புலிகளின் பலத்தில் 90 வீதமானவற்றை அழித்துவிட்டோம். இனி இருக்கின்ற வெறும் 10 வீதப்பலத்தை வைத்து அவர்களால் எதுவுமே செய்யமுடியாது. வன்னிக் காட்டுக்குள் வைத்து புலிகளைக் கூண்டோடு அழித்து விடுவோம்...." என்று அப்போதைய பிரதிப் பாதுகாப்பு அமைச்சராக இருந்த ஜெனரால் அனுரத்த ரத்வத்த வீரமுழக்கம் செய்தார்.

தனது கணக்கைத் தாமதிக்காமலே முடிக்கின்றேன் என்று வீறுகொண்டெழுந்த அனுருத்த, மாங்குளத்திலிருந்து ஒட்டுசுட்டான் நோக்கியும், ஆனையிறவிலிருந்து கிளிநொச்சி நோக்கியும் படைநகர்வுக்கு உத்தரவிட்டார்.

அவரது உத்தரவோடு நகர்ந்த படைகள் மாங்குளத்திலிருந்து ஒட்டுசுட்டான் வரையும் ஆனையிறவிலிருந்து பரந்தன் வரையும் முன்னேறியிருந்தன.

1996 ஆம் ஆண்டு யாழ்ப்பாணக் குடாநாட்டை அரச படைகள் முற்றாக கைப்பற்றுவதற்கும் - பரந்தன் வரை ஆககிரமித்து கிளிநொச்சி நோக்கி முன்னேறுவதற்கும் ஆனையிறவுப் பெருந்தளம் பெரிதும் உதவியாய் இருந்தது.

## ஆனையிறவை மீட்கவேண்டிய கட்டாயத்தில் புலிகள்

இந்த நிலையில் யாழ்ப்பாணக் குடாநாட்டை மீணடும் கைப்பற்றுவதற்கு புலிகளின் தலைமை திட்டம் வகுத்தது.

எனவே, யாழ்ப்பாணத்தை இலகுவாக மீட்டெடுக்க வேண்டுமானால் - ஆனையிறவிலிருந்து பரந்தன் வரையும், மாங்குளத்திலிருந்து ஒட்டுசுட்டான் வரையும் முன்னேறியிருந்த படையினரை விரட்டவேண்டுமானால், ஆனையிறவின் மீது கண்வைக்க வேண்டிய கட்டாயம் புலிகளுக்கு எழுந்தது. இவை எல்லாவற்றுக்கும் சேர்த்து ஒரேயடியாகவே திட்டங்களை வகுத்த விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் அந்தத் திட்டத்துக்கு ஓயாத அலைகள் III என்ற பெயரில் செயல் வடிவம் கொடுத்தார்.

ஓயாத அலைகளின் ஆர்ப்பரிப்பில் ஒட்டுசுட்டான் படைகள் மாங்குளத்துக்கு அப்பாலும், பரந்தன் படைகள் ஆனையிறவு வரையிலும் விரட்டியடிக்கப்பட்டனர்.

அந்தக் கையோடு ஆனையிறவைக் கைப்பற்றுவதற்கான நடவடிக்கையையும் புலிகளின் தலைமை துரிதப்படுத்தியது.

## வரலாற்றில் இடம்பிடித்த குடாரப்புத் தரையிறக்கம்

ஆனையிறவுத் தளம் விடுதலைப் புலிகள் வசம் வீழ்வதற்கு வழிகோலிய பிரதான காரணங்களில் ஒன்று கடற்புலிகளால் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்ட குடாரப்புத் தரையிறக்கமாகும்.

26.03.2000 அன்று வெற்றிலைக்கேணியில் இருந்து புலிகளின் தாக்குதல் படைப்போராளிகள், தளபதிகள் என ஆயிரத்து 200 பேரை விசைப்படகுகளில் ஏற்றிக்கொண்டு கடற்படையினரின் கடல்வேலிகள் தடைகள் யாவற்றையும் ஊடறுத்துச் சென்று குடாரப்புக் கரையில் தரையிறங்கினார்கள் கடற்புலிகள்.

குடாரப்புக் கரையில் தரையிறக்கப்பட்ட தாக்குதல் அணிகள் அங்கிருந்து இரவோடிரவாக கண்டி வீதி நோக்கி முன்னேறி வீதியைக் குறுக்கறுத்து மூன்று பக்கங்களில் - பெட்டிவடிவில் அரண்களை அமைத்து ஆனையிறவுப் படைகளுக்கான விநியோகத்தை துண்டித்து படையினரைத் தனிமைப்படுத்தும் முதலாவது நடவடிக்கையை வெற்றிகரமாக முடித்துக் கொண்டனர்.



## ஆபத்தை உணர்ந்து உஷாரான படைகள்

விநியோகம் தடைப்பட்டதும் ஆனையிறவுப் படைகள் தமக்கு ஆபத்து வரப்போவதை உணர்ந்து பெரும் தாக்குதலுக்குத் தயாராகின. விமானங்கள் குண்டுகளை மழையாகப் பொழிந்தன. கடற்படைப் படகுகள் தரையை நோக்கித் தாக்குதலை ஆரம்பித்தன. படையினரின் ஆட்லறிகள், டாங்கிகள் என்பன இடைவிடாது தமது பணியைச் செய்யத் தொடங்கின. மறுநாளே போர் விஸ்வரூபம் எடுத்தது.

கரும்புலிகள், கடற்புலிகள், தரைப்புலிகள எனப் புலிகளின் சகல படையணிகளும் தீவிரமாகச் செயலில் இறங்கின.

கிட்டு பீரங்கிப் படையணி கேணல் ராஜுவின் வழிநடத்தலில் ஆனையிறவின் மையப் பகுதியை நோக்கி எறிகணைகளைப் பொழிந்தது.



## புலிகளின் ஊடறுப்பில் கூறாகிய படை டிவிஷன்கள்

ஜெயந்தன் படையணி இயக்கச்சிப் பகுதியை நோக்கி முன்னேறியது. லெப்டினட் கேணல் சேகர் தலைமையிலான புலனாய்வு அணி ஒன்று இயக்கச்சிக்கும் புதுக்காட்டுச் சந்திக்கும் இடையிலான பிரதேசத்தை ஊடறுததுச் சென்று தளத்தை இருகூறாக்கித் தொடாபுகளைத் துண்டித்தது.

முன்னணிக் காவலரண்களிலிருந்து படிப்படியாகப் பின்நகர்ந்த இராணுவத்தினர் மீண்டும் புதிய காவலரண்களை அமைத்துப் பலப்படுத்திக் கொண்டனர்.

ஆனால், ஜெயந்தன் படையணி இராணுவத்தின் புதிய காவலரண் தொடரில் இரு முனைகளில் உடைப்பை ஏற்படுத்திக் கொண்டு உள்நுழைந்தது. இதனால், இலங்கை இராணுவத்தின் படை டிவிஷன்கள் மேலும் மேலும் கூறுகளாகப் பிரியத் தொடங்கின.

மாசார், சோரன்பற்றுப் பகுதிகள் ஜெயந்தன் படையணினரால் மீட்டெடுக்கப்பட்டன.

## மகளிர் படையணியின் மகத்தான பங்களிப்பு

தாளையடி, செம்பியன்பற்றுப் பகுதிகளில் இருந்து மேஜர் மகாவின் தலைமையில் சோதியா சிறுத்தை மகளிர் படையணியும் கோபன் படையணி மற்றும் நிதித்துறையின் தாக்குதல் அணி என்பனவும் முன்னேற்ற நடவடிக்கைகளை ஆரம்பித்தன. கேணல் விதுஷா தலைமையில் மாலதி படையணியும் செயலில் இறங்கியது. சோதியா படையணிக்குப் பிரதான கட்டளைத் தளபதியாக தளபதி கேணல் துர்க்கா செயலாற்றினார்.

மூத்த தளபதிகளான கேணல் பால்ராஜ், கேணல் ஜெயம் ஆகியோர் தாக்குதல் அணிகளை ஒருங்கிணைத்து வழி நடத்த சகல அணிகளுக்கும் பிரதான கட்டளைத் தளபதியாக தளபதி கேணல் தீபன் செயற்பட்டார்.



கடற்புலிகளின் அணித் தளபதி கேணல் சூசையின் வழிநடத்தலில் கடல்மார்க்கமான விநியோகத்தை இடைமறித்து மூர்க்கத்தனமான தாக்குதலை நடத்தியது. ஹெலிகள் மேலதிக படையினரையும் அவர்களுக்கான விநியோகத்தையும் இடைவிடாது இறக்கிக் கொண்டிருந்தன. வான் தாக்குதல்கள், ஆட்லறி எறிகணை வீச்சுக்கள் என்பனவற்றுடன் மூர்க்கத்தனமாக எதிர்த்தாக்குதல் தொடுத்தது இராணுவம்.

எனினும், புலிகளின் அணிகள் மேற்கொண்ட தந்திரோபயமான ஊடுருவல்கள், ஊடறுப்புகள் என்பன அரச படைகளைப் பல்வேறு கூறுகளாக்கித் தனிமைப்படுத்திக் கொண்டிருந்ததால் படையினர் பலரும் என்ன நடக்கிறது என்றே புரியாமல் தப்பிழைக்கும் வழிகளைத் தேடிக் கொண்டிருந்தனர்.

இறுதியாக நடைபெற்ற 48 மணிநேர கடும் சமரின் பின்னர் அங்கு நிலைத்திருக்க முடியாத அரச படைகள் கரையோரப் பகுதிகள் ஊடாக யாழ்ப்பாணத்துக்குத் திரும்பிவந்தன.

2000 ஆம் ஆண்டு காலைவேளையிலே உலகத் தமிழினத்தின் காதுகளில் அந்த வெற்றிச் செய்தி காற்றலைகளின் ஊடே வந்து வீழ்ந்தது.

ஈழத்தமிழர்களின் தலைகள் யாவும் மீணடும் ஒருமுறை மிடுக்குடன் நிமிர்ந்து கொணடன உலக வல்லரசுகள் பலவற்றாலும் 'வடக்கின் இரும்புக்கோட்டை' என வர்ணிக்கப்பட்ட ஆனையிறவுத் தளத்தைப் புலிகள் படை பெரும் சமர் ஒன்றின் மூலம் மீட்டெடுத்தது.

இந்த ஆனையிறவுத் தளத்தை விடுதலைப் புலிகள் கைப்பற்றிவிட்டதால் யாழ்ப்பாணக் குடாநாட்டையும் புலிகள் கைப்பற்றிவிடுவார்கள் என்று அஞ்சிய படைத் தலைமை ஆனையிறவை மீண்டுப்பிடிப்பதற்கு 'கினிகர' (தீச்சுவாலை) என்ற பெயரில் மீண்டும் ஒரு நடவடிக்கையை ஆரம்பித்தது.

தமது உச்சக் கட்டப் பலத்தைப் பயன்படுத்திப் படைத்தரப்பு தீச்சுவாலை நடவடிக்கையைத் தொடங்கியது. எனினும், இதனை ஏற்கனவே எதிர்பார்த்திருந்த புலிகள் தீச்சுவாலை எரிவதற்கு முன்னரே தமது குருதியினால் அதனை அணைத்தனர். உப்புக்காற்று மீண்டும் ஒரு தடவை தமிழர் வீரத்தைப் பறைசாற்றியது.

இந்தப் பெருவெற்றிச் சாதனைகளின் அத்திபாரக் கற்களாக- ஆணிவேர்களாகத் திகழ்ந்து கொண்டிருப்பவர்கள் இந்தச் சமர்களிலே தமது இன்னுயிர்களை ஈகம்செய்த மாவீரச் செல்வங்கள்.

அவர்களின் குருதி கழுவிய ஆனையிறவுத் தளமும் அண்டிய வெளிகளும் நெடுஞ்சாலையும் அவர்களது நாமங்களை என்றுமே உச்சரித்துக் கொண்டிருக்கும். ★

**அலங்காரன்**

## கோண்டாவிலில் இன்று விளையாட்டு விழா

வலி.வடக்கு,ஏப்.24

கோண்டாவில் ஸ்ரீவாகீஸ்வரி சனசமூக நிலையக் கல்வி வளர்ச்சிக் கழகம், விளையாடடுக்கழகம் ஆகியன இணைந்து நடத்தும் விளையாட்டு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நிலைய மைதானத்தில் செ.கனகசபை தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் முதன்மை விருந்தினர்களாக நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா, நல்லூர் பிரதேச செயலாளர் திருமதி சு.தெய்வேந்திரன், யாழ் பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் இ.இரெட்ணம் ஆகியோரும் -

கௌரவ விருந்தினர்களாக யாழ். செயற்பாட்டு மைய இணைப்பாளர் ந.சுகிர்தராஜ், நல்லூர்ப் பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் மா.பூமகள், நல்லூர் பிரதேச சபை செயலாளர் பொ.வயிரமுத்து ஆகியோரும் -

சிறப்பு விருந்தினர்களாக நிறைவாழ்வகத் தலைவர் செ.செல்வராசா, யாழ். மாவட்டக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் பெ.கனகசபாபதி, கோண்டாவில்- இணுவில் பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் என்.யேசுராசா ஆகியோரும் கலந்துகொள்வர்.

(3-86)



யாழ். சென்ஜோன்ஸ் கல்லூரி ஆரம்பப் பிரிவு மாணவர்களின் மெய்வல்லுநர் போட்டிகளின் ஆரம்ப நிகழ்வில் கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையின் முன்னாள் உடற்கல்வி விரிவுரையாளர் கே.யதுகுலசிங் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு கல்லூரிக் கொடியை ஏற்றிவைக்கிறார்.

அருகில் கல்லூரி அதிபர் எஸ்.தனபாலன், ஆரம்பப் பிரிவு அதிபர் டி.ஜே.தேவதாசன் ஆகியோர் காணப்படுகின்றனர். *(படம்: கொழும்புத்துறைச் செய்தியாளர்)*

## வலி. தெற்கில் தடகளப் போட்டி

வலிகாமம்,ஏப்.24

வலிகாமம் தெற்கு பிரதேச செயலகத் துக்குட்பட்ட பதிவுசெய்த விளையாட்டுக்கழகங்கள் பங்குபற்றும் தடகள விளையாட்டுப் போட்டிகள் எதிர்வரும் 29ஆம், 30ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளன.

கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் வலி.தெற்குப் பிரதேச செயலர் எஸ்.திருவாகரன் தலைமையில் நடைபெறவுள்ள இத்தடகள விளையாட்டுப் போட்டிகளில், முதன்மை விருந்தினராக யாழ். அரச அதிபர் க.கணேஸ் கலந்துகொள்வார்.

வலிகாமம் வலய விளையாட்டுப் பொறுப்பாளர் எஸ்.பார்த்தீபன், ஸ்கந்தவரோதயக் கல்லூரி அதிபர் கே.சிவாஜி ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்துகொள்வர்.

சுமார் இருபதுக்கு மேற்பட்ட விளையாட்டுக்கழகங்கள் பங்குபற்றும் இந்தவிளையாட்டுப் போட்டிக்கான ஏற்பாடுகளை வலிகாமம் பிரதேச விளையாட்டு அலுவலர் எஸ். பாஸ்கரன் மேற்கொண்டு வருகிறார்.

29ஆம் திகதி பிற்பகல் 3 மணிக்கும் 30ஆம் திகதி காலையிலும் நடைபெறும் இவ் விளையாட்டுப் போட்டிகளின் பரிசளிப்பு விழா அன்றைய தினம் மாலையில் இடம்பெறும்.

(3-152)

## பற்றீசியன்ஸ் அணியை 6 விக்கெட்டுகளால் யாழ். பல்கலைக்கழக அணி வென்றது

யாழ்ப்பாணம்,ஏப்.24

யாழ. பல்கலைக்கழக விளையாட்டு அவையினரினால் அழைக்கப்பட்ட கழகங்களுக்கு இடையில் நடத்தப்பட்ட கிரிக்கெட் போட்டியின் இறுதியாட்டத்தில் யாழ். பல்கலைக்கழக அணி ஆறு விக்கெட்டினால் வெற்றிபெற்றது.

நேற்றுமுன்தினம் யாழ். பல்கலைக்கழக மைதானத்தில் இடம்பெற்ற இறுதி ஆட்டத்தில் யாழ். பல்கலைக்கழக அணியை எதிர்த்து பற்றீசியன்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய பற்றீஸியன்ஸ் விளையாட்டுக் கழக அணியினர் 25 ஓவர்கள் முடிவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 103 ஓட்டங்களைப் பெற்றனர்.

துடுப்பாட்டத்தில் பற்றீஸியன்ஸ் விளையாட்டுக்கழக வீரர்களான ஆர்.வினோதன் 44 ஓட்டங்களையும் முகுந்தன் 19 ஓட்டங்களையும் ஆகக் கூடிய ஓட்டங்களாகப் பெற்றுக்கொண்டனர்.

யாழ். பல்கலைக்கழக விளையாட்டுக்கழக வீரர்களான ஜி.அருள்ராஜ் 4.1 ஓவர்கள் பந்து வீசி 7 ஓட்டங்களைக் கொடுத்து 4 விக்கெட்டுகளையும் ஏ.நிஷாந்தன் 4 ஓவர்கள் பந்து வீசி 23 ஓட்டங்களைக் கொடுத்து இரண்டு விக்கெட்டுக்களையும் ரி.யதத்தன் 6 ஓவர்கள் பந்து வீசி 24 ஓட்டங்களைக் கொடுத்து ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய யாழ். பல்கலைக்கழக அணியினர் 26.1 ஓவர்கள் முடிவில் 5 விக்கெட்டுக்களை இழந்து 107 ஓட்டங்களைப் பெற்றனர். துடுப்பாட்டத்தில் எஸ்.தனேஸ்காந 22 ஓட்டங்களையும் ரி.கௌரிபாகன் 21 ஓடடங்களையும் ஜி.அருள்ராஜ் 25 ஓட்டங்களையும் ரி.யதத்தன் 15 ஓட்டங்களையும் என்.சர்வணந்தன் 21 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

பற்றீஸியன்ஸ் விளையாட்டுக்கழக வீரர்களான எஸ்.லெயிட் 5 ஓவர்கள் பந்துவீசி 20 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் ஜே.முகுந்தன் 6 ஓவர்கள் பந்துவீசி 18 ஓட்டங்களுக்கு இரணடு விக்கெட்டுக்களையும் எஸ.றஞ்சித் 5 ஓவர்கள் பந்து வீசி 20 ஓட்டங்களுக்கு இரண்டு விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

இறுதியாட்டத்தில் சிறந்த துடுப்பாட்ட வீரனாகப் பற்றீஸியன்ஸ் விளையாட்டுக் கழக வீரன ஆர். வினோதன் தெரிவுசெய்யப்பட்டார்.

சிறந்த பந்து வீச்சாளராக யாழ். பல்கலைக் கழக வீரன் ஜி.அருள்ராஜ் தெரிவுசெய்யப்பட்டார்.

சிறந்த களத்தடுப்பாளராக யாழ். பல்கலைக் கழக வீரன் ரி.யதத்தன் தெரிவுசெய்யப்பட்டார்.

ஆட்டநாயகனாக யாழ். பல்கலைக்கழக வீரன் ஜி.அருள்ராஜ் தெரிவுசெய்யப்பட்டார்.

ஆட்டத்தின் தொடர் நாயகன் யாழ் பல்கலைக் கழக வீரன் ஜி.அருள்ராஜ் தெரிவுசெய்யப்பட்டார்.

இந்நிகழ்விற்குப் பிரதம விருந்தினராக விஞ்ஞான பீட விலங்கியல்துறை விரிவுரையாளர் எஸ்.நோயல் சுரேந்திரன் கலந்துகொண்டு வெற்றிபெற்றவர்களிற்கான பரிசில்களை வழங்கினார். இப்போட்டிக்கு நடுவர்களாக எஸ்.தயாளன், எஸ.கோகுலன் ஆகியோர் கடமையாற்றினர்.

(3-190)


**சுயதொழிற் பயிற்சிகள்**

▼ ஸ்கிறீன் பிறிண்டிங்
▼ கொம்பியூட்டர் பொலிமர் இறபர், ஸ்ராம் தயாரித்தல்
▼ எங்கிறேவிங்
▼ பிளாஸ்ரிக்

வீட்டிலிருந்தபடியே சுயமாகக் குடும்ப அங்கத்தவர்களுடன் கைநிறையச் சம்பாதிக்கக் கூடிய சுயதொழிற்பயிற்சிகள் மீண்டும் ஆரம்பம்.
பதிவுகளை உடன் மேற்கொள்ளவும்.

**யசோ ஆட் கிறபிக்ஸ்**
35, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.

(44593) (42-17-45)


## மானிப்பாய் பரிஷ் வி.க. 4விக்கெட்டுகளால் வெற்றி

வலி.வடக்கு,ஏப்.24

மானிப்பாய் பரிஷ் விளையாட்டுக் கழகம் அழைக்கப்பட்ட கழகங்களுக்கிடையில் நடத்திவரும் கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் மானிபபாய் பரிஷ் வி.கவும் பற்றீஸியன்ஸ் வி.கவும் மோதிய ஆட்டத்தில் மானிப்பாய் பரிஷ் 4விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய பற்றீஸியன்ஸ் விளையாட்டுக்கழகம் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 133 ஓட்டங்களை மட்டும் பெற்றது.

துடுபபாட்டத்தில் லெயிட் 44 ஓட்டங்களையும், வினோதன் 30 ஓட்டங்களையும் ஆகக் கூடிய ஓட்டங்களாகப் பெற்றுக்கொண்டனர்.

மானிப்பாய் பரிஷ் விளையாட்டுக்கழக வீரர்களான சாத்வீகன் 14 ஓட்டங்களுக்கு 3விக்கெட்டுக்களையும் ஜெயதீபன் 38 ஓட்டங்களுக்கு 2விக்கெட்டுக்களையும் ஜெயரூபன் 20 ஓடடங்களுக்கு 2விக்கெட்டுக்களையும் கைபபற்றினார்கள்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய மானிப்பாய் பரிஷ் விளையாட்டுக் கழகம் ஆறு விக்கெட்டுகளை இழந்து 134 ஓட்டங்களைப் பெற்று 4 விக்கெட்டினாலும் ஓர் ஓட்டத்தினாலும் வெற்றி பெற்றது.

ஜெயராஜ் 42 ஓட்டங்களையும், ஜெயதீபன் 22 ஓட்டங்களையும் ராஜ் 19ஓட்டங்களையும் ஆகக்கூடிய ஓட்டங்களாகப் பெற்றுக்கொண்டனர்.

(3-86)


**கண்ணீர் அஞ்சலி**

எமது அன்புக்கும் பாசத்திற்குமுரிய நண்பன்



**இரத்தினம் அருந்தவராஜன்**
(ரஞ்சன்)

அவர்கள் 22.04.2005 வெள்ளிக்கிழமை அகால மரணமடைந்துள்ளார்.
அன்னாரின் மறைவுதாங்கமுடியாத வேதனையைத் தருகின்றது.அவரை இழந்து தவிக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**அருள் விநாயகர் மோட்டோர்ஸ்**
**106, 108, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.**



# Immediate Vacancy

## Tsunami Education Project - Facilitator

Applications are requested for an experienced person to facilitate in a new education project in Vadamarachchi East and Mulaitivu districts.

Solidar is a consortium of 27 organisations from 12 European countries that support a broad portfolio of projects in srilanka - focusing particularly in the north east. The facilitator will conduct workshops throughout 34 transit camps in Vadamarachchi East and Mulaitivu. Using Multi - media equipment andworking alongside counsellors to educate communities in the science and geography behind Tsunami's.

The available position would be based in Kilinochchi. Applicants should possess:

- At least a University graduation in geography.
- At least two years teaching experience.
- Advanced communication skills. A high command of Written and spoken English would be an advantage.
- Computer literacy (Knowledge of Powerpoint software would be helpful).
- Available to work in the daytime and evenings.

An attractive salary based on skills and experience will be awarded to the successful candidates.

Please bring curriculum Vitae, references and any relevant written geography material.

Applications are invited from male/female candidates including persons with disabilities that possess relevant experience.

Interviews to be held on Wednesday 27th April between 10am-5pm.

**Please come to ASB Office,**
156, Jaffna Road,
Paranthan,
Tel.: 021 228 5070

**Solidar**

(C/42484)(42)

# 31 ஆம் நாள் நினைவும் அந்தியேட்டி அழைப்பும்

தோற்றம் 15 - 03 - 1953



மறைவு 26 - 03 - 2005

## அமரர் கதிர்காமு சந்திரலிங்கம்

26.03.2005 அன்று காலமான எமது அன்புத் தெய்வத்தின் அந்தியேட்டிக்கிரியைகள் நாளை (25.04.2005) திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெறவுள்ளதால் அந்த நிகழ்விலும், அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு எமது உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

8/22, கற்குளம் லேன், கொட்டடி, யாழ்ப்பாணம். (44609)(18-33-15)

தகவல்: இ.ஜெயச்சந்திரன், சாரங்கா படமாடம், T.P.:0776669007

# மரண அறிவித்தல்கள்

## திருமதி பாலன் செல்லம்மா (செம்பி)



நெல்லியோடை, அச்சுவேலி தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பாலன் செல்லம்மா அவர்கள் நேற்று (23.04.2005) சனிககிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பாலன் அவர்களின் அன்பு மனைவியும் வள்ளியம்மை, சரஸ்வதி, கந்தசாமி (லண்டன்), சிவபாதம் (சுவிஸ்), தபோறஞ்சினி ஆகியோரின் அன்புத் தாயாரும் அன்னம்மா, சுந்தரம், இராசமணி ஆகியோரின் அன்புச் சிறியதாயாரும் நடராஜா, சிவசுப்பிரமணியம், மாசில் (இந்தியா), பூபதி (சுவிஸ்), இராசலிங்கம் ஆகியோரின் மாமியாரும் அமரர் கல்யாணி, கமல குமார் (லண்டன்), கலாறஞ்சன், கஜந்தினி, கஜனிகா, பிரபாகரன் (ஹொலண்ட்), கிருபாகரன், கருணாகரன், சஞ்சயகரன், இந்தியா வில் வசிப்பவர்களான ஜெனி, ஜடா, ரிஷோ, சுவிஸில் வசிப்பவர்களான வசிகரன், செந்தூரன், காயத்திரி, கபிலன், கிரிசாந்தன், யானுகா, பானுஜா, டிசாந், கீதாஜெனன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.04.2005) ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் நல்லடக்கத்திற்காக கராடி இந்து மயானத் திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நெல்லியோடை, அச்சுவேலி தெற்கு. (44613)(33-18-15)

தகவல்: பா.சிவபாதம் (மகன்).

## சுப்பிரமணியம் இராசதுரை

மானிப்பாயைப பிறப்பிடமாகவும் அல்வாய் வடக்கில் வசித்தவரும தற்போது புதுக்கலட்டி, அத்தாய் அல்வாயில் வசிப்பவருமாகிய சுப்பிரமணியம் இராசதுரை அவர்கள் 23.04.2005இல் அகாலமரணமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - அழகம்மா தம்பதிகளின் அன்புப் புதல்வனும் தவமணியின் அன்புக் கணவரும் கருணாநிதி (யாழ். போதனா வைத்தியசாலை), பகீரதன் (ஆசிரியர், அம்பன் அ.மி.த.க.பாடசாலை), பரமேஸ்வரன் (வவுனியா), குமரேஸ்வரன் - சூட்டி (உரிமையாளர் - ஸ்ரீகிருஷ்ணா கிறீம்ஹவுஸ், நெல்லியடி), வாசுகி (கல்வியியல் கல்லூரி), வாணி (பி.எச்.எம். பயிற்சியாளர்) ஆகியோரின அன்புத் தந்தையும் யசோதா (யாழ்.தொழில்நுட்பக் கல்லூரி), மதியழகி (குஞ்சு), விஜயலதா ஆகியோரின் அன்பு மாமனாரும் தர்சன், ஜெனனி, அஜானா ஆகியோரின் அன்புப் பேரனும் வேலாயுதம், கணபதிப்பிள்ளை (அமரர்), தங்கராசா (அமரர்), நல்லம்மா, கணேஸ், பத்மாவதி, புஸ்பசாந்தி ஆகியோரின் மைத்துனரும் முத்துக்குமாரு, இராமச்சந்திரன் (அமரர்), பற்றிக்தோமஸ் ஆகியோரின் சகலனும் கேஸ்வரி பெரியபிள்ளை (தொல்புரம்) ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 24-04-2005இல் அவரது இல்லத்தில் பி.ப.1.30 மணியளவில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக் கிரியைக்காக கருகம்பன் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என்பதை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும ஏற்றுக்கொள்ளவும்.

புதுக்கலட்டி, அத்தாய், அல்வாய்(மாலுசந்தி).

தகவல்: இ.குமரேஸ்வரன் (சூட்டி) (ஸ்ரீகிருஷ்ணா கிறீம்ஹவுஸ், நெல்லியடி)

## வணிக முதற்பிரிவுத் தேர்வு

யாழ். பல்கலைக்கழக வெளிவாரிப் பரீட்சையின் வணிகமுதற் பிரிவு 2002-2003 கல்வி யாண்டிற்கான தேர்வு அடுத்தமாதம் 16ஆம் திகதி தொடக்கம் யாழ். பல்கலைக்கழகத்தில் ஆரம்பமாகவுள்ளது.

நேர அட்டவணைகளையும் பரீட்சை அனுமதி அட்டைகளையும் அடுத்தமாதம் 9ஆம் திகதிமுதல் வெளிவாரிப் பட்டப்பதிவுகள் பரீட்சைகள் அலகில் பெற்றுக்கொள்ளுமாறும்-

மேலதிக விவரங்களுக்கு 021 2223612 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளுமாறும் யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் எஸ்.மோகனதாஸ் அறிவித்துள்ளார். (ஐ-202)

## விற்பனைக்கு

எம்மிடம் எட்டுமாதங்கள் வளர்ந்த அல்சேஷன் நாய்க்குட்டிகளும் மற்றும் Select 2 ஸ்கூட்டர், Sony T.V., National டெக் என்பனவும் விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு: 32, சட்டநாதர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். (44603)(18-33-15)

## அறை வாடகைக்கு

யாழ். நகரில் அல்லது அதனை அண்டிய பகுதிகளில் அறை வாடகைக்குத் தேவை.

தொடர்புகளுக்கு: 077 6941617

(44607)(18-33-15)

### நாகம்ஸ் சினிமா சுன்னாகம்

ரஜினி, நயன்தாரா, பிரபு, ஜோதிகா, வடிவேல் நடித்த

காட்சிகள் 11.00, 3.0, 7.00 (பு.நே) விசேட காட்சிகள்: 10.00 (பு.நே.)



### ராஜா யாழ்ப்பாணம்

கலைசிகாரம் கமலஹாசன், மனிஷா கொய்ராலா, வையாபுரி, நாசர் நடித்த

மும்பை X பிரஸ்



காட்சி நேரம்: 10.30, 2.30, 6.30 மட்டும் பு.நே)

விரைவில் 4 ஸ்ருடன்ஸ்

### மனோகரா யாழ்ப்பாணம்

விஜய், ஹரிணி, வடிவேல் நடித்த

சச்சின்



காட்சி நேரம்: 10.30 a.m., 2.30 p.m., 6.30p.m., 9.30 p.m.

### நாகலக்ஸ் சினிமா

தாவடிமைந்தன் ஜெய் ஆகாஷ், பிரணதி, நாசர், தாமு, வையாபுரி நடித்த

குருதேவா



கா.நேரம்: 10.30, 2.30, 6.30, 9.30

# இனி நீங்கள் காத்திருக்கத் தேவையில்லை



தொழில் வாய்ப்பை எதிர்பார்த்திருப்போரே! உங்களுக்கு ஒரு பொருத்தமான வேலை கிடைக்கவில்லையா?

தொழில் நிறுவனங்களே! உங்களுக்குப் பொருத்தமான வேலையாள்கள் கிடைக்கவில்லையா?



இதோ:-

"உங்களுக்கு உதவ நாங்கள் தயாராகி விட்டோம்." யாழ். நகரில் முதன் முறையாக தொழில் வழங்குநரையும் தொழில் எதிர்பார்ப்போரையும் தொடர்புபடுத்தும் ஒரு புதிய முயற்சி.

## கவலையை விடுங்கள்

- பதிவுகள் மேற்கொள்ளும் ஒழுங்கில் தகைமைக்கேற்ப வேலைகள் பெற்றுத் தர நடவடிக்கை எடுக்கப்படும்.
- உங்கள் தொழில் நிறுவனங்களில் உள்ள எத்தகைய வேலைக்கும் பொருத்தமானவர்களை எம்மால் பெற்றுத்தர முடியும்.
- கொழும்பு மற்றும் பிற இடங்களில் வேலை செய்ய விரும்புவோரும், வேலை ஆள்களை எதிர்பார்க்கும் நிறுவனங்களும், தனிப்பட்டோரும் எம்முடன் தொடர்பு கொள்ளலாம்.

**FIRST MAN POWER CENTRE & JOB AGENTS**

021-2223298
0777-252098
077-3068984

முகவரி: POWER GYM BUILDING, 230/1, நாவலர் வீதி, ஆனைப்பந்தி சந்திக்கு அருகில் யாழ்ப்பாணம்.

(C-42478)(64-45-11-17)

## யாழ். கிறிஸ்தவ ஒன்றியம்

# கருத்தரங்கு

பொருள்: ஒன்றிப்பு
இடம்: றிம்மர் மண்டபம்
காலம்: 24.04.2005 பி.பகல் 2 மணி
நடத்துபவர்: அருள்திரு.கலாநிதி M.ஞானவரம்

### இசைவழி நற்செய்தி அறிவிப்பு கதாகாலச் சேமம்

நடத்துபவர்: அருள் திரு.M. ஞானவரம்
இடம்: தூய பேதுரு ஆலயம், யாழ்ப்பாணம்
காலம்: 24.04.2005 மாலை 4.30 மணி

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(44611)(33-18-15)

# துயர் சுமந்து மூன்றாண்டுகள்......



## அமரர் வைரவி சுபாஸ்

மலர்வு 24-10-1950 உதிர்வு 26-04-2002

திதி: சித்திரா பௌர்ணமி 24.04.2005

மூன்றாண்டின் முன் நாம் பட்ட துன்பம் - இன்னும்
முள்ளாகக் குத்துகிறது - ஆலய வாசலில்
பண்பு கெட்ட பதடிகள் செய்துவிட்ட பாதகத்தால்
கண்ணிமைக்கும் நேரத்தில் எமைப் பிரிந்து
சென்றீரே......

மறவாது உம் நினைவுகள்...
ஆறாது எம் துயரங்கள்.....

அச்சுவேலி. (44604)(18-33-15) -குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்கள்

## பஞ்சாட்சரம் ஸ்ரீதரன்



இணுவிலைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸை வசிப்பிடமாகவும் கொண்ட பஞ்சாட்சரம் ஸ்ரீதரன் 20.04.2005 புதன்கிழமை பிரான்ஸில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பஞ்சாட்சரம் (நாவற்குழி) மற்றும் வாலாம்பிகை தம்பதிகளின் அன்பு மகனும் உரும்பிராயைச் சேர்ந்த காலஞ்சென்ற இராமநாதன் மற்றும் மகாலட்சுமி தம்பதிகளின் அன்பு மருமகனும் பத்மாபதியின் அன்புக் கணவனும் ஜனிஷியா, சர்மின ஆகியோரின் அன்புத் தந்தையும் திருஞானசம்பந்தர் (லண்டன்), காலஞ்சென்ற திரு.திருமதி நடராசா (நாவற்குழி) அகியோரின் பெறாமகனும் ஸ்ரீரயனி, ஸ்ரீரங்கன் (ஹொலண்ட்), ஸ்ரீவரதன் (ஸ்ரீவாலாம்பிகை அன் சன்ஸ்), ஸ்ரீவசந்தன் (லண்டன்), ஸ்ரீராகினி ஆகியோரின் பாசமிகு சகோதரனும் பகீரதன் (கண்ணன் அரிசி ஆலை, சுன்னாகம்), வசந்தாதேவி, (ஹொலண்ட்), சிவசோதி, கோணேஸ்வரி (லண்டன்), சிவகுமார் (அம்பிகை அழகுமாடம் - இணுவில்), ரகுநாதன் (பிரான்ஸ்), ரங்கநாதன் (பிரான்ஸ்), ஜெயமோகன் (ஜேர்மனி), ரஞ்சனி (உரும்பிராய்), அருள்ஜோதி (சுவிஸ்), குமுதா (ஜேர்மனி) ஆகியோரின் மைத்துனரும் இந்திரகுமார் (உரும்பிராய்), ஸ்ரீகமலன் (சுவிஸ்), சுசீலன் (ஜேர்மனி) ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (25.04.2005) திங்கட்கிழமை (பிரான்ஸ் நேரம் 11 மணிக்கு) பிரான்ஸில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கே.கே.எஸ். வீதி, இணுவில். (44612)33-18-15)

தகவல்: ஸ்ரீவரதன் (தம்பி).

## திருமதி பரமேஸ்வரி கனகரத்தினம்

கொக்குவில் முதலிகோயிலடியைச் சேர்ந்தவரும் கல்கிசையில் வசித்தவருமான திருமதி பரமேஸ்வரி கனகரத்தினம் 22.04.2005 வெள்ளிக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பிரபல வர்த்தகர் சரவணமுத்து வாரிமுத்து தம்பதியினரின் அருமை மகளும் காலஞ்சென்ற கனகரத்தினம் அவர்களின் அன்பு மனைவியும் லஷ்மிகாந்தி, ஸ்ரீஸ்கந்தராஜா ஆகியோரின் பாசமிகு தாயாரும் ஸ்ரீவேல்நாதன், ஆனந்தகுமாரி ஆகியோரின் பாசமிகு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (25.04.2005) திங்கட்கிழமை பி.ப. 3 மணிக்கு கல்கிசை மஹிந்த மலர்ச்சாலையில் நடைபெற்று, பூதவுடல் கல்கிசை பொது மயானத்தில் தகனஞ் செய்யப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

79/7, சென். றீற்றா வீதி, கல்கிசை. தொ.பே. 011 2725070 (44610)(39-33-18-15)

தகவல்: ஸ்ரீவேல்நாதன் (மருமகன்).

## இரத்தினம் அருந்தவராஜன் (ரஞ்சன்)

(டனோஜ் சொகுசு ஆசன தையலக உரிமையாளர்)



நெடுங்கேணியைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட இரத்தினம் அருந்தவராஜன் அவர்கள் 22.04.2005 வெள்ளிக்கிழமை அகாலமரணமடைந்தார்.

அன்னார் இரத்தினம் - முத்தம்மா அவர்களின் மகனும் மதனிகாவின் அன்புக் கணவரும் டனோஜ, துஜியா, யட்சாயினி ஆகியோரின் பாசமிகு தந்தையும் வரதலட்சுமி, லோகநாயகி, தேவராஜா, நிர்மலாதேவி, லட்சுமிதேவி, கணேசலிங்கம், மகேந்திரம், திருச்செல்வி, சுதாகரன் ஆகியோரின் அன்புச் சகோதரரும் மர்மராஜன், மனோரஞ்சன், மனோரஞ்சிதம், கோபாலகிருஷ்ணன், மதனறஞ்சன் ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.04.2005) ஞாயிற்றுக்கிழமை ந.ப. 12 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் கோம்பையன் மணல் மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தட்டாதெரு, 465, K.K.S.றோட், யாழ்ப்பாணம். (44598)(39-33-18-15)

தகவல்: குடும்பத்தினர்.

## சப். இன்ஸ்பெக்டருக்கு விளக்கமறியல்

கொழும்பு.ஏப்.24

போதைப்பொருள் கடத்தலுடன் தொடர்புடைய சப். இன்ஸ்பெக்டர் ஒருவர் நீதிமன்ற உத்தரவின் பேரில் விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

கடந்த புதன்கிழமை கொள்ளுப்பிட்டியில் இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவத்தை அடுத்துக் கைது செய்யப்பட்ட பொலீஸ் அதிகாரியே விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

மீரிகாமம் பொலீஸ் நிலையத்தில் சமிக்ஞை கட்டுப்பாட்டுப் பிரிவில் பணியாற்றிய பிரஸ்தாப நபர் நீதிமன்றத்தில் ஆயர் செய்யப்பட்டு எதிர்வரும் 4ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டார். (3)

## யாழ். மருத்துவ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மருத்துவபீடத்துக்கு உள்வாங்குமாறு யாழ். பல்கலைக்கழக நிர்வாகத்துக்கு பணித்திருந்தது.


இவர்களில் 31 சிங்கள மாணவர்களும் ஒரு முஸ்லிம் மாணவரும் இரண்டுதமிழ் மாணவர்களும் அடங்குவர்.

ஏற்கனவே 21 முஸ்லிம் மாணவர்களுக்கும் 4 சிங்கள மாணவர்களுக்கும் யாழ்.பல்கலைக்கழகத்தில் அனுமதி வழங்கப்பட்டிருந்தது.

ஆனால், அவர்கள் பதிவுகளை மட்டும் செய்துவிட்டு விரிவுரைகளுக்குச் சமுகம் அளிக்காது தெற்கில் தங்கியுள்ளனர் என்று யாழ். பல்கலைக்கழக நிர்வாகம் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவிற்குத் தெரிவித்துள்ளது.

யாழ்.பல்கலைக்கழகம் தொடர்பாகவும், யாழ்.மாவட்ட நிலைமை தொடர்பாகவும் இவர்கள் உண்மைக்கு மாறான தகவல்களை தெற்கில் பரப்பி வருகின்றனர் என்றும் –

புதியவர்கள் விடயத்திலும் இதுபோன்ற நிலை ஏற்படாது இருப்பதை பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு உறுதி செய்யவேண்டும் என்றும் யாழ்.பல்கலைக்கழக நிர்வாகம் கேட்டுள்ளது. (ஐ-3)



வலி. வடக்கு மீள் குடியமர்வு தொடர்பாக ஆராய்வதற்கான கூட்டம் ஒன்று பிரதேச செயலக அலுவலகத்தில் நேற்று இடம்பெற்றது. அதில் தமிழ்க் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா உரையாற்றுவதையும், கூட்டத்தில் கலந்துகொண்ட அரச அதிகாரிகளையும் படங்களில் காணலாம்.

(செய்தி 2ஆம் பக்கத்தில்)

(படங்கள்: நேசன்)

## தெற்கில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குதங்களை இலங்கை அரசு ஏற்கனவே இந்தியாவுக்கு வழங்கியுள்ளது. இது போன்று வெளிநாடுகளுக்கு எண்ணெய்க் குதங்களைக் குத்தகைக்கு வழங்குவதனால் அதுபற்றி இலங்கை அரசு முன் கூட்டியே இந்தியத் தரப்புக்குத் தெரியப் படுத்தியிருக்கவேண்டும். இத்தகைய இணக்கப்பாட்டை மீறும் வகையில் சீனாவுடன் இலங்கை உடன்படிக்கை ஒன்றை எட்டி இருப்பது குறித்து இந்தியா அதிருப்தி அடைந்துள்ளது என்று அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (ஐ-3)

## அவசரமாக நாடு ..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முதலமைச்சர் ரெஜினோல்ட் கூரேக்கு எதிராக எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி கொண்டு வந்துள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான வாக்கெடுப்பு நாளைமறுதினம் செவ்வாய்க்கிழமை நடைபெறவிருக்கின்றது. இந்த வாக்கெடுப்பின் போது நடுநிலை வகிப்பது என்று ஜே.வி.பி. தீர்மானித்திருப்பதாகக் கூறப்படுகிறது.

ஜே.வி.பியின் இந்த முடிவு ஆளும் தரப்புக்கு பெரும் நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது.

நாளை நடைபெறவுள்ள வாக்கெடுப்பில் ஆளும் தரப்பை வீழ்த்துவதுடன் தனது அதிர்ச்சி வைத்தியத்தை ஜே.வி.பி. ஆரம்பிக்கலாம் என்று அரசியல் அவதானிகள் பரபரப்புடன் எதிர்பார்த்திருக்கின்றனர்.

மேல்மாகாண சபையில் ஏற்பட்டிருக்கும் இந்த நெருக்கடியைச் சமாளிப்பதற்கான இறுதி உத்திகள் பற்றி ஆலோசிப்புதற்காகவும் –

சூடுபிடித்திருக்கும் பொதுக்கட்டமைப்பு விடயத்தில் ஜே.வி.பியை வழிக்குக் கொண்டு வர எடுக்கக்கூடிய இறுதிக்கட்ட முயற்சிகள் பற்றித் தீர்மானிப்பதற்காகவுமே ஜனாதிபதி அவசர அவசரமாக நாடு திரும்புகிறார் என்று ஆளுங் கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை –

இந்தோனேஷியத் தலைநகர் ஜகார்த்தாவில் நடைபெறும் 'பண்டுங்' மாநாட்டுக்கு புறப்படமுன்னர் நேற்றுமுன்தினம் ஜே.வி.பி. தலைவர் சோமவன்ஸ அமரசிங்கவை வெளிவிவகார அமைச்சர் லஷ்மன் கதிர்காமர் சந்தித்தார்.

பொதுக்கட்டமைப்பு விடயத்தில் விடுதலைப் புலிகளுடன் அரசு கைச்சாத்து எதனையும் செய்துகொள்ளமாட்டாது என்ற உறுதிமொழியை அப்போது அமைச்சர் கதிர்காமர் சோமவன்ஸவிடம் வழங்கினார் என்று தகவல்கள் தெரிவித்தன.

இச்சந்திப்பின்போது பொதுக்கட்டமைப்புத் தொடர்பான உடன்பாடு கைச்சாத்திடும் நிலைக்கு வந்துள்ளதாக வெளியான செய்திகளை சோமவன்ஸ கதிர்காமரிடம் சுட்டிக்காட்டினார்.

அவ்வாறான உடன்பாடு எதுவும் கைச்சாத்திடப்படமாட்டாது என்று அவரிடம் உறுதிபடக் கதிர்காமர் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில் –

ஜே.வி.பியினர் இணக்கம் இன்றி பொதுக் கட்டமைப்பு உடன்பாடு எதுவும் கைச்சாத்திட மாட்டாது என்பதைத் திட்டவட்டமாகத் தெரிவிக்கும் கடிதம் ஒன்றை ஜே.வி.பியின் தலைமைக்கு வழங்கிவிட்டே ஜனாதிபதி லண்டன் சென்றிருந்தார் என்று ஒரு தகவல் தெரிவித்தது. (ஐ-3)

## மரண அறிவித்தல்கள்

### சின்னப்பு தம்பிரத்தினம் (பவுண்)

அச்சுவேலி வடக்கைப் பிறப்பிடமாகவும் அச்சுவேலி தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னப்பு தம்பிரத்தினம் (பவுண்) அவர்கள் நேற்று (23.04.2005) சனிக்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னப்பு மற்றும் செல்லமணி தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரனும் காலஞ்சென்ற குமாரு மற்றும் செல்லப்பாக்கியம் தம்பதிகளின் மருமகனும் அகிலேஸ்வரியின் அன்புக் கணவரும் லக்கிமாலா, கிரிசாந்தன், கஜமுகன், கிருசிகா ஆகியோரின் பாசமிகு தந்தையும் யோகரத்தினம், ஜெயக்குமார் (சுவிஸ்), செல்வரத்தினம் (கோலாபஸ்), காலஞ்சென்ற தர்மபாலா (கோலா), ஜெயராணி, ஜான்சிராணி, யோகராணி, விஜயராணி ஆகியோரின் அன்புச் சகோதரரும் அழகானந்தம்; அற்புதராசா, பவானந்தம், சிவானந்தம், குகானந்தம், யோகானந்தம், விமலேஸ்வரி, இராசேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அச்சுவேலி தெற்கில் உள்ள அவரது இல்லத்தில் இன்று (24.04.2005) ஞாயிற்றுக்கிழமை நடைபெற்று, பூதவுடல் பிற்பகல் 12.30 மணியளவில் தகனக் கிரியைகளுக்காக வல்லை இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் எற்றுக்கொள்ளவும்.

அச்சுவேலி தெற்கு,
அச்சுவேலி. (C/42493) (33-18-15)

தகவல்:
சி.செல்வரத்தினம்,
கோலா ரஞ்சன் (சகோதரன்).

### மூத்ததம்பி கந்தையா

கேணியடி குப்பிளானைப் பிறப்பிடமாகவும் கிளுவானை ஒழுங்கை கோப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட மூத்ததம்பி கந்தையா நேற்று (23.04.2005) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் தவமணியின் அன்புக் கணவரும் செல்வகுமார் (சுவிஸ்), ராஜ்குமார் (ஹொலண்ட்), விஜயகுமார்(கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் காந்தரூபி, பாலகௌரி ஆகியோரின் அன்பு மாமனாருமாவார்.

அன்னாரின் தகனக்கிரியைகள் இன்று (24.04.2005) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் கோப்பாய் இந்து மயானத்தில் இடம்பெறும்.

கிளுவானை ஒழுங்கை,
கோப்பாய் மத்தி. (C/42494) (53-33-18-15)

தகவல்:
எஸ்.காங்கேசு

### தம்பையா சுப்பிரமணியம் (சுப்பண்ணை)

நீர்வேலி தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாக்வும் கொண்ட தம்பையா சுப்பிரமணியம் நேற்று (23.04.2005) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

பூதர்மட ஒழுங்கை,
நீர்வேலி தெற்கு, நீர்வேலி. (44617) (53-33-18-15)

தகவல்:
தில்லைநாதன் (மகன்).

sky computer system
No, 109,kandy Road, Chundikuli, Jaffna.
Hot-line: 0777 222478
விற்பனைக்குண்டு
Pentium III 500MHZ IBM Computer with Multimedia
10 GB Hard Disk
128 MB RAM
25,500/-
ஒருவருட உத்தரவாதத்துடன்
Unlimited soft ware & free dust cover
15" Monitor - 6,500/-
அரசாங்க ஊழியர்களுக்கு
தவணைமுறையில் பெற்றுக்கொள்ளும்
விசேட சலுகை உண்டு
(C/42471) (கச்சேரிக்கு அருகில்)

GAMA அபாக்கஸ்
திவ்யு.com
ஏமாற்றுக்காரர்கள்
அல்ல
வாக்குறுதிகளை
நிரூபித்துக்காட்டுகிறோம்
28 ஆம் திகதி
(C/42491)

NEW SCIENCE CENTRE
யாழ்நகர்
A/L 2007
புதிய பிரிவு
கணித,
விஞ்ஞான
பிரிவுகள்
(C/42680)
ஆரம்பம் : 24-04-2005 Sun. 9a.m.
ஆசிரியர் அன்பழகனின் 19ஆவது
இரசாயனவியல் கருத்தரங்கு
26-04-Tue 8.30இற்கு நடைபெறும்.

## மரண அறிவித்தல்கள்

### கதிரவன் மாரிமுத்து (றம்பா)

(ஓய்வுபெற்ற சிமெந்துத் தொழிற்சாலை ஊழியர்)



மாவை கலட்டியைப் பிறப்பிடமாகவும் Dr.சுப்பிரமணியம் வீதி, சுன்னாகத்தை வதிவிடமாகவும் கொண்ட கதிரவன் மாரிமுத்து அவர்கள் நேற்று (23.04.2005) சனிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.04.2005) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நடைபெற்றுப் பூதவுடல் சுன்னாகம் கொத்தியாலடி இந்து மயானத்தில் தகனஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

DR.சுப்பிரமணியம் வீதி,
சுன்னாகம். (44614) (53-33-18-15)

தகவல்:
குடும்பத்தினர்.

### ததேயு கிறிஸ்தோப்பர்



முல்லைத்தீவைப் பிறப்பிடமாகவும் கொய்யாத் தோட்டம், புது வீதியை வதிவிடமாகவும் கொண்ட ததேயு கிறிஸ்தோப்பர் அவர்கள் நேற்று (23.04.2005) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

புது வீதி.
கொய்யத்தோட்டம். (44615) (53-33-18-15)

தகவல் :
குடும்பத்தினர்.

### கந்தன் மூத்ததம்பி



மீசாலை வடக்கு வேம்பிராயைச் சேர்ந்த கந்தன் மூத்ததம்பி அவர்கள் 22.04.2005 ஆம் திகதி அகாலமரணமானார்.

அன்னார் கனகம்மாவின் அன்புக் கணவரும் சிவராசா (காலஞ்சென்ற), சிவலிங்கராசா (சுவிஸ்), செல்வராசா, யோகம்மா, யோகேஸ்வரி, புவனேஸ்வரி (கனடா), வனிதா (சுவிஸ்), யோகராசா ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.04.2005) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக வேம்பிராய் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் எற்றுக்கொள்ளவும்.

மீசாலை வடக்கு,
வேம்பிராய், (44616) (53-33-18-15)

தகவல்:
ஈசன் (மருமகன்).

EXPOAIR எக்ஸ்போ ஏயார்
your friend in the skies... வானத்தில் உங்கள் நண்பன்...


தினசரி யாழ் - கொழும்பு விமான சேவை
ஒதுக்கீடுகளுக்கும் விமான பயணச்சீட்டுக்களுக்கும்
கொள்ளுப்பிட்டியில் - 011 2372 952 / 3, வெள்ளவத்தையில் - 011 2360 290 / 1
யாழ்ப்பாணத்தில் - 021 222 3891 / 6297, 0772 348888, 0772 349999
E-Mail : reservations@expoavi.com, jaffna@expoavi.com

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் [பிறைவேட்] நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 24.04.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# இலங்கையில் சுதந்திரத் தங்கப் பணிப்பாளர் ஒரிபிளேம் நிறுவனத்திற்குக் கிடைத்தது

சுவீடனின் சரும ஆரோக்கிய நிறுவனமான 'ஒரிபிளேம்' நிறுவனத்துக்கு இலங்கை ஆறாவது தங்கப் பணிப்பாளரை உருவாக்கியுள்ளது. இது இந்தக் கம்பனியின் நேரடி விநியோக வெற்றியின் வளர்ச்சியை எடுத்துக்காட்டுவதாக அமைந்துள்ளது.

அதி உன்னத விற்பனைச் சாதனையாளர்களைக் கொண்ட இந்த உன்னதமான குழுவில் இப்போது இணைந்து கொள்பவர் திருமதி கிரிஸ்டிபிள் அமரசேகர. இவர் ஒருமுன்னாள் கணக்காளர்.

இந்த வெற்றிக்கான அவரது அங்கீகாரம் அவுஸ்திரேலியாவின் சிட்னி நகரத்துக்கான ஒருவார பயணத்துக்கான அழைப்பு மற்றும் ரொக்கப் பரிசாக 2,00,000 ரூபா பணம் என்பனவற்றோடு இணைந்துள்ளது.

ஒரிபிளேமின் முகாமைத்துவப் பணிப்பாளர் பிரட்ரிக் விடல் இதுபற்றிக் கூறுகையில், ஒரிபிளேம் மக்களின் கனவுகள் நனவாக உதவுகின்றது. கடின உழைப்புக்கொண்ட ஆலோசகர்கள் ஒரிபிளேமுடன் இணைந்துள்ளதால் இது முடியுமான அளவு உச்சத்துக்குச் செல்லலாம். இது ஒவ்வொரு தனிநபரையும் பொறுத்தது என்றார்.

இலக்குகளை நிர்ணயித்து அதை நோக்கிச் செல்வதில்தான் இது தங்கியுள்ளது. கிரிஸ்டிபிள் அமரசேகர ஆறு வருடங்களுக்கு முன் ஒரிபிளேமுடன் இணைந்தார். இப்போது அவர் இந்தக் கம்பனிக்கு ஒரு சொத்து. அவருடைய சாதனையைக் கண்டு நாம் மகிழ்ச்சியடைகின்றோம். இலங்கையில் சாதனையாளர்களைக்கொண்ட அதி உச்ச குடும்பத்துக்கு கிரிஸ்டிபிளை வரவேற்பதில் நான் பெருமையடைகின்றேன். என்று அவர் சொன்னார்.










# சர்வோதய - மைக்ரோ சொவ்ட் ஏற்பாட்டில் வவுனியா நகரில் Tele Centre திறப்பு




வவுனியாவில் நிறுவப்பட்டுள்ள Tele Centre திறப்பு விழாவின் போது கலந்துகொண்ட மைக்ரோ சொவ்ட் நிறுவனத்தின் சமூக நிகழ்ச்சித் திட்டப் பிரிவின் பிராந்தியப் பணிப்பாளர் லோரி போர்மன் மற்றும் சர்வோதய அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் வின்யா ஆரியரட்ன ஆகியோர் Tele Centre விளம்பரப் பலகையின் முன்பாகக் காணப்படுகின்றனர்.

மைக்ரோ சொவ்ட் நிறுவனமும் சர்வோதய அமைப்பும் ஒன்றிணைந்து வவுனியாவில் Tele Centre ஒன்றை நிறுவியுள்ளது. வவுனியா மக்களுக்குத் தகவல் தொழில்நுட்ப வசதிகளை வழங்குவதற்காகவே இந்நிலையம் நிறுவப்பட்டுள்ளது.

வவுனியாவில் உள்ள சர்வோதய மாவட்ட நிலையத்தில் நிறுவப்பட்டுள்ள இந்த Tele Centre இம் மாவட்டத்தில் உள்ள 300 கிராமங்களுக்குத் தகவல் தொழில்நுட்ப வசதிகளை வழங்கும்.

இந்த நிலையத்தில் அசல் சொப்ட் வயர் மற்றும் கணினி வலையமைப்பு போன்றவை பொருத்தப்பட்ட கணினிகள், பிரதியெடுக்கும் இயந்திரங்கள், பிரிண்டர்ஸ், பெக்ஸ் இயந்திரங்கள், தொலைபேசிகள், ஸ்கேனர்கள் மற்றும் டிஜிடல் கமராக்கள் போன்றவை பொருத்தப்பட்டுள்ளன. பயிற்றப்பட்ட இளைஞர்கள் இந்த நிலையத்தை நிர்வகிப்பர்.

இந்த நிலையம் தகவல் தொழில்நுட்பம், தொடர்பாடல் சேவைகள், கிராமப்புற தகவல் நிலையங்களை ஒருங்கிணைத்தல் போன்றவை மீது வவுனியா மக்களுக்குப் பயிற்சிகளை வழங்கும்.

இப்பயிற்சிகளுக்கு அப்பால் இந்த நிலையம் கிராம இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பை உண்டு பண்ணுவதில் உதவிகளை வழங்கும். இதற்கென கணினிப் பயிற்சித் திட்டங்களின் ஊடாக தொடர் பயிற்சிப் பட்டறைகளும் மற்றும் கருத்தரங்குகளும் நடத்தப்படும்.

இந்த நடவடிக்கைகளை மைக்ரோ சொவ்ட் நிறுவனமும் சர்வோதய அமைப்பும் ஒன்றிணைந்தே மேற்கொள்ளும்.

இந்நிலையத்தின் திறப்புவிழாவின்போது கலந்துகொண்ட மைக்ரோ சொவ்ட் நிறுவனத்தின் சமூக நிகழ்ச்சித் திட்டப் பிரிவின் பிராந்தியப் பணிப்பாளர் லோரி போர்மேன் கூறுகையில்:-

சமூகத்திற்கு மிகவும் அவசியமான தகவல் தொழில்நுட்ப உதவிகளை வழங்குவதில் மைக்ரோ சொவ்ட் நிறுவனம் என்றும் அர்ப்பணிப்புடன் செயற்படுகிறது. இந்த சர்வதேச முயற்சி இவ்வாறான வாய்ப்புகள் இல்லாத மக்களுக்குப் பெரும் உதவியாய் அமையும். மக்களின் தனிப்பட்ட மற்றும் பொருளாதார அபிவிருத்தியை மேம்படுத்த அவர்களுக்கு அவசியமானவற்றை வழங்கி மைக்ரோ சொவ்ட் நிறுவனம் அதன் உண்மைச் சேவையை வெளிப்படுத்தும் எனக் கூறினார்.

சர்வோதய அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் வின்யா ஆரியரட்ண உரையாற்றுகையில் கூறியதாவது:-

சர்வோதய அமைப்பு இந்த நாட்டிற்கான சமாதானத்தின் மீது அக்கறைகொண்டு செயற்படும் ஓர் அமைப்பு என்பதால், மைக்ரோ சொவ்ட் நிறுவனத்துடன் இணைந்து இந்த Tele Centreயை நிறுவியதில் நாம் பெருமையடைகின்றோம். இந்தப் புதிய நடவடிக்கை வவுனியாவில் உள்ள அனைத்து இன மக்களுக்கும் பெரும் உதவியாய் அமையும். தகவல் தொழில்நுட்ப வசதியைப் பயன்படுத்தி தங்களின் பிரதேசங்களை அபிவிருத்தி செய்துகொள்ள இது ஓர் அரிய வாய்ப்பாகும் எனக் கூறினார்.

# சௌகரீகமான வாழ்வை விரும்புவோருக்கு "Sunflower Court" குடிமனைத் தொகுதி

அமைதியான மற்றும் சௌகரீகமான குடிமனைகளைத் தேடுவோருக்கு ஓர் அரிய வாய்ப்பு. அவர்களுக்கெனவே நிர்மாணிக்கப்பட்டுள்ளது "Sunflower Court" குடிமனைத் தொகுதி.

இந்த நிர்மாணிப்புத் திட்டத்தை முன்னெடுத்துச் சென்ற LA Properties(Pvt)Ltd. இன் பணிப்பாளர் வஸந்த டீ சில்வா இதுபற்றிக் கூறுகையில்:-

அதிநவீன, சௌகரிகமான வீடுகளைத் தேடுவோர்க்காகவே இது நிர்மாணிக்கப்பட்டுள்ளது. கொழும்பு-14, நாகலகம் வீதியில் நிர்மாணிக்கப்பட்டுள்ள இக் குடிமனைத் தொகுதியில் இருந்து புறக்கோட்டைக்குப் பயணம் செய்ய 10 நிமிடங்களே எடுக்கும். அதேபோல தலைநகரின் முக்கிய இடங்களுக்குச் செல்ல ஓரிரு நிமிடங்களே எடுக்கும்.

இந்தக் குடிமனைத் தொகுதி மொத்தம் 22 வீடுகளைக் கொண்டிருக்கின்றது. இவை ஒவ்வொன்றும் பாதுகாப்புடன்கூடிய தனித்தனி வாகனத் தரிப்பிடத்தைக் கொண்டுள்ளது. இதில் வீட்டை வாங்குபவர்கள் முழுக்கட்டணத்தில் 15 வீதத்தைச் செலுத்தி ஒரு மாதத்திற்குள் குடிபுகலாம். மீதியை தவணைமுறைப்படி செலுத்தலாம்.



இக்குடிமனைத் தொகுதி முக்கியமானதோர் இடத்தில் அமைந்திருப்பதால் வெளியூர்களில் இருந்து வர்த்தக நோக்கிற்காகவும் ஏனைய தேவைகளுக்காகவும் வருபவர்களுக்கு இது மிகவும் உகந்தது எனக் கூறினார்.

இது தொடர்பான மேலதிக விவரங்களைப் பெற விரும்பினால் 0714-184255 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாக சஜி என்பவரைத் தொடர்பு கொள்ளலாம்.

# 'காசி' தொலைபேசிக் கூண்டுகள் Tritel நிறுவனம் நிறுவியது



Tritel நிறுவனத்தின் தொழில்நுட்பவியலாளர்கள் புதிய காசி தொலைபேசிக் கூண்டு ஒன்றை நிறுவுகின்றனர்.

Tritel தொலைத்தொடர்பு நிறுவனம் நாடு பூராகவும் 350 புதிய தொலைபேசிக் கூண்டுகளை நிறுவியுள்ளது. 'காசி' என்ற பெயரில் நிறுவப்பட்டுள்ள இந்தத் தொலைபேசிக் கூண்டுகளில் சில்லறை நாணயங்கள் மாத்திரமே பயன்படுத்த முடியும். கட்டணம் செலுத்தப்பட்ட அட்டைகள் ஏதும் இதில் பயன்படுத்தமுடியாது.


Tritel நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி கே. விஜயகுமார் இதுபற்றிக் கூறுகையில்:-

இத்துறை தொடர்பாக நாம் மேற்கொண்ட ஆய்வுகளின்படி, அநேகமானவர்கள் சில்லறை நாணயங்களைக் கட்டணமாகச் செலுத்தியே தொலைபேசி அழைப்புகளை மேற்கொள்ள விரும்புகின்றனர்.

பணம் செலுத்திப் பெறப்படும் அட்டைகளை அவ்வளவாக விரும்புவதில்லை. சில்லறைக் காசுகள் எல்லோரினதும் கைகளில் எந்நேரமும் இருப்பதே இதற்குக் காரணம். அதேவேளை, 100 ரூபாவைச் செலுத்தி அட்டை ஒன்றைப் பெறுவது சிலருக்கு சாத்தியப்படாது.

இந்த விடயங்களைக் கருத்திற்கொண்டதன் காரணமாகவே நாம் இந்தப் புதிய நடவடிக்கையை மேற்கொண்டோம். வாடிக்கையாளர்கள் இதில் ஒரு ரூபா, இரண்டு ரூபா, ஐந்து ரூபா மற்றும் பத்து ரூபா ஆகிய நாணயக் குற்றிகளைப் பயன்படுததித் தொலைபேசி அழைப்புகளை மேற்கொள்ளலாம். பேசிக் கொண்டிருப்பவர் தொடர்ந்தும் பேச விரும்பினால் ஒரு ரூபா நாணயக்குற்றிகளைப் பயன்படுத்தி நேரத்தை நீடித்துக் கொண்டு போகலாம்.

இந்த 350 புதிய தொலைபேசிக் கூண்டுகளுடன் சேர்ந்து நிறுவனத்தின் வலையமைப்பு 4,500 ஆக அதிகரிக்கும். இவற்றுள் 40 வீதம் கிராமப் புறங்களில் நிறுவப்பட்டுள்ளது. இன்னும் அதிகளவிலான 'காசி' தொலைபேசிக் கூண்டுகள் ஒருசில மாதங்களுக்குள் நிறுவப்படும் எனக் கூறினார்.



சூரியகாந்தி

உதயன்

ஞாயிறு சிறப்பம்சம்

24.04.2005

# துணைப் படைகளுக்குள் பிளவு நிழல் யுத்தத்துக்குப் பின்னடைவு



கிழக்கில் விடுதலைப் புலிகளுக்கு எதிராக ஸ்ரீலங்காப் படையினர் துணைப்படைகளின் ஆதரவுடன் நடத்திவரும் நிழல் யுத்தம் தோல்விகளைச் சந்தித்து வருவதாக ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

படையினர் நம்பிய துணைப்படைகளுக்கு மத்தியில் உருவாகியுள்ள உட்பூசல்களே இந்தத் தோல்விக்கு காரணமாகக் காட்டப்படுகின்றன.

விடுதலைப் புலிகளுக்கு எதிராக நடத்திவரும் மறைமுக யுத்தத்துக்காக ஈ.பி.டி.பி., கருணா அணி, ராசிக்குழு, புளொட் மோகன் குழு, ஈ.என்.டி.எஸ்.எவ். குழு ஆகியவற்றைச் சேர்ந்த உறுப்பினர்களுக்குப் பாதுகாப்பு வழங்கி, இருப்பிடம், உணவு வசதிகளை அளித்து சுகபோக வாழ்க்கையை ஏற்படுத்தி வந்தது ஸ்ரீலங்கா படைத்தரப்பும், புலனாய்வுப்பிரிவும்.

தமது போராளிகள், ஆதரவாளர்கள் கொல்லப்படுவதற்குக் காரணம் அரச படைகளின் அனுசரணையுடன் செயற்படும் துணைப்படைகளும் புலனாய்வுப்பிரிவினருமே என்று விடுதலைப் புலிகள் சர்வதேச மட்டத்திலும், உள்ளூர் மட்டத்திலும் தமது கண்டனங்களை வெளியிட்டு வந்தனர். ஆனால், அந்தக் குற்றச்சாட்டுகளை அரசும் படைத்தரப்பும் அடியோடு தொடர்ந்து மறுத்து வந்தன.

யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் அதிகாரிகள் தெரிவித்துவந்த கருத்துக்கள், விடுதலைப் புலிகளின் குற்றச்சாட்டின் உண்மைத் தன்மையை சர்வதேச சமூகத்துக்கு உணர வைத்துள்ளதையடுத்து அரசு கண்விழித்துக் கொண்டது.

வாயினால் வெளிவரும் கருத்துக்கள் சர்வதேச மட்டத்தில் விமர்சனத்துக்கு உள்ளாகியிருப்பதை அடுத்து, புதிய யுத்தியை அரசு கடைப்பிடிக்க ஆரம்பித்துள்ளது.

விடுதலைப் புலிகளுக்கு எதிரான மறைமுகப் போருக்குப் பயன்படுத்திய துணைப்படைகளுக்கு இடையில் உருவாகியுள்ள உட்கட்சிப் பூசல்கள் உச்சக்கட்டத்தை அடைந்துள்ளதையடுத்து, துணைப்படைகளுக்கு அரசு உதவவில்லை என்று பகிரங்கமாக அறிவிக்கும் நிலைக்கு அது தள்ளப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகளுக்கு எதிரான நாடுகளை, சக்திகளை ஒன்றிணைத்து அரசு மேற்கொண்டு வந்த மறைமுக யுத்தத்தில் இப்போது ஓட்டை விழுந்துள்ளது.

அண்மையில் பொலன்னறுவை மாவட்டத்தில் சொறிவில் பகுதியில் கருணாகுழு - ஈ.என்.டி.எல்.எவ். கூட்டு முகாமில் நடந்த தாக்குதல் சம்பவம் அரசையும் படையினரையும் அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது. தீவுச் சேனையில் கருணா குழுவினர் முகாமிட்டுள்ளனர். அவர்களுக்குப் படையினர் பாதுகாப்பு வழங்குகின்றனர் என்ற தகவல் பகிரங்கமானதையடுத்து, அவசர அவசரமாக அங்கிருந்த முகாம்கள் சொறிவில் பகுதிக்கு நகர்த்தப்பட்டன.

சிறிய - தற்காலிக - 'ரென்ட்'கள் கொண்டு காட்டுப்பகுதிக்குள் இந்த முகாம் அமைக்கப்பட்டது. அந்த முகாமில் 15இற்கும் மேற்பட்டவர்கள் தங்கியிருந்துள்ளனர். கருணா அணியைச் சேர்ந்தவர் மட்டும்தான் அங்கு தங்கியுள்ளனர் என அக் கிராமத்துவாசிகள் எண்ணியிருந்தனர். அக்கிராமத்தில் தமிழ், சிங்கள மக்கள் சரிசமனான எண்ணிக்கையில் கலந்து வாழ்கிறார்கள். அந்தப் பிரதேசத்தில் புதிய ஆள்களின் நடமாட்டத்தைக் கண்ட மக்கள், அவர்களின் போக்கை அவதானித்து ஒதுங்கி இருக்க எண்ணினர்.

கடந்த 15 ஆம் திகதி காலையில் அந்தப் பிரதேசத்தில் பொலீஸார் குவிக்கப்பட்ட போது, மக்களுக்கு அதிர்ச்சி ஏற்பட்டது.

அந்தப் பிரதேசத்தில் காணப்பட்ட புதிய முகங்கள் கருணா அணிக்குரியவை மட்டுமல்ல. ஈ.என்.டி.எல்.எவ். குழுவைச் சேர்ந்தவர்களும் அங்கு உள்ளனர் என்ற விவரம் அந்த மக்களுக்குத் தெரியவந்தது.

அந்த முகாமில் ஐந்து துப்பாக்கிகள் மட்டுமே பாதுகாப்புக்காக வைக்கப்பட்டிருந்தன. அன்று சகலரும் நித்திரைக்குச் சென்று ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தனர்.

அச்சமயம் அந்த முகாமில் இருந்த ஒருவர் 'சிகரட்' வாங்கப் போவதாகக் கூறி வெளியே சென்றுள்ளார். அவர் இன்னமும் முகாம் திரும்பவில்லை. அவர் பற்றித் தகவலும் இல்லை என்கின்றனர் பொலீஸார்.

முக்கிய பிரமுகர்கள் ஆழ்ந்த நித்திரையில் இருந்த சமயம் காவலுக்கு நின்றவர் உள்ளே சென்று அவர்களைப் படுக்கையில் வைத்துச் சுட்டுவிட்டுத் தப்பிவிட்டார் என ஆரம்ப விசாரணையில் தெரிய வருவதாகப் பொலீஸார் தெரிவித்துள்ளனர்.

வெளியில் இருந்து வந்தோர் தாக்குதல் மேற்கொண்டனர் என்று கூறப்படும் தகவலுக்கான எந்தத் தடயமும் இல்லை என்று கிராம வாசிகள் தெரிவிக்கின்றனர்.

தாக்குதல் நடந்திருந்தால் வெடிச்சத்தங்கள் கேட்டிருக்கும். 'ரென்ட்'டில் சூட்டுக் காயங்கள் காணப்பட்டிருக்கும். அப்படி ஏதும் நடக்கவில்லை என்று கிராமவாசிகள் தெரிவிக்கின்றனர்.

கிராமவாசிகளின் கூற்றுப்படி உள்முரண்பாட்டின் வெளிப்பாடே சம்பவத்துக்குக் காரணம் என ஊகம் தெரிவிக்கப்படுகின்றது.

படையினர் தமது பாதுகாப்புடன் முகாம் அமைத்துத் தங்க வைத்த துணைப்படை உறுப்பினர்களுக்கு இடையில் முரண்பாடு உருவாகி அது தாக்குதல் நடக்கும் அளவுக்கு எல்லை மீறிச் சென்ற விடயம் படையினருக்கு எரிச்சலை ஊட்டியுள்ளது. துணைப்படையினருக்கு இடையில் உருவாகும் முரண்பாடுகள், விடுதலைப் புலிகளுக்கு எதிரான தமது மறைமுக யுத்தத்துக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் எனப் படைத்தரப்பு நம்புவதாகக் கூறப்படுகின்றது.

படைத்தரப்பின் ஆசீர்வாதத்துடன் கருணா அணியினர் தங்கியிருந்த முகாமில், இந்திய ஆசீர்வாதத்துடன் செயற்படும் ஈ.என்.டி.எல்.எவ். அமைப்பின் உறுப்பினர்கள் எவ்வாறு வந்தார்கள் என்ற சர்ச்சையும் படையினருக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளதாகக் கூறப்படுகின்றது.

ஈ.என்.டி.எல்.எவ்.அமைப்பின் இலங்கைப் பிரதம அமைப்பாளரான விஜயன் திருகோணமலை மாவட்டம் தம்பலகாமத்தைச் சேர்ந்தவர். அவரது குடும்பம் தமிழ் நாட்டில் சேலத்தில் வசிப்பதாகக் கூறப்படுகின்றது.

இந்தச் சம்பவத்தில் கொல்லப்பட்ட ஒருவரின் மனைவி எனத் தன்னை அறிமுகம் செய்து கொண்டு சொறிவில் பகுதியைச் சேர்ந்த பெண் ஒருவர் தனது கணவனான விஜயன் என்பவரின் சடலம் என அடையாளம் காட்டி ஒரு சடலத்தை பொறுப்பேற்றுள்ளார். இந்த விடயமும் படையினரைக் குழப்பத்தில் ஆழ்த்தியுள்ளது என்று கூறப்படுகின்றது.

அரசினால் பயன்படுத்தப்படும் துணைப்படைகளுக்குள் உருவாகியுள்ள உள்முரண்பாடுகள் விடுதலைப் புலிகளுக்கு எதிரான மறைமுக யுத்தத்தில் பெரிய ஓட்டையை ஏற்படுத்தி விட்டது என்பது இப்போது யதார்த்தமான விடயம் எனச் சுட்டிக் காட்டுகின்றனர் அரசியல் ஆய்வாளர்கள்.

-குகா

## அன்று - 50 வருடங்கள் பின்னோக்கி சிந்தித்திருந்தால்..........

## யாரோடு நோவோம்...?

யாழ்ப்பாணம் – கண்டி நெடுஞ்சாலை உட்பட யாழ்ப்பணத்தின் ஆறு முதன்மைச் சாலைகள் இருவழிச்சாலைகளாக அகலப்படுத்தப்படவுள்ளன என்ற செய்தி இப்போது வாதப்பிரதிவாதங்களுடன் சூடு பிடித்துள்ளது.

இலண்டன் மாநகரில் சில வருடங்கள் வசித்து விட்டு நாடு திரும்பிய ஒருவர் சொன்னார். 'லண்டனில் அனேகமானோரிடம் கார் உள்ளது. மிக வேகமாகவே அவை பயணிக்கும். ஆனால் மஞ்சள் கோட்டின் வழியே ஒரு பாதசாரி எந்த வித அச்சமும் இல்லாமல் செல்லலாம். இங்கே வந்த பார்த்தால் அதேயளவுக்கு மோட்டார் சைக்கிள்கள் பெருகி விட்டன. ஆனால் பாதசாரியோ, வேறு வாகனங்களில் செல்வோரோ மிகுந்த அச்சத்தோடேயே செல்ல வேண்டியுள்ளது'

இவ்வாறான அச்சம் லண்டனிலிருந்து வந்தவருக்கு மட்டுமல்ல, வீதியில் பயணிக்கும் ஒவ்வொருவருக்குமே உள்ளது. வீதி விதிகளை அறிந்து – தெரிந்து கொள்ளாமை அல்லது பின்பற்றாமை, கையூட்டுக்காகக் கடமையாற்றும் போக்குவரத்துப் பொலீஸாரின் அசமந்தம், சரிவரச் செப்பனிடப்படாமல் குண்டும் குழியுமான வீதிகள் எனப் பலவற்றை வீதி விபத்துக்களுக்கான காரணங்களாக அடுக்கினாலும் வீதியில் பெருகியுள்ள வானங்களின் அளவுக்கு வீதிகள் பெருக்கவில்லை என்பது ஒப்புக்கொள்ளப்படவேண்டிய முதன்மைக் காரணமாகும்.

யுத்தம் நமது வீடுகளை, தெருக்களை, சொத்துக்களை மனிதர்களை, அவர்களது மனங்களை எல்லாம் சிதைத்துச் சீரழித்து விட்டது என்று கூறினாலும், மறு புறத்தே இவ்வளவு விரைவான நிமிர்வுக்கும் அதுவே மறைமுக காரணியுமாகிறது. குறிப்பாக ஐரோப்பிய நாடுகளிலிருக்கும் நம்மவர்கள் தரும் ஆதரவே வாகனப் பெருக்கத்துக்கும் காரணமாகும். அபிவிருத்தியை வெளிப்படுத்தும் ஒரு பொருளாதாரக் குறிகாட்டிதான் தனி நபரிடமுள்ள வாகனமும்.

நவீன தொழிநுட்ப உலகில், சவாலும் வேகமும் மிக்க சூழலில் வாகனப் பெருக்கத்தைத் தவறாகப் பார்க்க முடியாது. ஆனால் நமது வீதிகள் வாகனங்களுக்கேற்ப விசாலமாக இல்லை. எனவே, விசாலிக்கப்பட வேண்டியது பற்றிச் சிந்திக்கப்படுகிறது. கட்டாயம் செய்து முடிக்கப்பட வேண்டிய அவசியமான பணி இது என்றும் சொல்லலாம்.

இவ்வாறு வீதிகளை அகலிக்கையில் எழும் பிரச்சினைகள் பற்றியே இப்போது பேசப்படுகிறது. கடைகள், வீடுகள் எனப் பல கட்டிடங்களை இடிக்க வேண்டியுள்ளமை ஒரு புறம். பெறுமதி மிக்க நிலங்களை இழக்க வேண்டியது மறுபுறம். இதனால் எழக்கூடிய உப பிரச்சினைகள் இன்னொரு புறம் என்று வீதிகளுக்கு அருகேயுள்ள மக்கள் வேதனைப்படுகிறார்கள். அவர்களது வேதனைகள் நியாயமானவைதான்.

புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின்னரான போர் ஓய்வுச் சூழலில் புலம் பெயர்ந்து வாழும் நம்மவர்கள் பலரும் மிகக் கூடிய பெறுமதியில் வீதியோரக் காணிகளை வாங்கி, நவீனமான கட்டட நிர்மாணங்களைச் செய்துள்ளனர். அதைவிட, உள்ளூர் தனவந்தர்களும் கூட இவ்வாறு காணிகளை வாங்கி, கட்டுமானங்களைச் செய்துள்ளனர். காணிகளுக்கான பெறுமானம் என்பது இக்காலத்தில் செயற்கையான நீண்ட அதிகரிப்பு எனில் அது மிகையல்ல. இப்போது கட்டுமானங்களை இடித்தழிப்பதோ, காணிகளைக் கையகப்படுத்தவதோ தொடர்பில் வழங்கப்படும் இழப்பீடானது மிகக் குறைவாகவே மதிப்பீடு செய்யப்படும்.

ஆக, இதனால் இலட்சக் கணக்கில் இழக்கப்போவது வீதியை அடுத்த காணிகளை வைத்திருந்த 'குற்றத்தை' இழைத்தவர்களே! அவர்கள் செய்த ஒரே குற்றம் (?) வீதியை அண்டி வாழ முனைந்தது தான்!

இங்கேதான் பிரச்சினை உள்ளது. நாளை பற்றிய சிந்தனை விரிவு நமது திட்டமிடலாளர்களிடமில்லை. இன்னும் 50–100 ஆண்டுகளில் நமது தெருக்கள் எப்படி இருக்கும்? அதற்கு எவ்வளவு நிலம் தேவை? என்ற அடிப்படையான வினாக்களை சுதந்திரம் பெற்ற காலத்தில் சிந்தித்திருந்தால் இன்று இத்தகைய நிலைமை ஏற்பட்டிராது. இப்போதய சிந்தனையாவது இன்னும் 50 ஆண்டுகளைப் பின்நோக்கிப் பார்த்துப் செய்வது நன்மை பயக்கும்.

நமது உள்ளூராட்சி அமைப்புக்களின் செயற்படு தன்மை குறித்த சந்தேகங்களையும் கூட இந்த வீதி அகலிப்புப் பிரச்சினை எழுப்புகிறது. வீதிக்கு நெருக்கமாகக் கட்டிடங்கள் அமைப்பது தொடர்பில் உள்ளூராட்சி அமைப்புக்கள் நடவடிக்கை எடுக்கத் தவறியமையும் இப்போதைய நெருக்கடிகளுக்கு ஒரு காரணமாகும்.

எனவே, பிரச்சினைகளை இனங்கண்டு, எதிர்காலத்தின் தேவைப்பாடுகள், எதிர்கொள்ளக் கூடிய சவால்களைக் கண்டறிந்து ஒருங்கிணைந்த கூட்டுத் திட்டமொன்றின் மூலம் வீதி அகலிப்பை மேற்கொள்வதும், மக்கள் பாதிக்கப்படா வண்ணம் உரிய நஷ்ட ஈட்டை வழங்குவதும் முக்கியமாகும்.

இதே வேளை–

சந்திகளில் அமைக்கப்பட்ட 'சுற்றுவளைவுகள்' இப்போது பல இடங்களிலும் இல்லாமலுள்ளது. சந்திகளில் நேரும் விபத்துக்களுக்கு இதுவே பிரதானமான காரணம். சிறிய அளவிலேனும் சுற்று வளைவுகளை (Round About) அமைக்க வேண்டியதுஉடனடித் தேவையாகும்.

ஏகலைவன்

# போட்டிக்கதை – புதிய கதை – என்று கதைகள் பற்பல விதம்......

"கந்தசாமி ஒரு நல்ல பையன். அவன் விடியும்முன் எழுந்து...."

இது நாம் தொடக்கப் பள்ளியில் 'பாலபோதினி' யில் முதற் பாடமாகப் படித்த பாடத்தின் முதல்வரிகள். இன்றும் கூட நினைவை விட்டகலாது இருப்பது அந்த வரிகள் மட்டுமல்ல, அந்த ஒழுங்கு தவறாத மாணவனான கந்தசாமியின் தோற்றமும்தான். நாலுமுழ வேட்டி, அரைக்கை மேல் சட்டை கையிலே புத்தகக் கட்டு... அவைகளும் தான்!

'ஐந்திலே வளையாதது ஐம்பதிலே வளையாது' என்பார்கள். ஐந்திலே வளைப்பதில் அக்காலத்தில் பாடநூல் வெளியிடுவோர் எவ்வாறு கருத்தூன்றிச் செயற்பட்டிருந்தனர் என்பதற்கு அப்பாடமும் ஓர் எடுத்துக்காட்டு.

பின்னாளில் உயர் வகுப்பிலே 'தமிழ் உரைநடை விருந்து' நூலிலே படித்த ஒரு கதை கூட அப்படித்தான் மனதிலே நிற்கிறது.

ஒரு திருட்டுக் கூட்டம். அது அந்தக் கிராமத்திலே முறைவைத்துத் திருட்டுக்களை நடத்திக் கொண்டிருக்கிறது. அன்றைக்கு அவளின் முறை. அந்தக் கிழவி விளக்கேற்றி வைத்துவிட்டு அவர்களின் வரவுக்காகக் காத்திருக்கிறாள். வீட்டிலே 'கமகம' வெனச் சமையல் வேலைகள் வேறு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

திருட்டுக் கூட்டமும் சொல்லி வைத்தாற் போல வீட்டுக்குள் புகுந்துவிட்டார்கள். பணம் எங்கே? நகைகள் எங்கே? பெட்டிச் சாவி எங்கே? என்று அவர்கள் கேட்பதற்கு முன்னர் கிழவி அவர்களை வரவேற்கிறாள்.

'பாவம்... நீங்கள் களைத்துப்போய் வந்திருப்பீர்கள். முதலில் நன்றாகச் சாப்பிடுங்கள்' என்றவாறு அவள் எல்லாருக்கும் இலை போடுகிறாள்; அறுசுவை உணவுகள் பரிமாறப்படுகின்றன. நன்றாகச் சாப்பிட்டு முடிந்ததும் கிழவி அவர்களைப் பார்த்து 'இனி நீங்கள் வந்த காரியங்களைப் பார்க்கலாம்' என்கிறாள். திருட்டுக் கூட்டத்தலைவன் தயங்கி நிற்கிறான். 'உண்ட வீட்டுக்கு இரண்டகம் செய்வதா?' என்ற சிந்தனையாகவிருக்கும். அதைப் பயன்படுத்திக் கிழவி 'திருட்டுக் குற்றம்' பற்றிப் போதனை செய்கிறாள். அவர்களும் 'இனித் திருடுவதில்லை' என்ற முடிவுடன் திருந்தியவர்களாக அவ்வீட்டை விட்டு வெளியேறுகிறார்கள்.

எப்படி ஆங்கில பாடத்திலே அன்று நாம் படித்த புதையல் தீவும் (Treasure island) கலிவரின் பயணமும் (Gulliver's Travel ) மனதை விட்டகலாதுள்ளனவோ அப்படித்தான் இக்கதையும் அமைந்துவிட்டது.

இடைக்காலத்திலே பாடசாலைகளிலே நீதிக்கதைகளாகச் சொல்லப்பட்ட – போதிக்கப்பட்ட கதைகளும் அந்த வகையினவே. வகுப்பிலே பின்வாங்கிலே இருந்து 'பராக்கு' ப் பார்த்த மாணவர்களினால் கூட அவைகளை மறக்கமுடியாது. அந்தப் 'பிரபலம்' காரணமாகத்தான் பிற்காலத்திலே அக்கதைகளை வைத்துப் பல புதுக் கதைகளும் கிளைக் கதைகளும் தோன்றலாகியின.




பாட்டி ஒருத்தி வடை சுட்டுக்கொண்டிருக்கிறாள். காகம் ஒன்று வந்து வடை ஒன்றைக் கவ்விக் கொண்டு சென்று மரக்கிளையில் அமர்ந்துவிட்டது. அதைக் கண்ட நரி ஒன்று காகத்துக்கு 'ஐஸ்' வைத்து அதைப் பாடச் சொல்கிறது. காகமும் புகழுக்கு மயங்கி வாயைத் திறந்து பாட வடை கீழே விழுகிறது. நரி அதைக் கவ்விக்கொண்டு ஓட்டம் பிடித்துவிடுகிறது. இதை வைத்து இன்னொரு கதை... நரி தந்திரமான மிருகம் தான். ஆனால், காகமும் புத்தியுள்ள பறவையல்லவா? அதனால் நரி பாடச் சொன்னதும் காகம் வடையைக் காலுக்குள் மாற்றி வைத்துக் கொண்டு பாடியதாம்.

இந்தப் பாட்டி – வடைக் கதையை முதலாக வைத்தே இன்னொரு கதை.... ஒரு போட்டி. யார் மிக நீண்ட கதை சொல்லுகிறாரோ அவருக்குப் பரிசு! பலர் கதைகள் கூறுகிறார்கள்... எல்லாருமே ஓரளவில் நிறுத்திக்கொள்கிறார்கள். கடைசியில் ஒருவர் வருகிறார்; கதை சொல்லுகிறார். " ஒரு கிழவி, அவள் ஏராளமாக உழுந்தரைத்து வைத்துக்கொண்டு வடைகள் சுட்டுக்கொண்டிருக்கிறாள்... ஒரு காகம் வருகிறது, ஓர் வடையை எடுத்துக்கொண்டு பறந்துவிடுகிறது... மீண்டும் ஒரு காகம் வருகிறது, இன்னொரு வடையை எடுத்துக்கொண்டு பறந்து விடுகிறது... மீண்டும் ஒரு காகம்..." இப்படியே கதை தொடர்கிறது 'போதும் நிறுத்து... உனக்குத்தான் பரிசு' என்கிறார் நடுவர்.

இப்படியே நாம் அறிந்த கிரிசாம்பாள் கதை, முயலும் ஆமையும் – ஓட்டப் பந்தயக் கதை – இவைகளுக்கெல்லாம் கூட பல புதுக்கதைகளும் கிளைக் கதைகளும் சொல்லப்படுகின்றன. அவ்வளவுக்கு அக்கதைகள் எம்மைச் சிந்திக்க வைத்தன.

ஓர் ஏழை விறகு வெட்டி... விறகு வெட்டிச் சீவியம் நடத்திக்கொண்டிருந்தான்... ஒரு நாள் ஆற்றங்கரை மரம் ஒன்றை வெட்டிக்கொண்டிருக்கையிலே அவனது கோடரி தவறி ஆற்றிலே விழுந்து தண்ணீரில் அடித்துச் சென்றுவிடுகிறது. என்ன செய்வான் அந்த ஏழை. கடவுளை வேண்டி அழுதுகொண்டிருந்தான்.

கடவுள் அவன் முன் தோன்றி "என்ன வேண்டும், சொல்" என்கிறார். இவன் தனது கவலையைச் சொன்னதும் கடவுளானவர் ஆற்றிலே இறங்கி ஒரு தங்கக் கோடரியுடன் தோன்றி "இதுதானே உனது கோடரி?" என்கிறார். இவன் "இல்லை" என்கிறான் கடவுள் மீண்டும் ஆற்றிலே இறங்கி ஒரு வெள்ளிக் கோடரியுடன் தோன்றினார். இவன் அதற்கும் "இல்லை" என்கிறான். கடவுள் கடைசியாக இவனது கோடரியைக் கண்டெடுத்துக் கொடுத்தபோது, "அதுதான் எனது" என்று பெற்றுக்கொண்டான். அவன் பேராசைப் படாமல் உண்மையைச் சொன்னதற்காக கடவுளானவர் மூன்று கோடரிகளையும் அவனுக்கே கொடுத்துவிட்டு மறைந்தருளினார்.

அதுதான் தெரியுமே என்கிறீர்களா? சரி, இதுவும் தெரியுமா என்று பாருங்கள்...

அதே விறகு வெட்டி பின்னாளிலே ஒரு கூட்டத்திலே தனது மனைவியைத் தவறவிட்டு விடுகிறான். கடவுளை வேண்ட, அவரும் அவன் முன்தோன்றி விசாரிக்கிறார்.

எழில் சொட்டும் இளம் அழகி ஒருத்தியைக் அவன்முன் கொண்டுவந்து நிறுத்திய கடவுள், "இவள்தானே" என்கிறார், இவனும் வாயிலே தேனூற பேராசைப்பட்டவன்போல "ஆம்" என்கிறான்.

கடவுளுக்கு "அவன்தான் இவனா" என்ற ஆச்சரியம் "இன்றைக்கு மட்டும் ஏன் பொய் சொன்னாய்?" என்கிறார்.

இவன் பதில் சொல்லுகிறான். "நான் 'இவள் அல்ல' என்றதும் நீங்கள் இன்னொரு நடுத்தர அழகியைக் காட்டுவீர்கள். நான் அதற்கும் 'இல்லை' என்றதும் நீங்கள் என்னவளைத் தருவதுடன், உண்மை பேசியதற்காக மூன்றையுமே என்னிடம் தள்ளிவிட்டுச் செல்வீர்கள். ஒன்றை வைத்தே காலம் தள்ளமுடியாத நான் எப்படி மூன்றையும் வைத்து... அதனால்தான்.." ! என்றானாம் அவன்

பார்த்தீர்களா, கதைகள் பலவிதம்!

- சவீ அங்கிளீ

---

## மழைக்கால இரவுகள்

மின்னல்
விழிவழி புகுந்து
இதயத்தைக் கிழித்தது

இடி
காதுக்குள் விழுந்து
புரையோடியது

காற்று
மழையின் வருகையை
கட்டியம் கூறவந்து
என் வீட்டுத் தட்டியை
தூக்கியெறிந்தது.

நிலா
மறைந்து போனது
நட்சத்திரம்
கறுத்துப்போனது
கணத்தில் என்
முகத்தைப்போல

பல கண்களையுடைய
என் வீட்டுக் கூரை
மழையைக் கடன்வாங்கி
என்னீது அழுது தீர்த்தது

ஒழுகிய கூரையை
நனைக்க வந்த மழை
கூடவே
எனது மானத்தையும்
நனைத்து நின்றது
நான்,
வறுமையானதால்

மாளிகைக் கிராமத்தில்
குடிசை உறவுகளோடு
பின்னிப் பிணைந்த – எனது
வாழ்க்கை – இயற்கையாலும்
சீரழிவுபட்டுக் கிடக்கிறது

கடவுளின் கண்களைத்
திறந்து விட்டு
கண்ணீர் யாகம்
நடத்துகிறேன்...
கண்ணிருந்தால் கடவுள்
ஆசீர்வதிப்பாராக...!

சுதேசிகன்

---

## சார்ள்ஸ்– கமிலா முத்திரை வெளியீடு



பிரித்தானிய முடிக்குரிய இளவரசர் சார்ள்ஸ்ஸின் இரண்டாவது விவாகம் கடந்த ஏப்ரல் 8ஆம் திகதி இடம்பெற்றது. சார்ள்ஸ் – கமிலா விவாகம் சர்ச்சைக்குரிய விடயமாகி உள்ளது. இத் திருமணம் தொடர்பாகப் பிரித்தானிய அரச தபாற்சேவை, விசேட நினைவு முத்திரைகள் இரண்டினை வெளியிட்டுள்ளது. இவை ஏப்ரல் 8ஆம் திகதியன்று வெளியிடப்பட்டன.

---

## உலகின் நவீன மோட்டார் வண்டிகள்



அதி நவீன வடிவமைப்பிலும் தொழில் நுட்பத்திலும் அமையும் புதிய ரக மோட்டார் வண்டிகள் ஒவ்வொரு மாதமும் விற்பனைச் சந்தையில் அறிமுகமாகின்றன. அண்மையில் அமெரிக்காவின் டெறொயிட் நகரத்தில் இடம்பெற்ற வட அமெரிக்க சர்வதேச மோட்டார் வண்டிக் கண்காட்சியில் காட்சிக்கு நிறுத்தி வைக்கப்பட்ட அதி நவீன மோட்டார் வண்டிகளையே படத்தில் காண்கிறீர்கள்.

---

## முயற்சி செய்!

முயற்சிகள்
தோல்விகளைத் தரும்
தவிர்க்க முடியாது..
தொடர்ந்து முயற்சி செய்
நூறுதடவை படையெடுத்துப்
தோல்வி கண்ட அராபிய
மன்னனுக்கு
சிலந்தி
வலை கட்டி புதுவழி காட்ட
வில்லையா?
அது போலத்தான்
யதார்த்தம் வெறும் முகமூடி
எந்நேரமும் கிழித்தெறியலாம்
தோல்விகளை யதார்த்தம் என்று
சமாதானப் படுத்தாதே....
வாழ்க்கை உன்னது...
வாழுவதும் உன்னது.....
தோல்வி மட்டும் வேறா?
புரிந்து கொள்...
தொடர்ந்து முயற்சி செய்!
உனக்கும் வெற்றி கிடைக்கும்!

– எஸ்.தயா

---

## வெற்றி விழா





வியட்நாம் முன்னர் அமெரிக்க ஆதிபத்தியத்துக்கு உள்ளாகியிருந்த தொரு நாடு. அமெரிக்க இராணுவத்தின் பிடியில் சிக்கியிருந்த மலைப்பிரதேசம் வியட்நாமிய இராணுவத்தால் வெற்றி கொள்ளப்பட்டதன் 30ஆவது வருட நினைவு நாள் வியட்நாமின் பௌத்மா நகரில் கொண்டாடப்பட்டது. யானைகள் சூழ்ந்து வர நடத்தப்பெற்ற வெற்றி ஊர்வலக் காட்சியையே படத்தில் காண்கிறீர்கள்.

# சிறுவர் பொழில்



## ஆசைக்கு அளவில்லை

வெகு காலத்திற்கு முன் ஜப்பான் நாட்டில் புகழ் பெற்ற ஒரு சிற்பி இருந்தான். அவனுக்கு தேவதையின் அருள் உண்டு. ஒரு நாள் அந்த சிற்பியை ஒரு பணக்காரன் தன் வீட்டில் ஒரு சிலை செய்ய அழைத்தான். சிற்பி பணக்காரனின் வீட்டிலுள்ள ஆடம்பரப் பொருள்களைக் கண்டு மலைத்துப்போனான்.

அவன் தன் தேவதையை நினைத்து தானும் அப்பணக்காரனைப் போல் மாளிகை வாசியாகி விட வேண்டும் என விரும்பினான். தேவதையும் அவன் விருப்பத்தை நிறைவேற்றியது. பணக்காரனான சிற்பி மகிழ்ந்து போனான். தொழில் செய்வதை விட்டுவிட்டான்.

கொஞ்ச நாள்களுக்குப் பின் ஓர் அரச அதிகாரி அவனது ஊருக்கு வந்தார். ஊரார் எல்லாம் அவருக்கு மரியாதை செலுத்தினார்கள். சிற்பி அவரை வணங்காததால் அவர்தன் ஆள்களை விட்டு சிற்பியைச் செம்மையாக உதைத்து அடித்தார்.

சிற்பி அப்போது தேவதையை நினைத்து, நான் பணக்காரனாக இருப்பதை விட அரச உயர் அதிகாரியாக இருக்க விரும்புகிறேன் என்றான். தேவதையும் அவனுக்கு அப்படிப்பட்ட பதவி கிடைக்கச் செய்தது.

அதிகாரியாகி விட்ட சிற்பி தன் ஆள்களுடன் ஒரு மலைப்பகுதிக்குச் சென்றான். அங்கு சில அழகிய பெண்களைக் கண்டு அவர்களைத் துரத்தி இம்சிக்கலானான். அப்பெண்கள் போட்ட கூச்சலில் மலைச்சாதி மக்கள் ஓடிவந்து சிற்பியையும், அவனது ஆள்களையும் அடித்து வீழ்த்திப் பெண்களைக் காப்பாற்றி அழைத்துப் போயினர்.

இப்போது சிற்பி,நான் அதிகாரியாக இருப்பதை விட ஒரு மலைச்சாதித் தலைவனாக இருப்பதே மேல் என நினைத்தான். உடனே தேவதை அவனை ஒரு மலைச்சாதித் தலைவனாக மாற்றிவிட்டது.

ஒருநாள் உச்சி வெயிலில் அவன் வயலில் வேலை செய்த போது சூரியனை மேகம் மறைத்து வெயிலைத் தணித்தது. அதைக் கண்ட சிற்பி தான் மேகமாக இருப்பது மேல் என நினைக்க தேவதையும் அவனை ஒரு மேகமாக மாற்றியது.

மேகத்தைக் காற்று பலமாக இழுத்துச் செல்லவே மேகமாக இருந்த சிற்பி தான் காற்றாக மாறவேண்டும் என நினைத்தான். மறுநிமிடமே தேவதை அவனைக் காற்றாக மாற்றியது. காற்றாகிவிட்ட சிற்பி வேகமாகச் செல்கையில் அவனை ஒரு பெரிய பாறை தடுத்து நிறுத்தியது.

அது கண்டு சிற்பி தான் காற்றாக இருப்பதைவிட ஒரு பாறையாக இருப்பதே மேல் என நினைத்தான். மறுநிமிடமே தேவதை அவனை ஒரு பாறையாக மாற்றிவிட்டது.

ஒருநாள் சில சிற்பிகள் ஒரு பாறையைக் கண்டு, இந்தப் பாறையை வெட்டி எடுத்துப்போய் சிலைகள் செய்யலாம் என்றனர். அந்தப் பாறைதான் தேவதையால் மாற்றப்பட்ட சிற்பி. அவர்கள் கூறியதைக் கேட்டு பாறையாகி நின்ற சிற்பி, தேவதையே! என்னைக் காப்பாற்று என்று வேண்டினான்.

தேவதையும் அவன் முன் தோன்றி நீ சிற்பியாக இருப்பதே மேல்! எனக் கூறி அவனை சிற்பியாக்கி விட்டுச் சென்றது. சிற்பியும் கண்டபடி ஆசைப்படுவதை விட்டுத் தன் பழைய தொழிலையே செய்து புகழும் பணமும் நிறையப் பெற்றான்.



## நான் சைவம்

வரம்போரமாக நின்று கொண்டிருந்த கொக்கு சிறு மீன்களை எல்லாம் விட்டு விட்டுப் பெரிய மீன் ஏதாவது வராதா? கொத்திச் செல்லலாமே என்று ஆவலோடு எதிர்பார்த்தபடி நின்றது.

சிறிது நேரத்தில் கொக்கின் அருகே காகம் ஒன்று பறந்து வந்தது. "கொக்கே! நலமாக இருக்கிறாயா? எனக்கு உன்னைப் போன்று மீன்களைச் சாப்பிட வேண்டும் என்ற எண்ணம் இல்லை. நான் எப்போதும் தானியங்களையே சாப்பிட்டு வாழ்பவன்" என்றது காகம்.

"என்ன செய்வது . நான் மீன்களைச் சாப்பிட்டே பழக்கமாகி விட்டேன். என்நிலையை மாற்றிக்கொள்ள முடியாது" என்றது கொக்கு.

அந்த நேரத்தில் ஒரு பெரிய மீன் வாய்க்காலில் வரவே அந்த மீனைக் கொத்திக் கரையில் போட்டது கொக்கு.

"கொக்கே, நீ இவ்வளவு நேரமாக நின்று இந்தச் சிறிய மீனையா பிடித்தாய்; அருகில் ஒரு ஏரிக்கரை இருப்பது உனக்கு இதுவரையிலும் தெரியாது போலும் ; அங்கே ஏராளமான கொழுத்த மீன்கள் இருக்கின்றன" என்றது காகம்.

"ஆஹா இதுவரையிலும் எனக்குத் தெரியாமல் போய்விட்டதே! அந்த ஏரிக்கரை எந்தத் திசையில் இருக்கிறது" என்று கேட்டது கொக்கு.

"இதோ இந்த கிழக்குத் திசையில் தான் இருக்கிறது" என்றது காகம்.

கொக்கு உடனே தான் பிடித்த மீனைக் கரையில் போட்டுவிட்டு கிழக்குத் திசை நோக்கிப் பறக்கத் தொடங்கியது.

முட்டாள் கொக்கை ஏமாற்றி மீனை எடுத்துக் கொண்டு மகிழ்ச்சியாகப் பறந்தது காகம்.

காகத்தைப் போல் நிறைய மனிதர்கள் இருக்கின்றனர். அவர்கள் தங்களை நல்லவர்கள் என்று சொல்லிக்கொண்டு உங்களைக் குழப்பி ஏமாற்றப் பார்ப்பார்கள். நீங்கள் அவர்கள் பேச்சைக் கேட்டு மயங்கி ஏமாறக் கூடாது. நன்கு யோசித்தே முடிவெடுக்க வேண்டும்.

## எப்படிப் பிடிப்பது?



காற்று வீசி அடிக்குது!
கை,கால் குளிரில் நடுங்குது!
கதவைத் திறந்து மூடுது!
காதில் இரைந்து பாடுது!


மரத்தை வில்லாய் வளைக்குது!
மழையில் நனையக் குளிக்குது!
கனத்த பொருளைப் பந்துபோல்

காற்று வீசி எறியுது!
கூரை எல்லாம் பிய்க்குது!
குரங்குச் சேட்டை செய்யுது!
குரங்கைப் போலப் புயலை நாம்
கூண்டுக் குள்ளே அடைப்போமா?

உருவம் காற்றுக் கில்லையே!
எப்படி அம்மா பிடிப்பது?

-கதிரேசன்

## ஒரு நாளில் ஒரு மரம் எவ்வளவு தண்ணீரை உறிஞ்சும்?



மரத்தின் வேர்கள் மண்ணில் இருந்து தண்ணீரை உறிஞ்சும். தண்ணீர் வேர்களின் வழியாக மரத்தின் அடிப்பகுதி மற்றும் கிளைகளுக்குச் செல்லும். பிறகு தண்ணீரானது இலைகளின் வழியாகக் காற்றில் கலந்துவிடும்.

ஒரு நாளில் ஒரு மரம் எவ்வளவு தண்ணீரை உறிஞ்சும் தெரியுமா?

ஆசியாவில் ஸெல்கோவா எனப்படும் மரம் வளர்கிறது. பூமியின் மேல் இதன், அடிமரத்தின் சுற்றளவு 1.5மீற்றர். இந்த மரம் ஒரு நாளில் 1.9 கலன் (8.81 லீற்றர்) தண்ணீரை உ றிஞ்சும். அதாவது 44 ரம்ளர் தண்ணீர்.

தண்ணீருடன் ஒரு மரத்திற்குரிய சூரிய ஒளி, காற்று மற்றும் சத்துகள் தேவை. எனவே, ஒரு நாளில் 35 குவார்ட்ஸ் (40எல்) காபனீரொட்சைட்டை உள் இழுத்து அதே அளவு ஒட்சிசனை வெளிவிடும்.

ஒரு மரம் சூரிய வெளிச்சத்தில் இருந்து 1.6 அவுன்ஸ் (45 கிராம்) காபோஹைதரேட்டைப் பெறுகிறது. காபோஹைதரேட், மரங்கள் வளர உதவும் சக்தியைக் கொடுக்கிறது.

**தம்பி, தங்கைகளே!**
**'சிறுவர் பொழில்'**
பகுதிக்கு உங்கள் ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றன. எண்ணங்களை எழுதி அனுப்புங்கள். அவை தரமாக இருப்பின் பிரசுரத்திற்கு ஏற்றுக்கொள்ளப்படும்.

## நாம் பறவைகளைப்போல பறக்க முடியாது - ஏன்?



பறவைகளைப் போல நாம் ஏன் பறக்க முடிவதில்லை என்று கேட்டால் நமக்குச் சிறகில்லை என்றே பதில் வரும். ஆனால், இது இக்கேள்விக்குச் சரியான விடையாகாது. நாம் சிறகை வைத்துக் கட்டிக்கொள்கிறோம் என்று வைத்துக்கொள்ளுங்கள், அப்போது மட்டும் பறக்க முடியுமா? முதலில் பறவைகள் எப்படிப் பறக்கின்றன என்பதைப் பார்ப்போம்.

பறவைகள் சிறகுகளால் பறக்கின்றன. எதிர்ப்பழுத்தம் தரக்கூடிய வகையில் அவற்றின் உடலமைப்பு வளைவாக அமைந்துள்ளது. எலும்புகளும் பளுவற்றவை. தவிர, உடலினுள் அமைந்த காற்றுப்பைகள் பளுவை இன்னும் குறைக்கின்றன. உடல் பளுவுடன் ஒப்பிடுகையில் பறவைகளின் தசைநார்கள் அழுத்தமானவை. இவற்றின் உதவியால் பறவை சிறகுகளை அடித்துப் பறக்கிறது.

பட்சி பறக்கும்போது சிறகுகள் அடித்துக்கொள்வதால் காற்று கீழுக்குத் தள்ளப்படுகிறது. அதே நேரத்தில் பறவை மேலுக்கு எம்புகிறது. சிறகுகளின் இயக்கத்தில் உண்டாகும் காற்றின் விசை பறவையை மேலே கொண்டுபோகிறது. பறவைகளுடன் ஒப்பிடும் போது நமது உடல் மிகவும் பளுவானது. அதனால், மனித உடலைப் பறக்கச் செய்ய பல இறக்கைகள் தேவைப்படுகின்றன. அத்துடன் நமது உடலில் காற்றை நிரப்ப, சவ்வுப் பையும் கிடையாது. செயற்கை சிறகுகளை வைத்துக் கட்டிக்கொண்டாலும் அவற்றை இயக்க, உறுதியான தசைநார்களும் நமது உடலில் இல்லை. ஆகவேதான் மனிதன் பறவைகளைப் போல பறக்க முடியாது.

இலேசான உடல்வாகு கொண்ட பறவைகள் வேகமாகப் பறப்பதையும், கனமான உடலமைப்புக் கொண்ட பறவைகள் உயரப் பறப்பதற்குத் திணறுவதையும் நாம் கண்கூடாகக் காண்கிறோம். உதாரணமாக, மயிலும், சேவலும் சிறிதளவு உயரம் வரைதான் பறக்க முடியும். இவற்றின் உடற்பளுவே இதற்குக் காரணம். தீ விழுங்கிப் பறவையும் (Ostrich) பென்குயின் (Penguin) என்ற பறவையும் இவற்றைவிட உடற்பளு கொண்டவை. இவை பறக்கவே முடியாது. ஓடும் அவ்வளவுதான். ஆகவே, நாம் சிறகை வைத்துக் கட்டிக் கொண்டாலும் பறவைகளைப்போல் பறக்க முடியாது.



# வாழ்வுக்கான போராட்டங்கள்....!

வாழ்க்கை என்பது ஒன்று என்றாலும் வாழ்வதற்கான போராட்டங்கள் பல விதமானவை. ஒவ்வொன்றும் ஒவ்வொரு கோலங்கள். அந்தக் கோலத்தைக் கண்டு ரசிக்கும் மனங்கள் அவை உருவாக்கபட்ட கஷ்ரங்களைப் பார்க்க மறக்கின்றன, மறுக்கின்றன. நாம் அனைவரும், வாழ்வில் செழிப்பாக உள்ளவர்கள், உயர்ந்தவர்கள் என்று ஒரு பக்கத்தையே பார்க்கின்றோம். ஆனால், வாழ்க்கையில் தொடர்ந்து போராடியும் முன்னேற முடியாமல் தவித்துக் கொண்டிருப்பவர்களையும் முன்னேறுவதற்காக அயராது உழைப்பவர்களையும் கண்டு கொள்வதில்லை.

நாம் அவர்கள்பால் அக்கறை கொண்டு செயற்படுவோமானால் நிச்சயம் அவர்கள் வாழ்விலும் மாற்றம் வரலாம். அந்தவகையில் இதோ! முன்னேறப் போராடி வாழும் நம் சகோதரிகளின் உள்ளக்குமுறல்கள் சில.....



திருமதி கு.தவமணி
( மரக்கறி வியாபாரி)

நாங்கள் இந்தச் சந்தையில் 4 வருஷமா உழைக்கின்றோம். ஆனா சுனாமி வந்த பின்னர் எங்களுக்கும் சரியான நட்டம். சுனாமி அடிச்சதால மீன்யாவாரம் மட்டும் மல்ல. மரக்கறி யாவாரமும் பாதிச்சுது. சுனாமி அடிச்ச பின்னர் மீன் சாப்பிட்டா வருத் தம் வரும் என்று சனம் எல்லாம் மீன் வாங்கப் பயந்திச்சுதுகள். அதால சந்தைக்கு மீன் வாங்கச் சனமே வாறேல்ல.

மீனுக்கு வாறவை தான் எங்களையும் கவர் பண்ணுவினம். அதால அவை பாதிக்கப்பட்டதால நாங்களும் பாதிக்கப்பட்டோம். இங்கை நாங்க மரக்கறிக் கடை என்று வைக் கேல. மீன்யாவாரத்தை நம்பித்தான் கடை போட்டோம். சுனாமி வந்ததால எங் களுக்கும் மட்டு மட்டான யாவாரம் தான் செய்ததைவிடக்கூடாதென்பதற்காகத்தான் இங்க வியாபாரம் செய் யிறம்.

இண்டைக்கு இவ்வளவு வித்து இவ்வளவு லாபம் கண்டதெண்டு சொல்லேலாது. எங் களுக்கு ஒரு 200 ரூபா வெண்டாலும் வெளிக்கும் எண்டு நம்பின காலம் போச்சு . சந்தை வரி, எங்கட வீட்டுச் செலவு எண்டு கொடுக்கிறதுக்குக் கூட லாபம் போதாது.

எங்களுக்கு உதவி செய்யிறதுக்குக் கூட யாரும் வாறேல்ல. நிறையப் பேர் வந்து கோழியைத் தாறம், குஞ்சைத் தாறம் என்டுதான் சொல்லுவினம். சந்தையில நாள் முழுதும் இருக்கிற நாங்கள் கோழிகளை எப்படி மேய்ச்சுக்கட்ட முடியும்? எங்கட வியா பாரத்துக்கேற்ற உதவிகளைச் செய்யலாம் தானே?

கல்யாணம் முடிச்ச பிள்ளைகள் எங்களுக்குச் சாப்பாட்டத் தருவினம். எங்கட கைச் செலவுக்கு நாங்கள் உழைச்சாத்தானே முடியும். உழைக்க வேணும், மிச்சம் பிடிக்க வேணும், பிள்ளைகளுக்குச் சீதனம் குடுக்க வேணும் என்று தானே இதில இருந்து உழைக்கிறம்.

உதவி இருந்தா நாங்க எங்கட வியாபாரத்த இன்னும் பெரிசாக்கி முன்னேறலாம். எங்க ளுக்கு முதலீடுதான்தேவை.யாராவது முதலிட்டால்நாங்கள் இன்னும் நிறைய உழைச்சு சீட்டு மாதிரிக்கட்டி முன்னேறலாம். எங்களுக்கு அந்த உதவியைச் செய்யிறதுக்குத் தானே யாரும் இல்லை.எங்கட நாட்டு நிலைமை சீர்குலைஞ்சு போச்சு. எங்கட பிள் ளைகள் எல்லாம் அடியத்துப் போச்சுதுகள். எங்களால சீவிக்கேலாத நிலையில நாங் கள் இன்றும் உழைச்சுக் கொண்டுதான் இருக்கிறம்...



திருமதி சுப்பிரமணியம் சரஸ்வதி (வயது 65)
(மீன் வெட்டுபவர்)

நான் முந்திப் புல்லுவெட்டும் வேலை செய்து வந்தனான். 1995ஆம் ஆண்டு எனது புருஷன் இறந்து போயிட்டார். அதோட இந்தப் பிரச்சினையும் வந்து எல்லாரும் இடம் பெயர்ந்துபோகேக்க நானும் இடம் பெயர்ந்து போய் வன்னியில இருந்தன். 97ஆம் ஆண்டு தான் திரும்பி யாழ்ப்பாணம் வந்தனாங்கள். யாழ்ப்பாணம் திரும்பி வந்ததும் மீன் வெட்டிக்கொடுக்கும் வேலையைச் செய்யத் தொடங்கினன். மீன் வெட்டுற வேலை பெண்பால்மீன்வியாபாரியிடம்முழுசாகவாங்கிற மீனைக்கனிடம் கொண்டுவந்துதரு வினம். அதை நான் துண்டு போட்டுக் கொடுப்பேன்.

இந்த மீன் வெட்டிக் குடுக்கிறதால ஓரளவு வருமானம் வருகுதுதான். ஆனா, இதைச் செய்யிறது சரியான கஷ்ரம். வயது போன காலத்தில பெரிய மீன்களைத் தூக்கிவெட்டுறது கஷ்ரம் . உதவியில்ல.அதால உழைக்கத்தான் வேணும் என்றபடியால இந்த வேலை யைச் செய்து என்ர வாழ்க்கையை ஓட்டுறன். எனக்கும் நல்லா வயசு போயிட் டுது. இனிமேலும் மீன் வெட்ட ஏலாது. நான் கொஞ்சம் மீன் எடுத்துப்போட்டு தனி யாக வியாபாரம் செய்யலாம் எண்டு விரும்புறன். ஆனால், அதற்கான முதல் இல்லா ததால கஷ்டமாக உள்ளது.

யாரிடமாவது கடன் வாங்கி வியாபாரத்தைத் தொடங்கலாம் தான். ஆனா அதில இலாபம் கிடைக்காட்டி வாங்கின கடனைத் திருப்பிக்கொடுக்கிறது என்னெண்டு? அதுதான் எனக்கும் யோசனையாய் இருக்கு. இப்ப மீன் வெட்டத் தாறவையும் குறைவுதான். அதனால வருமானமும் குறைஞ்சு போச்சு. சுனாமி வந்திச்சு. அதால கொஞ்ச நாளா ஒருவருமானமும் இல்லாம இருந்தனான். இப்ப கொஞ்சம் பறவாயில்ல. ஆனாலும் சாப்பாட்டுக்கே வாற வருமானம் பத்தேல்ல.நான் என்ர காலம் வரைக்கும் உழைக்கத்தானே வேணும். இல்லாட்டி எப்படி வாழுறது? உதவி யில்லாத என்னைப்போல எத்தனைபேர் இப்படிக் கஷ்ரப்படுகினம்...

சந்திப்பு :– கங்கா–தீபா

# யதார்த்தம்

முயற்சித்தேன்
தோற்றுவிட்டேன்
ஆனாலும் நான்
சோரவில்லை
மீண்டும் மீண்டும் முயற்சிக்கின்றேன்.

ஆயினும்
நான் தோற்றுவிட்டேன்
யதார்த்தத்தின்
கோரத்தை
ஏற்றுக் கொள்ளமுடியாமல்....

இப்படித்தான்......
இருக்கும் என்று
கற்பனையில்
கண்டவாழ்வு

புரையோடிப் போன
தடங்களுடன்

என்னை
மிரட்டும்போது
நான்
தோற்றுத்தான்
போகின்றேன்

ஒவ்வொரு மனங்களும்
போட்டுக்கொண்டுள்ள
அலங்கார
வேசத்தில்
ஏமாந்துபோன நான்.....

யதார்த்தம்
புரிபடும் போது
எதிர்கொள்ள
முடியாமல்
தோற்றுத் தான்
போகின்றேன்

– தீபா

# கொலுசுகள் பேசக்கூடும்

தொலைபேசியில்
நான் உனக்கு
முத்தம் தரும் போதெல்லாம்
பதிலுக்கு என்னசெய்வதென்று
தெரியாமல்
'தாங்க்ஸ்' என்று வழிவாயே
நினைவிருக்கிறதா?

நீ பல வருடங்களுக்குப் பிறகு
என் வீட்டுக்கு வந்திருந்த
அந்த நவம்பர் மாத
மழை நாள்களை
உனக்கு
நினைவிருக்கின்றதா?
உனக்குத் தலைபின்னிக்
கொண்டிருக்கும் அம்மா
பார்க்க முடியாது என்ற
தைரியத்தில் எதிரிலிருந்து என்னை
பார்த்துக் கண்சிமிட்டி
'எங்கே நீ பண்ணு பார்க்கலாம்'
என்று வம்புக்கிழுத்தாயே
நினைவிருக்கிறதா?

என்
முகவரியை
நானே எழுதி உன்னிடம் தந்துவிட்ட கடிதத்தாள்களை
நினைவிருக்கிறதா?

நீ
'மணியக்கா வீட்டுக்குப் போகணும்'
என்றதும் நான் கடைகடையாகத் தேடி
கேரியர் இல்லாமல் எடுத்துவந்த
வாடகைச் சைக்கிளை
நினைவிருக்கிறதா?
இந்த 'டிரஸ்'
போட்டுக்கறன்னைக்கெல்லாம்
உன்னைப் பார்த்து விடுகிறேன்
என்று அடிக்கடி போட்டுக்கொள்வாயே
அந்த
மாம்பழநிறப் பாவாடையை
நினைவிருக்கிறதா?

'சரியாகச் சொன்னால் முத்தம்' என்று
முதுகில்
விரலால் எழுதி
விளையாடியதில்
எத்தனை முறை தோற்றேன் என்று
நினைவிருக்கிறதா?

உன் – அக்கா கல்யாணத்தில்
'அடுத்த கல்யாணம் இவளுக்குத்தானே'
என்று யாரோ சொன்னபோது
ஏனோ என்னைக் கள்ளத்தனமாகப்
பார்த்தாயே ஒரு பார்வை
நினைவிருக்கிறதா?

முதன்முதலில்
நீ என்னுடன்
வண்டியில் வந்தபோது
என்மேல் பட்டுவிடாமல்
எவ்வளவு கவனமாக
அமர்ந்து வந்தாயென்று
நினைவிருக்கிறதா?

அதே வண்டியில்
'என்ன அவசரம்
சுற்று வழியில்
மெதுவாகப்போ' என்று
தோளில்
சாய்ந்து கொண்டாயே
நினைவிருக்கிறதா?

நாளிதழ் வந்ததும்
உனக்கு நானும்
எனக்கு நீயும்
வாரபலன்கள்
பார்ப்போமே
நினைவிருக்கிறதா?

முத்தம் கேட்ட போதெல்லாம்
'அவங்க இருக்காங்க, இவங்க பாக்கிறாங்க'
என்று ஏதேனும் சொல்லித் தப்பிவிட்டு
முதன்முதலாக
என் கவிதை பிரசுரமான அன்று
நீயாகவந்து முத்தமிட்டு
ஓடினாயே
நினைவிருக்கிறதா?

ஒரே ஒரு முறை என்று
என் சிகரெட்டைப் பிடுங்கி
புகைபிடித்து நீ இருமியபோது
பார்த்துச் சிரித்த
அந்த வழிப்போக்கன் முகம்
நினைவிருக்கிறதா?

நீ ஊருக்குக் கிளம்புகையில்
துணிகளைப் பெட்டியில்
அடுக்கிக் கொண்டிருந்தபோது
நான் பார்க்கவில்லை என நினைத்து
உன் மார்புக்குள் செருக்கிக் கொண்ட
என் கைக்குட்டையை
நினைவிருக்கிறதா?

துணி உலர்த்த மாடிக்குப்
போகும் போதெல்லாம்
'ஏண்டி இப்படி ஊருக்கு
கேக்குற மாதிரி கத்திறாய்?'
என்று உன் அம்மா திட்டுவாங்களே
நினைவிருக்கிறதா?

இவற்றையெல்லாம் எப்போதும்
நினைவில் நிறுத்திக் கொள்ள
என்ன செய்யலாம் என யோசித்து
எனக்கு நீ பரிசளித்த பேனாவை
நினைவிருக்கிறதா?

எஸ்.டி. விஜய்மில்டனின்
கொலுசுகள் பேசக்கூடும்
என்ற கவிதைத் தொகுப்பிலிருந்து....
சேகர்...





# 1978 இல் புயலின் கோரத்தை கண்டு அனுபவித்த மட்டக்களப்பு

மழைமேகங்கள் வானத்தை முற்றிலும் வளைத்துப்பிடித்து சூரியனை நாள் முழுவதும் மறைத்து நிற்கின்றன என்றால் வங்காள விரிகுடாவில் தாழமுக்கம் என்கின்ற அறிவிப்பை எதிர்பார்க்கலாம். பெருமழை பெய்து ஓய்ந்திருக்கும். இன்னமும் மழை சிணுங்கிக் கொண்டிருக்கும். இரண்டு மூன்று நாள்களாக சூரியனைக் காண வாய்ப்பு கிடைத்திராது. வெயில் வந்தால் போதும் என்கின்ற உணர்வு பிறக்கும். சூரியன் தென்படமாட்டானா என்கின்ற ஏக்கம் இருக்கும்.

தாழமுக்கம் என்றதும் பலத்த காற்று வீசும். அது நகரும் திசை பற்றிய எதிர்வுகூறல்கள் பல நாட்டு வானிலை அவதான நிலையங்களாலும் விடுக்கப்படும். பேய்க் காற்று இடைக்கிடை வீசும். நொந்து போயிருக்கும் இரண்டொரு பனை, தென்னை மரங்கள் வீதிக்குக் குறுக்கே விழுந்து கிடக்கும். குலை போட்ட வாழைகள் முதிராமலே முறிந்து விடும். கடலைகள் சற்றுக் கடுமையாக ஆர்ப்பரிக்கும். கடலின் ஆரவாரம், இரைச்சல் எல்லாம் மனத்தில் கிலியை மூட்டும்.

இவை புயல் வருவதற்கான அறிகுறிகள்தான். புயல் என்றால் எப்படி இருக்கும் என்பதை 1978 இல் மட்டக்களப்பு மாவட்டம் நன்கு தெரிந்து கொண்டுள்ளது. தமிழ் நாட்டின் கிழக்குக் கரையோரங்கள் அடிக்கடி புயலின் கோரப் பசிக்கு இலக்காவதுண்டு. 1960 களில் வடமராட்சிக் கரையோரமும் புயல் வந்து விளையாடி இருந்தது.

எனது நண்பர் ஒருவர் தனது 1978இன் மட்டக்களப்பு அனுபவங்களைப் பற்றி பல ஆண்டுகள் கழித்து சொல்லிக் கொண்டிருந்தார். அன்று மாலை வேலை முடிந்ததும் அவர் செங்கலடியிலிருந்து மட்டக்களப்பு நோக்கி பஸ்ஸில் வந்து கொண்டிருந்தார். அன்று பகல் முழுவதுமே அவர்கள் சூரிய வெளிச்சத்தைக் கண்டதில்லை. எனவே அந்த மாலைப் பொழுது பற்றிப் பேசத் தேவையில்லை. அது ஒரு மயக்கும் மாலைப் பொழுதாக இருக்கவில்லை. பேய் புகுந்த பொழுதாக அது விளங்கியது. இருளையும் மழைத்தூறலையும் கிழித்துக்கொண்டு அவர்களது பஸ் குழந்தைகள், பெண்கள் உட்படப் பல பயணிகளுடன் ‘ஹெட்லைட்’ வெளிச்சத்தில் வந்து கொண்டிருந்தது. அன்று முழுவதும் காற்று சற்று பலமாகவே வீசிக்கொண்டிருந்தது.

பஸ் வெளியான, சனத்தொகை குறைந்த ஒரு பிராந்தியத்தைக் கடந்து வருகையிலே காற்றுக் கடுமையாகிக் கொண்டது. வாகனத்தைச் செலுத்த இயலாமல் சாரதி அதனை நிறுத்திக்கொண்டார். காற்று மேலும் தீவிரமடைந்தபோது நின்றுகொண்டிருந்த பஸ்வண்டி தளம்பத் தொடங்கியது. நீரில் மிதக்கும் தெப்பம்போல் தரையில் நின்றபடி அது ஆடத் தொடங்கியது. பெண்களும் குழந்தைகளும் பயந்து அலறினார்கள். மழைக்குள் இறங்கவும் இயலாமல் பஸ்ஸிற்குள் இருக்கவும் முடியாமல் அவர்கள் தவித்தார்கள்.

ஆண்கள் சிலர் இறங்கி வேறு வழியின்றி நடக்கலானார்கள். பறந்துவரும் கூரைத் தகடுகள் மற்றும் தகரங்களிடமிருந்து இருளில் கவசமெடுக்க அவர்களுக்குக் கடினமாக இருந்தது. விசுக் விசுக்கென்று அவை தலைக்கு மேலால் பறக்க, தலை தப்பியது தம்பிரான் புண்ணியம் என அவர்கள் குந்திக் கொண்டார்கள்.

தகரங்கள், கூரைத்தகடுகளைக் கண்டுகொண்டால் புயற்காற்றுக்குக் கொண்டாட்டம்தான். மடக்கி முறித்து, உடைத்து எறிந்து, சத்தங்கள் போட்டு சாகசங்கள் புரிய இவை வசதியானவை. 60களில் வடமராட்சியில் ஒரு பாடசாலைத் தகரத்தை பனையின் வட்டுக்குள் காற்று சொருகி இருந்ததைப் பற்றி பலரும் அதிசயமாகப் பேசிக் கொண்டார்கள். ஆனால், அதைவிட எத்தனை மடங்கு ஆச்சரியங்களை சுனாமி இப்பொழுது தந்திருக்கின்றது.

மீண்டும் எழுந்து நடக்கலானார்கள் அவர்கள். வீதியில் மரங்களும் மின்கம்பங்களும் சரிந்து கிடந்தன. வயர்கள் அறுந்து கிடந்தன. மழைவேறு உடலை அசுரவேகத்தில் ஈட்டிகள் கொண்டு குத்தலானது. கடும் காற்றும் குளிரும் எலும்புகளை உறைய வைக்கலாயின.

குந்தி இருப்பதும் நடப்பதுமாக நண்பர் அதிகாலைப் பொழுதில் மட்டக்களப்பு நகர எல்லையை வந்தடைந்தார். கால்களில் கண்ணாடி வெட்டிய காயங்கள் வலியெடுத்தன. இருளில் அகப்பட்டதெல்லாம் இடறியும் மிதித்தும் கடந்து தாண்டிவந்தது தண்டிக்கத் தொடங்கியது.

ஒருவாறு நிம்மதிப் பெருமூச்சு விட்டவாறே மிகுந்த சிரமத்தின் மத்தியில் தான் இருந்த வீட்டை அடையாளம் கண்டு வாசலுக்கு வந்து சேர்ந்தார் அவர். காரணம் அவர் அன்று காலையில்தான் முன்பின் தெரியாத மட்டக்களப்பு பிராந்தியத்திற்கு இடமாற்றலாகியும் வந்திருந்தார்.

இன்னமும் விடியவில்லை. அவரது வீட்டின் மீது வாசலில் நின்றிருந்த பாரிய மரமொன்று சாய்ந்து கொண்டுவிட்டது. வீடு கூரை இல்லாமல் இருந்தது. உள்ளே நுழையும் வழியை மரக்கிளைகள் அடைத்துக் கொண்டன. வீட்டினுள் யாரும் இருப்பதற்கான அறிகுறிகள் தென்படவில்லை. களைப்பினை மன உறுதி வென்று நின்று கொண்டது. இன்றேல் கால்கள் துவண்டு போயிருக்கும்.

போக்கிடம் புரியாமல் முழிப்பதைத் தவிர வேறு வழி இருக்கவில்லை.

◆ ◆ ◆

## உலகை உலுக்கிவரும் இயற்கை அனர்த்தங்கள் 13

*தருவது:– மு.சிவநேசன்*

குளிர் தாங்காது போர்வைக்குள் சுருண்டுகொண்ட இன்னொரு நண்பர் இயலாமல் தன்னைச் சுற்றி பாயையும் சுருட்டிக் கொண்டதாகத் தெரிவித்தார். அவரது வீட்டுக் கூரையை காற்று பிடுங்கிக் கொண்டபோது மழையில் நனைந்த நனைந்து பாயோடு உருண்டு உருண்டு வெளிப்பட்டு வெட்ட வெளிக்கு அங்கப் பிரதட்சணை செய்துகொண்டு வந்து சேர்ந்திருக்கிறார்.

2004 டிசெம்பரிலும் புயல் ஒன்று வரப்போகின்றது என்கின்ற எதிர்பார்ப்பு பரவலாகப் பேசப்பட்டது. புயலுக்கு எதிரான காப்புறுதிகளை மேற்கொள்ளும்படி பல நிறுவனங்கள் தமது கிளைகளுக்கு அறிவித்து இருந்தன. கணக்கு வழக்குகளின் பிரதிகள் பாதுகாப்பாகப் பேணப்பட்டன. கிறிஸ்மஸ் வாழ்த்துக்களுடன் புயலிலிருந்து தப்ப வாழ்த்துக்கள் என்ற வாசகங்கள் உயரதிகாரிகளிடமிருந்து கிடைத்திருக்கின்றன. ஆனாலும் காலநிலை பெரிதாக மப்பும் மந்தாரமாகவுமோ தாழமுக்க அறிகுறிகளுடனோ தென்பட்டு இருக்கவில்லை.

சுனாமி என்ற பெயர் அடிபடாவிட்டாலும் ஏதோ ஒன்று வரப்போவதாக உணரப்பட்டிருக்கிறது. சிலர் இதோ யுத்தம் வெடிக்கிறது, பாரிய உயிரழிவுகள் வரப்போகின்றன என்றெல்லாம் ஆரவாரமாக ஆருடம் கூறி இருக்கிறார்கள். ஏதோ ஒரு துர்க்குறி தென்பட்டு இருக்கிறது என்பது மட்டும் உண்மை.

இப்போது இருட்டு வருகிறது என்கிறார்கள். அதற்கு விளக்கமும் தருகிறார்கள். ஐந்து நாள் சூரிய கிரகணம் என்கிறார்கள். சுனாமி அடிப்பதற்கு ஐந்து நிமிடங்களுக்கு முன்னர் கூட உணராதவர்கள் மீண்டும் சுனாமி வருகிறது என்று நேரம் கணித்து ஆருடம் சொல்லி மக்களை மேலும் மிரட்டுகிறார்கள்.

இருட்டு வரும் போது விளக்கு எரியாதாம். மெழுகுவர்த்தி மட்டும் எரியும் என்கிறார்கள். இது மெழுகுவர்த்தி வியாபாரம் என்கிறார்கள் இன்னொரு சாரார்.

1977நவம்பர் மத்தியில் வங்காள விரிகுடாவில் நிக்கோபார் தீவுகளில் தொடங்கிய தாழமுக்கம் – அக் கடற்பரப்பில் சுழன்று வெப்பமான காற்றழுத்தம் மேற்கு நோக்கி நகரலானதும் இந்தியா விழித்துகொண்டது. இது கரையை அண்மிக்க அண்மிக்க தீவிரமடையலானது. இதற்கான அத்திவாரம் அந்தப் 13ஆம் திகதி ஆழ்கடலில் இடப்பட்டது.

மாரிகாலம் பிறந்துவிட்டால் – அதாவது ஒக்டோபரிலிருந்து டிசெம்பர் வரை – வங்காள விரிகுடாவில் தாழமுக்கம் ஏற்படும் என்பது சர்வசாதாரணமான எதிர்பார்ப்பு. மீனவர்கள் வானொலி கேட்டுத்தான் கடலுக்குச் செல்ல வேண்டிய நிலைமை. கடற் கொந்தளிப்பும் அலைகளின் கோரமும் அவ்வப்போது அதிகரிக்கும்.

1977 நவம்பர் 17 அன்று மணிக்கு 150 கி.மீ. வேகத்தில் கடலில் தீவிரமடைந்த இக் காற்றில் அகப்பட்டு மிதக்கும் பிளாஸ்டிக் தெப்பமாகச் சுழன்றது ‘எம்.வி.ஜகத்ஸ்வாமினி’ என்கின்ற கப்பல். அதன் எடை 18ஆயிரம் தொன்களுக்கும் அதிகமானது. அதிலிருந்த அத்தனைபேரும் ஒருவாறு சமாளித்துக் கொண்டது ஒரு தெய்வச் செயல்தான் என மறுநாள் கப்டன் அனுப்பிய வானொலிச் செய்தி தெரிவித்தது.

நவப்பர் 19இல் அது ஆந்திரக் கரையைத் தொடலானது. அன்று மதியம் கடக்கலானதும் காற்று தீவிரமடைந்தது. குடிசைகளையும் கூரைகளையும் அது பெயர்த்துப்பிடுங்கி வீசிக் கோரத் தாண்டவம் ஆடிக்கொண்டிருந்தது. மழைவேறு தனது தீவிரத்தைக் காட்டிக் கொண்டிருந்தது. பள்ளப்பாலம் மீனவர் கிராமத்து மக்கள் இராமர் கோவிலில் கூடிக்கொண்டனர். கோவிலுக்குள் நுழைய இடமின்றி வெளியே பலர் தவிக்கலானார்கள். காற்றும் மழையும் மணிக்கு மணி அதிகரித்தனவே தவிர குறைந்தபாடில்லை.

காற்றின் கூச்சல் கடுகதிப் புகையிரதங்கள் பல காதருகே இரைவது போலிருந்தது. வெட்ட வெளியில் மழையோடும் காற்றோடும் போராடிப் பலர் தவித்துக் கொண்டார்கள். சாய்கின்ற குடிசைகளுக்கும் பெரு மரங்களுக்கும் மத்தியில் தம்மைக் காப்பாற்ற அவர்கள் போராடிக் கொண்டிருந்தார்கள்.

கல்வீடுகளும் கூரைகளைப் பறிகொடுத்துப் பரிதாபக் கோலம் கொள்ளத் தொடங்கிவிட்டன. கடல் அலைகள் 15அடிவரை உயரக் கிளம்பிக் கரைகளைத் தழுவலாயின. மின் கம்பங்கள் தரையில் மண்டியிடலாயின.

அன்றைய இரவு மட்டும் 300மில்லி மீட்டர் மழை பொழியலானது. இது குஜராத்தின் மாரிகாலத்து மூன்று மாத மழைவீழ்ச்சிக்கு சமனானது. இயற்கை சீறும் போது மரத்தால் விழுந்தவனை மாடேறி மிதித்த கதையாக மழையும் சேர்ந்து விடுகிறது. இத்தகைய மழையின் கொடுமையை சுனாமி அகதிகளும் கிழக்கில் சந்தித்து இருந்தார்கள்.

விடிந்ததும் கண்டவிடமெல்லாம் சடலங்கள் தென்படலாயின. காயமடைந்தவர்களின் அவலக் குரல் வானைப் பிளந்தது. மச்லிபட்டினத்தில் 40தொன் எடைகொண்ட இழுவைப்படகுகள் கடலிலிருந்து ஒரு மைல் தொலைவிற்குள்ளே இழுத்து வரப்பட்டன. மக்கள் தஞ்சமடைந்திருந்த பஞ்சாயத்து சமித்தி கட்டடமொன்று இடிந்து விழுந்ததில் 80பேர் வரையில் மடிந்துகொண்டனர்.

பாதைகள் இல்லை. தொடர்புகள் இல்லை. கட்டடங்கள் இல்லை. தண்ணீர் இல்லை. மின்சாரம் இல்லை என வழமையான ‘இல்லை’கள் விரியலாயின. பத்தாயிரத்துக்கு மேற்பட்ட மக்களும் இலட்சக் கணக்கான கால்நடைகளும் கொல்லப்பட்டிருந் தமையை விடியல் கோடிகாட்டியது.

இனியென்ன அடுத்துவந்த நாள்களில் நிவாரண நடவடிக்கைகள் வழமையான குளறுபடிகள், பதுக்கல்கள் வன்முறைகள், அரசியல் தலையீடுகள், பக்கச் சார்புகள் என மோசமாக நிலைமை மாறலானது. ஊழல் உச்சத் தாண்டவம் ஆடியதாகப் பேசப்பட்டது. இது இந்தியா அல்லவா? பத்திரங்களைப் பெறவும் இழப்புக்களை ஆவணப்படுத்தவும் மக்கள் அலைய வேண்டித்தான் இருந்தது.

பெரும்பாலும் மீனவக் கிராமங்களே பாதிக்கப்பட்டு இருந்தன. கொலரா காய்ச்சல் போன்ற தொற்று நோய்கள் மக்களை மேலும் ஆக்கிரமிக்கலாயின. உதவிகளும் பல கோணங்களிலிருந்தும் குவியலாயின. கடல்நீர் புகுந்ததால் 62ஆயிரம் ஏக்கரில் பயிர்ச் செய்கை பாதிக்கப்பட் டிருந்தது. இவ்வாறான பல கொந்தளிப்பு களை வங்காள விரிகுடா ஆண்டு தோறும் உருவாக்கவே முனைந்து கொண்டிருக்கிறது. தாழமுக்கம் என்றால் சற்று விழிப்பாக இருக்க வேண்டியது முக்கியமானது.

# சிதம்பர ரகசியம்: சின்னத் திரை சீரியலில் முத்திரை பதிக்கும் யாழ்ப்பாணத்து அபிராமி!



அபிராமியின் சொந்த இடம் சண்டிலிப்பாய். ஆரம்பக் கல்வியை சண்டிலிப்பாய் இந்து மகா வித்தியாலயத்திலேயே கற்றார். அப்போதே பரதமும் கற்க ஆரம்பித்தார். பரதம் பற்றிய அறிமுகம் மட்டுமே அப்போது கிடைத்தது. பின்னர் கல்வியின் நிமித்தம் இவரது குடும்பம் யாழ்.நகருக்கு இடம்பெயர்ந்தது. சுண்டிக்குளி மகளிர் கல்லூரியில் இவரது கல்வி தொடர்ந்தது.

அபிராமிக்கு நடனத்துறையில் ஈடுபாடு ஏற்படக்கரணம் 'சினிமா' என்கின்றார். 'தில்லானா மோகனாம்பாள்' படம் இவர்கள் வீட்டில் இருந்தது. அதில் 'மறைந்திருந்து பார்க்கும் மர்மம் என்ன...' என்ற பாடலுக்கு பத்மினியின் நடனம் இவர் மனதைக் கவர்ந்தது. அடிக்கடி அதைப் பார்த்துப் பார்த்துத்தானும் சேர்ந்து அபிநயத்து ஆட ஆரம்பித்தார். தந்தையாரும் ஊக்குவித்தார். வீட்டிற்கு வரும் விருந்தினர்க்கும் ஆடிக்காட்டி 'கைதட்டு' வாங்கினார். அப்போது அவருக்கு 5வயது. அந்தக் கைதட்டலே இன்று அபிராமியை, உலகத் தமிழர்களின் உன்னிப்பான பார்வைக்கு உயர்த்தியது.



தொடர்ந்து அரியாலையில் மைதிலியிடம் பரதம் கற்றார். அவரது நடனப் பள்ளியின் வருடாந்த வைபவத்தில் அபிராமியின் முதலாவது அரங்கப் பிரவேசம் நடந்தது. அன்றுதான் முதன்முதலாகச் சலங்கை கட்டி, அலங்காரம் போட்டு 'தீராத விளையாட்டுப் பிள்ளை......' என்ற பாரதியின் பாடலுக்கு 3 மாணவிகளுடன் சேர்ந்து ஆடினார். இந்த நிகழ்வு யாழ். கனகரத்தினம் கல்லூரியில் நடைபெற்றது.

இவரது தந்தை எஸ். பற்குணம். அரச உயர் அதிகாரியாகக் கடமையாற்றியவர். தாய் மனோன்மணி பற்குணம். மாகாணக் கல்வி அமைச்சில் உதவிக்கல்விப் பணிப்பாளராக கடமையாற்றியவர். இவர்களும் கவிஞர்கள், எழுத்தாளர்கள். கலை இவர் குடும்பத்தோடு பின்னிப் பிணைந்திருந்ததும் இவரது கலை வளர்ச்சிக்குக் காரணமாக இருந்தது.

காலத்தின் கோலத்தால் 1989ஆம் ஆண்டு இவரது குடும்பம் திருகோணமலைக்கு இடம்பெயர்ந்தது. அங்கே புனித மரியாள் கல்லூரியில் இவரது கல்வி தொடர்ந்தது. அப்போது திருமதி மதிவதனி சுதாகரனிடம் 2 வருடங்கள் நடனம் கற்றார். அவர் வெளிநாடு செல்ல திருமதி ரேணுகா செல்வபுத்திரனிடம் நடனம் பயிலத் தொடங்கினார்.

இலைமறை காயாக இருந்த இவரது நடன, நாடகக் கலையையும், பேச்சாற்றலையும் புனித மரியாள் கல்லூரி சரியாக இனம் கண்டது. இவர் கல்லூரி சார்பாக 1991 இல் தமிழ்த்தினப் போட்டியில் பங்கு பற்றினார். அதில் பாடசாலை மட்டம், வலய மட்டம், மாகாண மட்டம் தாண்டி அகில இலங்கை ரீதியில் தங்கப்பதக்கம் பெற்றார். தொடர்ந்தும் 1993,1994 இல் அகில இலங்கை ரீதியில் தங்கப்பதக்கம் பெற்றார். 14 வயதிலேயே அரங்கேற்றமும் நடைபெற்றது. 1996 ஆம் ஆண்டு Governor Award for Best Dancer எனும் விருதும் அரசினால் வழங்கப்பட்டது. க.பொ.த.உயர்தரத்தில் நடனத்தை ஒரு பாடமாகப் பயின்றார். சிறந்த பெறுபேறும் கிடைத்தது.

சிறந்த கல்விப் பெறுபேற்றிற்கும், கிடைத்த விருதுகளுக்காகவும் அரசு இவரிற்கு Iccr (Indian Council of Cultural Relationship) புலமைப்பரிசில் வழங்கியது. அதனால், இந்தியாவிற்குப் பயணமானார்.

ஆரம்பத்தில் சென்னையில் பிரத்தியேகமாக தனஞ்சயன் சாந்தா தம்பதியரிடம் 6 மாதங்கள் பரதம் கற்றார். இவர் பெங்களூர் நாட்டியப் பள்ளியின் அதிபர். ஸ்ரீமதி மாயராவின் வழிகாட்டலில் பயிற்சி பெற்றவர். கல்வியியலாளர் புகழ் பெற்ற 'கதக்' கலைஞர் பத்மஸ்ரீ சம்புராஜனின் கலை வாரிசு.

தமிழக அரசின் விசேட பணிப்பில் பெங்களூரில் Choreography படித்து சிறந்த பெறுபேறுகளைப் பெற்றார். சமகாலத்தில் 200 இற்கு மேற்பட்ட நடன நிகழ்ச்சிகளை, ஆற்றுகைகளை தமிழகத்தில் நிகழ்த்தினார். தொடர்ந்து லோயலாக் கல்லூரியில் Visual Communication படித்தார். பின்னர் குறுந்திரைப் படங்கள் (Documentary films ) தயாரித்தார். அப்போது பாலுமகேந்திரா, உன்னிகிருஷ்ணன் போன்றோருடனான நல்ல தொடர்புகள் அபிராமிக்குக் கிடைத்தது. விளம்பரத்துறையிலும், பத்திரிகைத் துறையிலும் ஈடுபட்டார்.

இப்படியாக இவருக்கு பல கலைஞர்களின் நட்பும், ஆதரவும் கிடைக்கத் தொடங்கியது. இதனால், பல சீரியல்களுக்கும் (சின்னத்திரை) திரைப் படங்களுக்கும் வாய்ப்புக் கிடைத்தும் பெற்றோரின் கட்டுப்பாட்டினால் தவிர்க்க வேண்டியதாயிற்று. 'உன்னைக் கட்டப் போறவரின் அனுமதி கிடைத்தால் கலியாணத்திற்குப் பிறகு இதையெல்லாம் பண்ணு' என்று கூறிவிட்டார்கள்.

பாண்டிச்சேரியில் நாடக நிகழ்வொன்றில் பங்குகொள்ள போயிருந்தார். அங்கு 'அண்ணாமலை' தொடரில் வரும் சூதாடிச் சித்தன் – கார்த்திகேயனின் நட்புக் கிடைத்தது. அதேநேரத்தில் காண்டீபனின் நட்பும் கிடைத்தது. அது காதலானது. (காண்டீபன் நல்ல சிந்தனையாளர், யாழ்ப்பாணத்தவர், இலக்கியம் படிப்பதற்காக 8 வருடங்கள் இந்தியாவில் இருந்தார். தற்போது இலங்கைக் கல்வி அமைச்சில் தொழில் புரிகின்றார். அண்மையில் காண்டீபன் அபிராமி திருமணம் நடைபெற்றது)

கார்த்திகேயனின் நட்பால் 'சிதம்பர ரகசியம்' தொடரில் வாய்ப்புக் கிடைத்தது. காண்டீபனின் அனுமதியும் கிடைத்தது. இவருக்காகவே அதில் பிராமணப் பெண் பாத்திரத்தைத் தயாரிப்பாளர் உருவாக்கியிருந்தார். தற்போது இது 'சன்' ரீ.வி.யில் ஒளிபரப்பாகி வருகிறது.

அதே நேரம் அபிராமி T.T.N. தமிழ் ஒளிபரப்புச் சேவையில் அறிவிப்பாளர் ஆனார். (அதன் மீள் ஒளிபரப்பு தற்போது ரூபவாகினியின் 'ஐ' சனலில் 'அறுசுவை நேரம்' பகுதியில் ஒளிபரப்பாகின்றது.) சென்னையில் 'ஸ்ருஷ்டி' என்ற நடனக் கல்லூரியை ஆரம்பித்தார். M.A படிப்பும் தொடங்கியது. எல்லாம் ஒரே நேரத்தில் நிறைவேறியது.

இப்படிப் பல திறமைகள் இவரிடம் உண்டு என்பது இப்போது கண்கூடாகி உள்ளது. மீண்டும் குடும்ப நிலைமை காரணமாக இலங்கை திரும்பினார். என்றாலும் தான் பங்கு பற்றிய 'சீரியல்களை' இடையில் நிறுத்தி கலைஞர்களின் மனம் கோணாமல் இருப்பதற்காக 'சூட்டிங்' கிற்காக இந்தியாவில் இரண்டு மாதங்களும், இலங்கையில் இரண்டு மாதங்களும் ஆக ஓடித்திரிகிறார். இச்சின்னப் பெண்ணிற்கு கல்யாணக்களை கூட ஆறவில்லை. இலங்கையிலும் பல வாய்ப்புகள் வந்த வண்ணம் இருக்கின்றன. இங்கும் அபிராமி 'பிஸி' ஆகப் போகிறார்.

சந்திப்பு :- **லோ. துஷிகரன்**

---

# ரீ.வி தந்த பாடம்



**கருக் கதை**

காலைப் பொழுது சரியாகப் பத்துமணி கீதா வழக்கம் போல் தொலைக்காட்சி முன் வந்தமர்ந்தாள். கணவர் அலுவலகம் சென்ற பின் பிள்ளைகளையும் அருகிலுள்ள கல்லூரிக்கு அனுப்பினாள். காலை உணவோடு மதிய உணவையும் தயார் செய்துவிடுவாள் கீதா. பாத்திரங்கள் கழுவுவது துணிகளைத் துவைப்பது தான் அவளின் மீதி வேலை. அந்த வேலைகளையும் தாமதமாகத் தான் செய்வாள். ஏனென்றால், தொலைக்காட்சித் தொடர் நாடகங்களைத் தொடர்ந்து பார்ப்பது அவளுக்குப் பிடித்தமான ஒன்று. போதாக்குறைக்கு யாராவது கிடைத்தால் போதும் அவர்கள் சொல்லும் கதைகளோடு இவளும் கதைகளைச் சொல்லி சில வேளைகளில் அழுதும் விடுவாள்.

அன்றும் அவளது கணவன் சியாம் "ஏய் கீதா ஒரேயடியாக ரீ.வி பார்க்காம ஏராளம் கதைப் புத்தகங்கள் இருக்கு. அதுகளைப் படி. உதைப் பார்த்து உன்ர கண்களைக்கெடச் செய்யப்போறீராய்? நேற்றும் இரவு எனக்கும் பிள்ளைகளுக்கும் சாப்பாட்டு மேசையில் சாப்பாட்டைப் போட்டு வைத்துவிட்டு நீர் ரீ.வியோடை இருந்தீர். மூத்தவன் அப்பளம் பொரிச்சு தாங்கம்மா... எனக்கேட்க அரைமணி நேரம் பொறடா செல்லம் வந்து பொரிச்சுத் தாறன் எண்டு சொன்னீர். இப்படியே நீர் ரீ.வியோடை மல்லுக்கட்டினால் பிள்ளைகள் அன்பு, பாசம் அற்றவர்களாக வளரப் போகுதுகள்" என தன் ஆதங்கத்தை மனைவி கீதா மேல் பொரிந்து தள்ளினான்.

அன்று ஞாயிறு விடுமுறை சியாம் தன் உறவினர் வீட்டிற்குக் கீதாவையும் அழைத்துச்சென்றான். உறவினர்களோடு குதூகலமாகக் கதைத்துச் சிரித்துக் கொண்டிருந்த சியாமின் காதருகில் "நேரம் போகப்போகுது கெதியா வாங்க போகணும் என முணுமுணுத்தாள்.

'ஏன் அவசரப்படுகிறீர் கொஞ்சம் பொறும் போவம்.' என சியாம் கூற..." இப்பபோனால்தான் சரியா இருக்கும்... காவியாஞ்சலி பார்க்க வேணும். காவியா சிங்கப்பூருக்கு குழந்தையோடு ஓடினாள். அதற்குப் பின் என்னவோ ஏதோ எனக் கூற... "யார் அந்தக்காவியா?" என அதட்டினான் சியாம். "சீரியலில் வர்ற காவியா" எனக் கூறினாள். "பொலீ ஸ் தேடும் பின் நீதிமன்று செல்வார்கள்" இதுதான் அடுத்தக் கட்டம் என்று சியாம் கிண்டலடிக்க உ றவினர் எல்லோரும் விழுந்து விழுந்து சிரித்தனர். அன்றும் வழமைபோல் கீதா எல்லா. அலுவல்களையும் முடித்த பின் தொலைக்காட்சித் தொடர்களை ரசித்துக்கொண்டிருக்க, அயல் வீட்டுப்பெண் மாலினி "கீதா என்ர கஜாவை ஒருக்காப் பாரும் நான் சந்தைப்பக்கம் போட்டு வாறன்" எனக் கீதாவிடம் தன் ஆறுமாதக் குழந்தையை ஒப்படைத்துவிட்டுச் சென்றாள்.

கீதா குழந்தைக்கு ஒரு பொம்மையை விளையாடக் கொடுத்துவிட்டு ரீ.வி பார்த்துக் கொண்டிருந்தாள். அரை மணிநேரத்துக்குப் பின் சீரியல் முடியவும் மாலினி குழந்தையைப் பொறுப்பேற்க கீதாவை அழைத்தாள் ஹோலில் விளையாடிக் கொண்டிருந்த குழந்தையைக் காணாது கீதா அதிர்ந்தாள்.மாலினியும் அதிர்ச்சியடைந்தவளாக எல்லா இடமும் தேடிக் களைப்புற்றனர். அப்போது நீரில் அமிழுவது போன்ற ஒரு சத்தம் கேட்க இருவரும் ஓடிச்சென்று பார்த்தபோது வீட்டினுள் உள்ள குளியலறை நீர்த் தொட்டியில் குழந்தை தவறி விழ்ந்து மூழ்கிக்கொண்டிருந்தது இருவரும் கடவுளே... எனக் கத்தியபடி "நல்லகாலம் குழந்தையை இறைவன் காப்பாற்றி விட்டான்" எனக் கூறியபடி குழந்தையைத் தூக்கி முத்தமிட்டனர். அன்றிலிருந்து கீதா ரீ.வி சீரியல் பார்ப்பதைக் குறைத்துக்கொண்டு கணவர் சியாமிற்கும் பிள்ளைகளுக்கும் அன்பானவளாக வாழத் தொடங்கினாள்.

**[ஜெயரூபன்]**
கந்தரோடை

# சார்ள்ஸ் – கமிலா திருமணத்தின் சாட்சிகளாகிய புதல்வர்கள்

அண்மைய நாள்களில் உலகளாவிய ரீதியில் பரபரப்பாகப் பேசப்பட்ட விடயங்களில் பிரித்தானியாவின் முடிக்குரிய இளவரசர் சார்ள்ஸ் தமது முன்னாள் காதலியான கமிலா பாக்கரை மறுமணம் செய்து கொள்வது தொடர்பான விடயம் முக்கிய இடத்தை வகித்தது. இவர்களது திருமணம் இம்மாதம் 8ஆம் திகதி இடம்பெறவுள்ளதாக வெளிவந்த அறிவிப்பையடுத்து பிரித்தானியப் பொதுமக்கள் மத்தியிலும் சரி, உலகின் ஏனைய நாடுகளைச் சேர்ந்த பொதுமக்கள் மத்தியிலும் சரி இத் திருமணம் தொடர்பான சாதக பாதகமான விமர்சனங்கள் இடம் பெறலாயின. ஆயினும், காலம் சென்ற புனித போப்பாண்டவரின் நல்லடக்க நிகழ்வில் பிரித்தானிய அரசின் சார்பாக இளவரசர் சார்ள்ஸ் கலந்து கொள்ளவேண்டி நேர்ந்தமையால் திட்டமிட்டபடி இத்திருமணம் கடந்த 8ஆம் திகதியன்று இடம்பெறவில்லை. ஆயினும் அதற்கு ஒரு நாள் கழித்து, கடந்த 9ஆம் திகதி இவர்களது திருமணம் லண்டன் ‘ஹில் கோல்ட்’ மண்டபத்தில் இடம்பெற்றது. இத்திருமணத்தின் மூலம் பிரித்தானியப் பொதுமக்கள் விரும்பினாலும் சரி, விரும்பா விட்டாலும் சரி கமிலா பாக்கர் வேல்ஸ் இளவரசி என்ற பட்டத்துக்கு உரித்து உடையவராக ஆகியுள்ளார்.

பொதுவாகவே தமிழ் இனத்தவர், குறிப்பாக இலங்கைத் தமிழ் மக்கள் – அதிலும் விசேடமாக யாழ்ப்பாணத்தவர்கள் தத்தமது மதத்தினை தமது தாய் மொழியாம் தமிழ் மொழியை மட்டுமன்றி, தமது இனத்துக்கே உரிய தனித்துவமான பண்பாட்டையும் கலாசாரத்தையும் தமது கண்ணெனப் போற்றிப் பாதுகாப்பதில் கடும் சிரத்தை காட்டி வருபவர்களாய் உள்ளனர். அந்த வகையில் தமிழர்களின் பண்பாடு மற்றும் கலாசார விழுமியங்கள் காலத்தால் என்றும் அழியாத தொன்மை வாய்ந்தவை. அது மட்டுமன்றி உலகத்து நாடுகள் பலவற்றையும் சேர்ந்த அறிஞர்கள், புத்திஜீவிகள் மற்றும் வரலாற்று ஆய்வாளர்கள் பலராலும் மதிப்பாகப் பேசப்படும், வியந்து பாராட்டப்படும் பல சிறப்பு அம்சங்களை – கலாசார விழுமியங்களை – தன்னகத்தே கொண்டது தமிழ்க் கலாசாரமாகும்.

தமிழினத்தின் பாரம்பரிய கலாசாரப்படி குடும்ப வாழ்க்கை என்பது ஒருவனும் ஒருத்தியும் சம்பந்தப்பட்டதொன்று. வாழ்க்கையில் கணவன், மனைவி என்ற பந்தத்தில் இணையும் ஒருவனும் ஒருத்தியும் தமது அந்திம காலம் வரை நல்லதோ, கெட்டதோ, இன்பமோ, துன்பமோ, அத்தனையையும் ஒருசேர எதிர்கொண்டு, அனுபவித்து வாழ்க்கையில் இணைபிரியாது வாழக் கடப்பட்டவர்கள். அவர்கள் அப் பந்தத்திலிருந்து இடைநடுவில் விலகிப் பிரிவதை சமூகம் இலேசில் ஜீரணித்துக் கொள்வதில்லை. பொதுவில் அவர்களுக்கு உரிய கௌரவம் வழங்குவதில் தயக்கம் காட்டும்.

தமிழ்க் கலாசாரப்படி வாழ்க்கை என்பது “நினைத்தபடி வாழ்வதல்ல வாழ்க்கை நேர்ந்தவிதம் வாழ்வது தான் வாழ்க்கை” என்ற கோட்பாட்டுக்கு அமைய வாழக் கடப்பாடு கொண்டவர்கள் தாம் என்ற அசையாத நம்பிக்கை தமிழர்களது மனங்களில் நிலைபெற்றுள்ளது. இது இதிகாச காலம் முதல் இன்று வரை தொடரும் புனிதமான உறவுப் பாலமாகும்.

அது 1970 ஆம் ஆண்டு. பிரித்தானிய அரச குடும்பத்துக்குச் சொந்தமான “வின்ஸ்சர்” மாளிகையில் இடம்பெற்ற ‘போலோ’ விளையாட்டுப் போட்டியொன்றின் போதே முடிக்குரிய இளவரசர் சார்ள்ஸ் முதன்முதலில் கமிலா பாக்கரைச் சந்திக்க நேர்ந்தது. அன்று அவர்களிடையே ஆரம்பித்த நட்பு ஐந்து ஆண்டுகள் வரை நட்பு ரீதியிலேயே தொடர்ந்தது. அதன் பின்னர் அவர்களது அன்னியோன்ய நட்பு காதலாக மலர்ந்தபோதிலும் அவர்கள் கணவன் மனைவியாக வாழ்க்கையில் ஒன்றிணைவதற்குப் பல தடைகள் குறுக்கிட்டன. அத்தடைகளை எதிர்த்து நின்று வாழ்க்கையில் ஒன்றிணையும் மன உறுதி அவ்விருவரிடமும் காணப்படவில்லை. அதுவுமன்றி பிரித்தானிய அரச குடும்பத்தின் பாரம்பரிய கட்டுப்பாட்டு நடைமுறைகள் அவர்கள் வாழ்க்கையில் ஒன்றிணைவதற்கு அச் சமயத்தில் பாதகமாக அமைந்திருந்தன. கடைசியில் 1981 ஆம் ஆண்டில் இளவரசர் சார்ள்ஸ் டயானா என்ற அழகியின் கரம் பற்ற நேர்ந்தது. அதேபோன்று கமிலா இராணுவ அதிகாரியான அன்ரு பாக்கர் போல்ஸ் என்பவரின் மனையாளாக நேர்ந்தது.

நேர்ந்த விதம் வாழ்க்கையை வாழ வேண்டுமென்ற தமிழ்ப் பண்பாட்டுக்கு முற்றிலும் மாறாக இளவரசர் சார்ள்ஸ், கமிலா ஆகிய இருவராலும் தமது திருமணத்தின் முன்னரான காதலைக் கைவிடமுடியவில்லை.




கடைசியில் இதன் காரணமாக இவ்விரு குடும்பங்கள் மத்தியிலும் ஒத்துபோகாத நிலையில் சட்டப்படியான விவாகரத்தின் மூலம் இவ்விரு தம்பதியினரும் தத்தமது குடும்ப வாழ்வினின்றும் விலகிக்கொள்ள நேர்ந்தமை வரலாற்றுப் பதிவுகள்.

சார்ள்ஸ் – டயானா திருமண நிகழ்வுகள் அன்று மிகக் கோலாகலமாக, ஆடம்பரமாக இடம்பெற்றன. அந்த வேளையில் ஏறக்குறைய சகல பிரித்தானியப் பிரஜைகளும் அத்திருமணத்தால் பெரிதும் களிப்படைந்தனர். அத் திருமண

**தொகுப்பு: வீயெஸ்ரீ**

நிகழ்வுகளில் அரச குடும்பத்தினர் மற்றும் வெளிநாடுகளின் அரசுத் தலைவர்கள் உட்பட ஏறக்குறைய மூவாயிரத்து ஐந்நூறு பிரமுகர்கள் கலந்துகொண்டனர். உலகின் சகல பாகங்களையும் சேர்ந்த சுமார் 75 கோடிமக்கள் தொலைக்காட்சி மூலம் அத் திருமண நிகழ்வுகளைக் கண்டு களித்தனர்.

ஆனால், அண்மையில் கடந்த 9ஆம் திகதி இடம்பெற்ற சார்ள்ஸ் – கமிலா திருமணத்தின் போது மொத்தமாக 26 பிரமுகர்களே கலந்துகொண்டனர். இவர்களில் இளவரசர் சார்ள்ஸின் பிள்ளைகளான வில்லியம் மற்றும் ஹரி ஆகியோரும் கமிலாவின் பிள்ளைகளான டொம் மற்றும் லோரா ஆகியோரும் அடங்கியமை புதுமையானதொன்றாகும். ஏனையோர் சார்ள்ஸ் மற்றும் கமிலா ஆகியோரின் நெருங்கிய இரத்த உரித்துக்கொண்ட குடும்ப உறுப்பினர்களாக இருந்தபோதிலும், சார்ள்ஸின் பெற்றோரான எலிசபெத் மகாராணியும் பிலிப் கோமகனும் கலந்து கொள்ளாமையும் புதுமையான விடயமாக அமைந்தது.



ஆயினும் , திருமணத்தின் பின்னர் வின்ஸ்சர் மாளிகையிலுள்ள சென்.ஜோர்ஜ் தேவாலயத்தில் இடம்பெற்ற மத வைபவத்தில் எலிசபெத் மகாராணி தமது கணவருடன் கலந்துகொண்டு மணமக்களை வாழ்த்தியது மற்றொரு புதுமையான நிகழ்வாக அமைந்தது.

அது மட்டுமன்றி இத்திருமணத்துக்கான சாட்சிகளாக சார்ள்ஸ் தரப்பில் அவரது மூத்தமகன் வில்லியமும், கமிலா தரப்பில் அவரது ஒரே மகன் டொம்மும் கையெழுத்திட்டமையும் புதுமையானதொரு நிகழ்வாகவே கருதப்பட வேண்டியதொன்றாகும்.

சென். ஜோர்ஜ் தேவாலயத்தில் இடம்பெற்ற மத வழிபாட்டு வைபவத்தையடுத்து வின்ஸ்சர் மாளிகையில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்ட 2ஆயிரம் பேர் வரையிலான பிரமுகர்களில் கமிலாவின் முன்னாள் கணவரான அன்ரு பாக்கர் போல்ஸ்ஸும் கலந்து கொண்டமை வரலாற்றில் புதுமையானதொரு சம்பவமாகப் பதிவாகியது.

34வருடங்களாக காதலர்களாயிருந்த சார்ள்ஸும் கமிலாவும், சார்ள்ஸின் முதல் மனைவியான டயானாவின் மரணத்தின் பின்னர் ஒன்றாகவே சேர்ந்து வாழ்ந்து வந்தது மட்டுமன்றி பொது நிகழ்ச்சிகளிலும் இணைந்தே கலந்து கொண்டனர். இளவரசர் சார்ள்ஸ் – டயானா தம்பதியரின் மணமுறிவுக்குக் கமிலாவே காரணமென்பது பிரித்தானிய பொது மக்கள் பலரது குற்றச் சாட்டாக அமைந்தது.

இளவரசர் சார்ள்ஸ் – கமிலா ஆகியோரின் இந்த இரண்டாவது திருமண சமயத்தில் இளவரசர் சார்ள்ஸ் 56வயது பூர்த்தியடையும் நிலையிலும், கமிலா 57வயது பூர்த்தியடையும் நிலையிலும் இருந்தனர். அந்தவகையில் இளவரசர் சார்ள்ஸைவிட கமிலா ஒரு வயது மூத்தவர் என்பதோடு தமது முதலாவது கணவர் மூலம் தாம் பெற்றெடுத்த மகன் டொம் ஏற்கனவே திருமணமானவர் என்பதால் டொம்மின் மனைவிக்கு மாமியார் என்ற பட்டத்தையும் ஈட்டியிருந்தமை புதுமையானதொரு செய்தியாக அமைகிறது.

1996ஆம் ஆண்டில் , பதினைந்து ஆண்டுகள் தாம்பத்திய வாழ்க்கையின் பின்னர், வாழ்க்கையில் ஒத்துப்போகாத தன்மையால் சார்ள்ஸ் – டயானா தம்பதியர் சட்டப்படி விவாகரத்துப் பெற்றுக்கொண்டனர். ஆனாலும் இதற்கு ஓராண்டு கழித்து 1997ஆம் ஆண்டில் பிரான்ஸ் நாட்டின் தலைநகர் பாரிஸில் வாகன விபத்தொன்றில் டயானா மரணமடைந்த சமயம் தனது புதுக் காதலனான டோடியை மறுமணம் செய்யும் முடிவை டயானா மேற்கொண்டிருந்ததாகக் கூறப்பட்டது. இளவரசர் சார்ள்ஸ் – கமிலா ஆகியோரின் இந்த மறுமணத்தை பெருமளவான பிரித்தானியப் பொது மக்கள் ஆதரித்த போதிலும், இளவரசரின் முதல் மனைவி டயானாவின் மீது அனுதாபம் கொண்டிருந்த மற்றொருசாரார் இளவரசரின் இந்த மறுமண தினத்தன்று இத்திருமணத்துக்குத் தமது எதிர்ப்பை வெளிப்படுத்தும் வகையில் டயானா வாழ்ந்த மாளிகைக்கு அருகில் மலர்வளையங்கள் வைத்து டயானாவை நினைவு கூர்ந்ததாகத் தெரியவந்துள்ளது. அது மட்டுமன்றி இத்திருமணத்துக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வார்த்தைகள் அடங்கிய பதாகைகளையும் அவர்கள் தம் கைகளில் தாங்கியிருந்தனராம். ‘கடைசியில் ரொட் வயிலர் வெற்றிபெற்றார்’ என்ற வாசகம் அடங்கிய பதாதைகள் பலரின் கவனத்தை ஈர்த்ததாகவும், தமது கணவருக்கும் கமிலாவுக்கும் இடையிலான முறையற்ற உறவை கண்டிக்கும் வகையில் ‘ரொட் வயிலர்’ என்ற பெயரிட்டே கமிலாவை டயானா முன்னர் விமர்சித்து வந்ததாகவும் கூறப்படுகிறது “ரொட் வயிலர்’ என்பது அவலட்சணமுடைய நாயொன்றைக் குறிக்கும் அர்த்தம் கொண்டதாகும்.

இதன் காரணமாக இத் திருமண நிகழ்வு இடம்பெற்ற ‘ஹில்கோல்ட்’ மண்டபத்தைச் சுற்றி 500இற்கு மேற்பட்ட ‘ஸ்கொட்லான்ட்’ பொலீஸார் பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட்டனர்.

இத்திருமண வைபவத்தைக் காண பெருமளவிலான பொது மக்கள் கூடுவர் என எதிர்பார்க்கப்பட்ட போதிலும், குறிப்பிட்ட ஒரு தொகையினரே கலந்துகொண்டதாகத் தெரிகிறது. இதன் மூலம் டயானா மீது தற்போதும் பெரும்பாலான பிரித்தானிய பொதுமக்கள் மதிப்பும் மரியாதையும் வைத்திருப்பதாகவும் டயானாவின் குடும்ப வாழ்க்கை சீர்குலைய கமிலாவே காரணமென நம்பி அவர்கள் கமிலா மீது கடும் வெறுப்பு கொண்டுள்ளதாகவும் விமர்சனங்கள் வெளிவந்தவண்ணமுள்ளன.

எது எவ்வாறான போதிலும், இளவரசர் சார்ள்ஸ் –கமிலா தம்பதியர் திருமணத்தின் பின்னர் தமது தேனிலவுக்காக ஸ்கொட்லாந்துக்குப் புறப்பட்டுச் சென்றுள்ளனர்.

பொதுவாக தமிழ்க் கலாசாரப்படி இளவயதில் கணவனை இழந்த இளம் மனைவியும், மனைவியை இழந்த கணவனும் மறுமணம் செய்துகொள்வதை சமூகம் ஆதரிப்பது வழக்கம். ஆயினும் நாகரிக முன்னேற்றம் கண்டுவிட்ட இந்த நாள்களில் வாழ்க்கையில் ஒத்துப் போகாத தம்பதியர் சட்டப்படி பிரிந்து வாழ்வதை சமூகம் மறுதலிப்பதில்லை. ஆயினும் ஏதாவதொரு சந்தர்ப்பத்தில் இளவரசர் சார்ள்ஸ் – கமிலா தம்பதியர் போன்றதொரு நிலையில் தமிழ் மகனொருவர் திருமணமாகிப் பிள்ளைகளுக்குத் தந்தையான நிலையில் ஏதோ ஒரு காரணத்தால் மனைவியை சட்டப்படி மணவிலக்குச் செய்து மற்றொரு பெண்ணை மணந்து அதிலும் அப்பெண்ணும் ஏற்கனவே திருமணம் செய்து குழந்தைகளுக்குத் தாயான பின்னர் ஏதோ ஒரு காரணத்தால் கணவரிடமிருந்து சட்டப்படி விவாகரத்துப் பெற்று இரண்டாவது தடவையாக இவரை மணந்ததன் மூலம் இப்புதிய தம்பதியர்க்குப் பிள்ளைகளும் பிறந்து விட்டால்?...

எமது தமிழ்ச் சமூகம் இவ்வித சந்தர்ப்பமொன்றில் அப்புதிய தம்பதியர்களின் நிலைப்பாட்டை கௌரவமளித்து ஏற்றுக்கொள்ளுமா என்பது கேள்விக்குரியதொன்றே. அத்தகையதொரு நிலையைக் கேலியாக விமர்சிக்கும் விதத்தில் ‘Your Children and my Children are Playing with our Children’ என வர்ணிப்பதுண்டு. “உனது பிள்ளைகளும் எனது பிள்ளைகளும் நம்முடைய பிள்ளைகளுடன் கூடி விளையாடுகிறார்கள்” என விமர்சிப்பதன் மூலம் அப்புதிய தம்பதியரின் முன்னைய செயற்பாட்டை குத்தாமல் குத்திக் காட்டிக்கேலிசெய்வதாக இச்சொற்றொடர் அமைக்கப்பட்டுள்ளது.

ஆயினும் நாகரிகத்தில் முன்னேறிவிட்டதாக மார்தட்டிக்கொள்ளும் மேலை நாட்டாரின் வாழ்க்கையில் இவைபோன்ற சம்பவங்கள் இடம்பெறுவது சர்வசாதாரணமே. ஆனால், இவற்றை முன்னுதாரணமாகக்கொண்டு நாம் நமது பாரம்பரிய கலை, கலாசார, பண்பாட்டு நடைமுறைகளினின்றும் பிறழ முயல்வதை எவ்வகையிலும் எவராலும் எச்சந்தர்ப்பத்திலும் நியாயப்படுத்திக்கொள்ள முடியாதென்பதே யதார்த்தமாகும்.



# விபத்துக்குப் பின் வாகனம் எரிப்பு:



## தடுப்பது சமூகத்தின் பொறுப்பு

குடாநாட்டில் அண்மைக்காலமாக இடம்பெற்றுவருகின்ற வீதி விபத்துகளையடுத்து விபத்துகளில் சம்பந்தப்படுகின்ற வாகனங்கள் அந்த இடத்திலேயே அடித்து நொருக்கப்பட்டும் தீயிட்டுக் கொளுத்தப்பட்டும் வருகின்றன.

பயணிகள் போக்குவரத்துக் சேவையில் ஈடுபட்டு வருகின்ற மினிபஸ்கள் மற்றும் பஸ்கள் தற்செயலாக விபத்துக்குள்ளாக நேரிடுகின்றபோது இந்த சொத்தழிவு ஏற்படுத்தப்படுகின்றது.

விபத்து நடைபெற்றதும் சம்பந்தப்பட்ட சாரதிகள் அச்சம் காரணமாக ஓடித்தலைமறைவாகிவிடுகின்றனர்.

இதனையடுத்து அப்பகுதியில் ஒன்று திரளும் மக்கள் வாகனங்களைச்சேதப்படுத்தியும் தீயிட்டுக் கொளுத்தியும் வருகின்றனர். விபத்துக்கான காரணங்கள் தெரியாத நிலையிலேயே உணர்ச்சிவசப்பட்டு வன்முறையில் இறங்குவது வழக்கமாகிவிட்டது.

விபத்து என்பது தவிர்க்க முடியாத ஒன்று. ஆனால், விபத்து ஏற்பட்டதும் வன்முறைகளின் ஈடுபடும் புதிய கலாசாரம் ஒன்று தற்போது உருவெடுத்துள்ளது.

முகமாலைக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையில் சேவையில் ஈடுபடும் கடுகதி மினிபஸ் ஒன்று கடந்த 16ஆம் திகதி சனிக்கிழமை நண்பகல் முகமாலையிலிருந்து பயணிகளை ஏற்றிக்கொண்டு பருத்தித்துறை வீதியூடாக யாழ்ப்பாணம் நோக்கிச் சென்று கொண்டிருந்தது.

குற்றச் செயல்களுடன் தொடர்புடையவர்கள் எனச் சந்தேகிக்கப்படும் மூவர் கோப்பாய் பொலீஸ் நிலையத்தில் விசாரணைக்காகச் சென்று விட்டு அங்கிருந்து 'எம்.ரி.90' ரக மோட்டார் சைக்கிள் ஒன்றில் மூவரும் ஒன்றாக அவர்களது வீடு நோக்கிப் பயணம் செய்து கொண்டிருந்தனர்.

இருபாலை - கோண்டாவில் வீதி வழியாக வந்த இவர்கள் இருபாலைச் சந்தியைக் கடந்து செல்ல முற்பட்டபோது மினிபஸ்ஸைக் கண்டதும் சந்தியில் வைத்து சடுதியாக மோட்டார் சைக்கிளைத் திருப்பி பருத்தித்துறை - யாழ்ப்பாணம் வீதியூடாகச் செலுத்த முற்பட்டனர் என்று நேரில் கண்டவர்கள் கூறுகின்றனர்.

இதனை அவதானித்த மினிபஸ் சாரதி நிலைதடுமாறிய நிலையில் மோட்டார்சைக்கிளில் வந்தவர்களைக் காப்பாற்றுவதற்காக எடுத்த முயற்சி கைகூடவில்லை.

வீதியோரமாக சைக்கிளில் சென்று கொண்டிருந்த பாதசாரி ஒருவரை மோதியதுடன் மோட்டார் சைக்கிளில் சென்ற மூவரையும் மோதும் நிலை ஏற்பட்டது. இதன்போது மோட்டார் சைக்கிளில் நடுவில் இருந்து பயணம் செய்தவர் மினிபஸ்ஸின் சக்கரத்தினுள் சிக்கிய நிலையில் மீட்கப்பட்டு யாழ்.ஆஸ்பத்திரிக்கு எடுத்து வரப்படும் வழியில் உயிரிழந்தார்.

வீதியால் சென்ற பாதசாரி ஒருவரும் மோட்டார் சைக்கிளில் பயணம் செய்த ஏனைய இருவரும் படுகாயமடைந்தனர். அவர்கள் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகின்றது. மோட்டார்சைக்கிளைச் செலுத்திச் சென்றவர் தலைக்கவசம் அணிந்திருந்த படியால் காயங்களுடன் தப்பினார்.

இச்சம்பவத்தைக் கேள்வியுற்றதும் இறந்த மற்றும் காயமடைந்தவர்களின் உறவினர்கள், பொதுமக்கள் அங்கு கூடி சம்பந்தப்பட்ட மினிபஸ்ஸை அடித்து நொருக்கியதுடன் தீயிட்டும் கொளுத்தினர். மினிபஸ் தீப்பற்றி எரிந்து கொண்டிருந்தபோதே சம்பவ இடத்துக்கு கோப்பாய் பொலீஸார் வந்து சேர்ந்தனர்.

தீயை அணைக்கும் முயற்சியில் யாழ். மாநகரசபையின் தீயணைப்புப் பிரிவினர் ஈடுபட்டனர். எனினும், மினிப்ஸ் முற்றாகி எரிந்து விட்டது. நடப்பவை எல்லாவற்றையும் பொலீஸார் கைகட்டி வேடிக்கை பார்த்துக் கொண்டு நிற்கின்ற நிலையே அங்கு காணப்பட்டது.

இந்த நிலையில் அங்கு வந்த விடுதலைப் புலிகளின் கோப்பாய்ப் பிரதேச அரசியல் துறைப்போராளிகள் வன்முறைகள் அதிகாரிக்காமல் இருப்பதற்குரிய நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

சமாதான சூழல் ஏற்பட்ட பிறகு குடாநாட்டில் வாகனங்கள் பெருகி விட்டன. அவற்றின் நெரிசலைத் தாக்குப் பிடிக்கும் நிலையில் வீதிகள் இல்லை.

நாள்தோறும் வீதி விபத்துக்கள் நடக்கின்றன. போர்க்கால உயிரிழப்புகள் இப்போது விபத்து வடிவில் தொடர்கின்றன.



இருபாலை விபத்தில் மினிபஸ் தீக்கிரையாக்கப்பட்டமை மினிபஸ் சேவையாளர்களுக்கு வேதனையையும், ஆத்திரத்தையும் ஏற்படுத்தி உள்ளது. அவை நியாயமானவையாகவும் இருக்கலாம்.

விபத்துக்கள் கோரமானவையாக இருப்பினும் அதன்பின் இடம்பெறுகின்ற அநீதியான செயல்களை அனுமதிக்கக் கூடாது. விபத்தில் சம்பந்தப்பட்ட வாகனங்களை எரித்து விடுவதால் ஏற்பட்ட இழப்புகள் திரும்பிவந்துவிடப் போவதில்லை. நீதி கிடைத்து விடவும் போவதில்லை.

சட்டம் ஒழுங்கைப் பேணுகின்ற பொலீஸாரின் பலவீனமே இவைபோன்ற வாகனம் எரிப்புச் சம்பவங்களுக்குக் காரணமாகின்றன.

இராணுவ வாகனங்கள் சம்பந்தப்பட்ட சில விபத்துக்களில் பொலீஸார் தடயங்களை மறைக்க முயன்றனர் என்று கிளம்பிய குற்றச்சாட்டுகள் பொதுமக்களின் உணர்வுகள் பொதுவாகவே பொலீஸாருக்கு எதிராகத் திரும்பிவிடுவதற்கு வழிகோலியிருக்கின்றன.

இதனைப் பொலீஸார் கவனத்தில் கொள்ளவேண்டும். பொலீஸார் வந்தால் நிலைமை விபரீதமாகிவிடுமளவுக்கு மக்களின் மனநிலை உள்ளது.

விபத்துகளைக் கட்டுப்படுத்தவும், விபத்தின் பின் சட்டம் ஒழுங்கைப் பேணவும் சமூக சக்திகள் தலையிடவேண்டிய நிலை இதனைலேயே ஏற்பட்டுள்ளது.

இருபாலைச் சம்பவம் தொடர்பாக மினிபஸ் சங்கங்களின் கோபக் குமுறல் நியாயமானதாக இருப்பினும், குடா நாட்டில் மினிபஸ் சாரதிகளின் போக்குப் பற்றிப் பொதுவாகவே மக்களின் குற்றச்சாட்டுகள் நிறையவே உள்ளன.

மினிபஸ்கள் போட்டா போட்டி போட்டு வேகமாக வண்டியை ஓட்டிச் சென்று மோதிய பல சம்பவங்கள் நடைபெற்றுள்ளன.

வீதி ஒழுங்கை மீறும் வகையில் வாகனங்களைச் செலுத்துகிறார்கள் என்ற குற்றச்சாட்டு விரல் தம்மை நோக்கி நீட்டப்பட்டடிருப்பதை மினிபஸ் சங்கங்கள் உணர்ந்து கொள்ளவேண்டும்.

மினிபஸ் சராதிகளுக்குப் போதிய பயிற்சிகள், அறிவுறுத்தல்களை வழங்கி பாதுகாப்பான பயணத்தை உறுதிப்படுத்த சங்கங்கள் முயற்சிக்கவேண்டும் என்ற கருத்து பயணிகள் மத்தியில் உள்ளது.

மினிபஸ் எரிக்கப்பட்டதற்காகப் போராட்டத்தில் இறங்கிய சங்கங்கள் இது விடயத்திலும் கவனம் செலுத்துவது நல்லது.

இதேவேளை-

விபத்துக்குப் பின்னர் வண்டி வாகனங்களை அடித்து நொறுக்கி எரித்து அழிக்கும் செயல்கள் இனியும் தலையெடுக்காமல் பார்த்துக்கொள்வது சமூக அக்கறையுள்ள சகலரினதும் பொறுப்பும் கடமையும் ஆகும்.

விபத்து நடந்தால் வாகனம் தப்பாது என்ற உணர்வு சாரதிகளுக்கு ஓர் எச்சரிக்கையாக அமையும் என்ற காரணத்துக்காக வாகனங்களை அழிப்பதை அனுமதிப்பது சமூகத்தில் வன்முறை மனநிலையை வளர்க்கவே உதவும்.

- எஸ்.பிரபா

